# இலக்கிய காலம்

3032

மு. கோவிந்தசாமி

# இலக்கிய காலம்

(தமிழ் இலக்கிய காலஆராய்ச்சி)

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

மு. கோவிந்தசாமி, B. O. L. (Hons.)
முதல்வர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,
மேலைச்சிவபுரி (புதுக்கோட்டை)

விற்பனை உரிமை:

**பாரி நிலையம்**

59, பிராட்வே — சென்னை 1.

முதற்பதிப்பு—ஜுன் 1956
பதிப்புரிமையுடையது.

என் அறிவுக்கு ஆக்கந்தந்த ஆசிரியர் அனைவரின் நினைவாக.

விலை ரூ. 2—0—0

கோஆபரேடிவ் பிரஸ், புதுக்கோட்டை.

# உள்ளுறை.


| | |
|---|---|
| சுந்தரர் காலம் ... ... ... | 1 |
| நம்பியாண்டார் காலம் ... | 6 |
| சேக்கிழார் காலம் ... ... | 11 |
| திருமங்கையாழ்வார் காலம் ... ... | 15 |
| நம்மாழ்வார் காலம் ... ... | 18 |
| கம்பர் காலம் ... ... ... | 21 |
| பல்லவர் யார் ... ... ... | 30 |
| மணிவாசகர் காலம் ... ... | 35 |
| ஆழ்வார் சிலர் ... ... ... | 39 |
| கல்லாடம், திருமூலர் ... ... | 44 |
| நிகண்டுகள் ... ... ... | 47 |
| செங்குட்டுவன் காலம் ... ... | 49 |
| கரிகாலன் காலம் ... ... ... | 55 |
| திருவள்ளுவர் காலம் ... ... | 60 |
| தொல்காப்பியர் காலம் ... ... | 63 |
| தொல்காப்பியர் யார் ... ... | 67 |
| மணிமேகலை ஆசிரியர் ... ... | 70 |
| சங்கப்பாடற் பழமை ... ... | 75 |
| மௌரியர் படையெடுப்பு ... ... | 78 |
| திருவள்ளுவர் சமயம் ... ... | 83 |
| சில ஆராய்ச்சிக்குறிப்புக்கள் ... ... | 89 |
| உருவறியாக் குடிப்பெயர்கள் ... ... | 94 |
| சேரர் தலைநகர் ... ... ... | 99 |
| சிலம்புகழி நோன்பு ... ... | 109 |
| பட்டினப்பாலைத் தலைவன் கரிகாலனே ... | 112 |
| அகத்தியர் ... ... ... | 120 |


YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

# முன்னுரை

தமிழுணர்ச்சியும் தமிழிலக்கியஅறிவும் நாட்டில் இளைஞரிடையே பெருகிவரக் காண்கிறோம். நுட்பமான ஆராய்ச்சிப்பகுதிகளையும் கடுமையாகஉணரும் காலம் கடந்துவிட்டது. தமிழ்ப் புலமைப் படிப்புக்குமட்டுமன்றி இப்போது பல்கலைக்கழக முன்வகுப்புக் (Pre-University class)கும் இலக்கியவரலாறு பாடம் வைக்கப்படுகின்றது.

வரலாற்றறிவு நாட்டின்விடுதலைக்குமட்டுமன்று உரிமைநிலைத்தற்கும் மிகமிக இன்றியமையாதாம். இலக்கியகாலத்திற்கு இதுவரைத் தமிழ்மாணவர், திரு. சீனிவாசப்பிள்ளை தமிழ் வரலாற்றையே பேராதாரமாகக்கொள்ளுகின்றனர். இவ்வகையில் பிள்ளையவர்கள் செய்த பணி போற்றற்குரியதாம். அவர் நூலில் ஆராயப்படாதவும் முடிவு காணப்படாதவும் மிகப்பல. அவற்றையெடுத்து ஓரளவு முடிவுகாணமுயல்கின்றது இந்நூல். காலஆராய்ச்சிஅறிஞர் பலரும் எழுதியகட்டுரைக் கருத்தினைச்சுருக்கியும், அன்றி அதனுடன் புதியன ஓரிரண்டு சேர்த்து வேறு புதுக்காரணங்களால் முடிபினை வற்புறுத்தியும் அன்றி புதியமுடிவுகாட்டியும் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. ஆராய்ச்சி முடிவுகாண்பது அருமையாதலால், இக்கட்டுரை முடிவுகளில் குறையோ தவறோ இருப்பின் அறிஞர் மேலேஆய்ந்து உண்மைவரைச் செல்வதற்கு இதுதூண்டுதல் என்ற அளவில்மட்டும் அமையட்டும். இந்நூலுக்கு அரிய கருத்துரைவழங்கிய ஆசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கட்கு நன்றி மிக்குடையேன்.

மு. கோவிந்தசாமி

# சிறப்புரை

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்
*தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி,*
**மதுரை.**

திரு. கோவிந்தசாமி அவர்கள் எழுதிய "கால ஆராய்ச்சி" நூலைப்படித்து இன்புறும்பேறு பெற்றேன். சுந்தரர், நம்பியாண்டார்நம்பி, சேக்கிழார், திருமங்கையாழ்வார்முதல் பலருடையகாலங்களை அவ்வப்போது அறிஞர்கள் ஆராய்ந்து காட்டிய கருத்துக்களைத் தொகுத்தும் வகுத்தும் முறைசெய்தும் தெளிவு காண்பதில் இந்நூலாசிரியரின் கருத்து விழைவு கொண்டுள்ளது. இவ்வாறு இலக்கியத்துறையில் சிறப்புற்றுவிளங்கும் சான்றோர்களின் காலமுடிபுகளை ஒருங்கே காண்டற்கு இந்நூல் பெரிதும் துணைசெய்கிறது.

ஒரு நாட்டில் வழங்கும் மொழியின்கண் காணலாகும் இலக்கியங்களின் தோற்றம் அவையெழுந்தகாலத்தின் அரசியல், சமயம் சமுதாயம் முதலியவற்றின் சூழ்நிலையை அடிப்படையாகக்கொண்டது. காலந்தோறும் நிலவிய சூழ்நிலையைப்பற்றியவரலாறு தெளிவாக வரன்முறை பிறழாதநிலையிற் கிடைக்கப்பெறுமாயின் இலக்கிய ஆசிரியர்களின் காலத்தைக் காண்பது அறிவாராய்ச்சிக்கு இன்பமும் உண்மையுணர்தற்கண் ஊக்கமும் தருவதாகும். நம்தமிழ்நாட்டுத் தமிழ் இலக்கியங்களின் கால ஆராய்ச்சிக்குத் துணைபுரியக்கூடிய நிலையில் தமிழ்நாட்டு வரலாறு இதுகாறும் வரன்முறையாக ஒருவராலும் எழுதப்படவில்லை. சங்ககாலம், களப்பிரர் கலக்கம், பல்லவர் காலம், பாண்டியசோழர் காலம், விசயநகர வேந்தர் காலம், முகமதிய மேனாட்டவர்காலம் என

இயன்றுவரும் காலமுறையில் வைத்துத் தமிழ்நாட்டின் அரசியல், சமயம், சமுதாயம் வாணிகம் முதலிய கூறுகளைத் தெளிவுறத்தொகுத்துக்கூறும் வரலாற்று நூல் ஒன்று இல்லாதபோது இக்காலங்களில் தோன்றிய இலக்கிய ஆசிரியர்களின் காலத்தை ஆராய்வது மிகவும் அரியசெயலாகும். மேலேகூறிய காலமுறையில் தோன்றிய ஒருசிலகுறிப்புக்களைக்கொண்டே நமது நாட்டு அரசியல் வரலாறும் இலக்கிய வரலாறும் துண்டு துண்டாக ஆங்காங்கு ஒரொருவரால் காணப்படுகின்றன. அவற்றைக்கொண்டு—முழுதும் நிரம்பாத இக்கருவிகளைக் கொண்டு—ஒன்றை அறுதியிட்டுத் துணிவது என்பது ஆகாத செயல். அவ்வப்போது அறிஞர்கள் ஆராய்ந் துரைக்கும் கருத்துக்களை இந்நூலாசிரியரைப்போன்ற ஆராய்ச்சிஅறிஞர்கள் தொகுத்துத்தருவது காலத் திறற் செய்த பேருதவியாகும்.

இந்நூலின் எழுத்தும் நடையும் பொருள் வெளியீட்டு நெறியும் ஆசிரியரது உள்ளத்தில்நிலவும் உண்மை ஆராய்ச்சி வேட்கையைப் புலப்படுத்தி, "உண்டால் அம்ம உலகம் இன்றும், உண்மை காணும் உள்ளத்து, நன் மாண்புடையோர் உண்மையானே" என்று கூறுமாறு செய்கின்றது.

இன்னோரன்ன இனிய அரிய கருத்தமைந்த நூல்களை எழுதுதற்குத் தமிழகம் இந்நூலாசிரியரைப் பெரிதும் ஊக்கும் என்ற துணிவுடையேன்.

ஔவை. துரைசாமி

# சுந்தரர் காலம்

திரு. சீனிவாசப் பிள்ளையவர்கள் சுந்தரரின் காலத்தை ஒன்பதாம்நூற்றாண்டின் முற்பகுதியாகக் குறிக்கிறார்கள். கி. பி. 862-ல் மதுரையை ஆண்ட வரகுணனைச் சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் குறிக்காமையாலும் சோழனாகிய தன் மருமகனுடன் பாண்டியன் சுந்தரரை எதிர்கொண்டழைக்கும் நிலை கி. பி. 849-ல் பட்டம் பெற்ற விசயாலயனுக்கு முன்பே நிகழக்கூடியதென அவர் கருதுவதாலும், சேரமான் பெருமாளுடன் இவர் கைலைக்குச் சென்றமையின் அக்காலம் கொல்லம் ஆண்டுத் துவக்கம் (கி. பி. 825) எனப் பலர் கூறுவதனை இவர் நம்பு வதாலும் மேற்கண்ட வரகுணன், விசயாலயன் இவர் களுக்கு முற்பட்ட கி. பி. 825-க்கு முன்பின் சுந்தரர் காலம் ஆகலாம் என இவர் முடிவுகட்டுகிறார். எனவே இவர் இக்காலத்தைப் பல்லவதந்திவர்மன் காலத்துடன் இணைப்பதில் வியப்பொன்றுமில்லை. அதற்காதாரமாக இவர் பல்லவர்க்குத் திறைகொடாமன்னர் ஆண்டது அக்காலத்தில்தான் என எடுத்துக்காட்டுகிறார். சோழ-பாண்டியர் மணஉறவும் அப்போது இருந்ததாம்.

ஆனால் இதை மறுத்து சுந்தரர் காலம் 7-ஆம் நூற்றாண் டின் கடைசிப்பகுதி என்பதனை நிறுவப் போதிய சான்றுகள் உள்ளன. திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் தம் *சோழ, பாண்டிய வரலாறுகளில் இம் முடிவுக்கு முற்றும் ஆதரவு காட்டுகிறார்கள்.

---

* பிற்காலச் சோழர்—பண்டாரத்தார் பக்கம் 10.

டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் போன்றவரும் ஒன்பதாம் நூற்ருண்டுக் கொள்கையையே அக்காலத்துக் கொண்டிருந்தனர் என்பது உண்மையே. ஆயினும் '' கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் '' என்ற அடைமொழி, எங்குச் சென்ருலும் தோல்வியேயடைந்த தந்திவர்மனுக்குச் சிறிதும் பொருந்தாதென்பதை நோக்க வேண்டும். எனவே வெற்றிக்குரிய கழற்சிங்கன் என்ற பெயர் அவனுக்கு எவ்வாறு பொருந்தும்? ஆனல் பரமேசுவர வர்மனுக்கு அடுத்த இராசசிம்ம வர்மனே இப் பெருமைகளுக்கு மிகவும் பொருந்தியவனுகிருன். எனவே அவன் காலமாகிய கி. பி. 665—705க்கு உட்பட்ட காலமே சுந்தரர் காலம் எனலாம். நரசிம்ம வர்மனது வெற்றியை யும் அவன் வென்ற நாட்டுப்பரப்பையும் அழியாமல் காத்த பெருமையுடன் சிம்மன் ( இராசசிம்மன் ) என்ற பெயரையும் கொண்டிருந்ததால் இவனுக்கே கழற்சிங்கன் என்பதும் கடல் சூழ்ந்த உலகையெல்லாம் காத்தவன் என்பதும் மிகவும் பொருந்தும். பிள்ளையவர்களே நரசிம்ம வர்மன் காலம் என்பாரும் உளர் என, போதிய சான்றில் லாமையால் அதனை ஒத்துக்கொள்ளாதவர்போலக் கடைசி யில் எழுதுகிருர்.

நரசிம்ம வர்மன் காலத்தில் சோழ, பாண்டிய மண உறவு வரலாற்ருசிரியர்களாலேயே நன்கு குறிக்கப்படு கிறது. பரமேசுவர வர்மன் காலத்தில் இருந்த பாண்டியன் மனைவியாகிய மங்கையர்க்கரசி சோழன் மகளே. எனவே அவ்வுறவு அடுத்த இராசசிம்மன் காலத்திலும் தொடர்ந் திருந்தது என்பதனை மறுக்க ஆதாரமொன்றுமில்லை. எனவே சுந்தரரை இக்காலத்தே சோழன்மகனை மரு மகனுக்கொண்ட பாண்டியன் வரவேற்றிருப்பான் என்பதில் பொருத்தம் உண்டு.

தம் கொள்கைக்காதாரமாகவே வைணவன் என்று குறிக்கப்படும் நந்திவர்மனைச் சைவனுகலாம் என்று பிள்ளையவர்கள் கொள்கிருர்கள். ஆனுல் காஞ்சி கைலாய நாதர் கோயிலைச் சமைத்த மிகச் சிறந்த பரம்பரைச் சைவனுகிய இராசசிம்மனைச் சைவனென்று கொள்வதில் இடர்ப்பாடே இல்லை. அதுமட்டுமன்றி இராசசிம்மனுக்குப் பிறகு பல்லவர் குலமும் அவரது சமயமும் தடுமாறின. வைணவம் மேலோங்கிவிடுகிறது. அடுத்த நந்திவர்மன் காலத்தில் திருமங்கையாழ்வார் சிறப்புறுகிருர். எனவே சம்பந்தர் அப்பர் காலமாகிய கி பி. 650—60 இவற்றைத் தொடர்ந்து சுந்தரர் இருந்தார் என்பதைவிட்டு சுமார் 150 ஆண்டுகள் பின்தள்ளி அவரை வாழவைத்து அவர் சைவமும் அன்று சிறந்திருந்தது என்று காட்டுவது எவ்வளவும் பொருந்தாதாம். திருத்தொண்டத்தொகையிலும் இதற்குச் சான்றிருப்பதாகத் தோன்றவில்லை. வரலாற்றுண்மையுடனேயே தொண்டத்தொகை பாடப் பெற்றுள்ளது. அதில் நின்றசீர்நெடுமாறன், மங்கையர்க்கரசி முதலியோரைக் குறித்த உடனேயே தம் பெற்ருேர் பெயரைக் குறிக்கிருர். எனவே இவர் ஏழாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த நின்றசீர் நெடுமாறனுக்கு மிக அண்மையிலேயே வாழ்ந்திருக்க வேண்டும். இன்றேல் நெடுமாறற்கும் 825-க்கும் இடைப்பட்ட 150 ஆண்டுகளில் வாழ்ந்த அடியார்களைக் குறிக்கவேண்டும். தொகையில் அப்படி ஒன்றும் குறிப்பில்லை. எனவே அவ்விடைக் காலத்தே சைவ அடியார்களே இல்லை எனலாமா? மேலும் தொகையில் ஒரே காலத்திலும், அண்மைக் காலத்திலும் வாழ்ந்தவர்களை வரலாற்றுண்மையுடன் எழுதும் நோக்கு இருந்துள்ளது. அப்பருக்குப் பிறகு சம்பந்தரையும், நெடுமாறற்குப் பிறகு கழற்சிங்கரையும் அவ்வக் காலத்தே உடன் வாழ்ந்த அப்பூதி அடிகளையும் மங்கையர்க்கரசியாரையும் முறையாகக் குறிப்பதிலிருந்து தொகையை

வரலாறெனவே கொள்ளலாம். மேலும் தொடர்பாகவே அடியார் வரலாற்றைத் தொகை குறிப்பிடுவதால் சுந்தரர் 150 ஆண்டு இடையிட்டு வாழ்ந்திருந்தார் என்பதைவிடத் தொடர்ந்து வாழ்ந்தார் என்பதே மற்ற சான்றுகளுடன் பொருந்துவதாகின்றது.

சேரமான் பெருமாளும் சுந்தரரும் கைலைக்குச் சென்றது 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியேயென (கோச்சடையன் ரணதீரன் காலம் கி. பி. 670—710) பண்டாரத்தார் அவர்கள் தெளிவாக்குகிறார்கள். கொல்லம் ஆண்டுத் துவக்கம், அத்துவக்கம் கி. பி. 825 என்பனவெல்லாம் கற்பனையை நம்பி ஏற்பட்ட முடிவுகளாம். மேலும் தேவார அகச்சான்றாக நான்கைந்து பதிகங்களில் பஞ்சம் ஒன்று ஏற்பட்டிருப்பதையும் அதனால் சுந்தரரும் அவரது புதுமண மனைவியும் வருத்தப்பட்டதையும் காண்கிறோம். 'வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே'—இராசசிம்மன் காலத்தில் கொடியதொரு பஞ்சம் ஏற்பட்டதாக வரலாற்றாசிரியர் தெளிவாகக் குறிப்பது இப்பஞ்சத்தையேயாதல் வேண்டும். இது 2 அல்லது 3 ஆண்டுகளே இருந்ததாம். இக்காலம் கி. பி. 686—689 ஆகும். இதில் சுந்தரர் மணந்த மனைவியும் அடிபட்டதால் அப்போது சுந்தரருக்குக் குறைந்தது பதினைந்து ஆண்டுகளாவது இருக்கலாம். அவர் 18 ஆண்டுகளே வாழ்ந்தார் எனத் தெரிவதால் அவர் காலம் கி. பி. 692-க்கு மேல்இல்லை என்பதனை உறுதியாகக் கொள்ளலாம்.

எனவே பெரிய புராணத்தில் கழற்சிங்க நாயனார் எனக் குறிக்கப் பெறுபவர் இராசசிம்மனே எனவும் அதற்கு முன்பு அண்மையிலேயே குறிக்கப்பெறும் நரசிங்க முனையரையர் நரசிம்மவர்மன் ஆகலாம் ("தெம் முனைகள் பல கடந்த" என்ற குறிப்பிருப்பதால்) எனவும்

இருவருக்கும் இடைப்படக் குறிக்கப்படும் ஐயடிகள் காடவர்கோனே இராசசிம்மனுக்குத் தந்தையான பரமேசுவரவர்மன் ஆகலாம் எனவும் கொள்ள இடமுண்டு ஐயடிகள் 15 ஆண்டுகளே ஆண்டதாகவும் அதற்குள்ளேயே மகனிடத்தில் ஆட்சியை ஒப்படைத்து சிவத்தொண்டில் மனம் செலுத்தியதாகவும் புராணம் கூறுகிறது *வரலாற்றிலும் பரமேசுவர வர்மன் ஆட்சி சுருங்கியதாகவும் தம் ஆட்சி முடியுமுன்னரே மகனுக்குப் பட்டம் கட்டியதாகவும் குறிப்பு இருக்கிறது. இப்பரமேசுவரன் காலத்தில்தான் நின்ற சீர் நெடுமாறர் வாழ்ந்திருக்கிறார். அவரே வரலாற்றில் குறிக்கப்பெறும் மங்கையர்க்கரசியின் மணாளனாகிய கூன் பாண்டியர் என்பதில் ஐயமில்லை. வரலாற்றில் அவருக்கடுத்த இராசசிம்மன் காலத்தில் சுந்தரர் வாழ்ந்திருக்கவேண்டுமென்று சொல்வது அப்பர், சம்பந்தர் காலத்திற்கு அடுத்ததாகச் சுந்தரரை வைப்பதற்கும் மிகமிகப் பொருத்தமாம்.

எனவே சுந்தரர் காலம் பல்லவ இராசசிம்மன் காலமன்றி (665—705) தந்திவர்மன் II-ன் காலமன்று எனத் தெளிவாகக் கொள்ளலாம்.

———

* பல்லவர் வரலாறு — Dr. ராஜமாணிக்கனார் 159 P.

# நம்பியாண்டார் காலம்

முதற்பராந்தகன், ஆதித்த கரிகாலன், இராசராசன் I, குலோத்துங்கன் I, இவருள் யார் காலத்தே நம்பி வாழ்ந்தார் என்பது கேள்வி. திருமுறைகண்ட கால வாராய்ச்சியில் குலோத்துங்கன் கங்கைகொண்ட சோழ புரத்திலிருந்துகொண்டு தொலைவிலுள்ள தஞ்சைத் தியாகேசரைப் பணிந்தான் என்பது பொருந்தாது, அவனுக்குத் தில்லையே அண்மைத்து எனவும், அவன் காலத்திற்கு முன்பே பதிகம் ஓத ஏற்பாடு செய்யும் பழக்க மிருந்ததாகக் கல்வெட்டுரைப்பதால் அவன் காலத்தே திருமுறை வகுபட்டதென்பது பொருந்தாதெனவும் கூறுகிறார் திரு. சீனிவாச பிள்ளை. மேலும் இராசராசனே தஞ்சைக் கோயிலில் தியாகேசர்க்குரிய ஏற்பாடுகளை யெல்லாம் ஏற்படுத்தி வழிபட்டான். அவன் சிவபாத சேகரன் ஆகவே அவனே திருமுறை வகுத்தவன் என்கிறார். அவர் கருத்துப்படியே அவனுக்கு முன்பும் பதிகம் பாட ஏற்பாடு செய்தமை கல்வெட்டாலறிதல் அவராலேயே கூறப்படுதலால், திருமுறை வகுப்பு இராசராசன் காலத் திற்கு முந்தியேயாக வேண்டும். மேலும் திருமுறைகண்ட புராணத்தில் சோழன் 'ஆதித்தன்' என்ற பெயரினன்; அப்பெயர் இராசராசனுக்கில்லை. அபயன் என்ற பெயரும், சிவபக்தியும் அனைத்துச் சோழருக்கும் பொதுவே. மற்றும் தில்லையம்பலத்திற்குப் பொன்வேய்ந்த குறிப்பே இவனுக் கில்லை. தில்லைப்பணி செய்தான் என்று பிறர் கூறுவதனை யும் திரு. பண்டாரத்தாரவர்கள் வன்மையாக மறுக்கிறார்.

இனிப் பதிகம் பாடுதற்குரிய கல்வெட்டுக்கள் உத்தம சோழன் காலத்தும் 9-ஆம் நூற்ருண்டிலும் ஏற்பட்டிருப் பதாகத் திரு. சீனிவாசப்பிள்ளையே கூறுவதால் அக் காலத்திய "ஆதித்தப் பெயர்ச் சோழர்களை" ஆராய வேண்டும். *அப்படியாராய்ந்தே ஆதித்த கரிகாலன் (பராந்தகன் II-இன் மகன்) என ஒருவர் கூறுகிருர். அவனும் அம்பலப் பொன் வேய்ந்த குறிப்பொன்றுமில்லை. மற்றவை பொருந்துவதால் இதனையும் செய்ததாகக் கொள்ளலாம் என்கிருர்; அது பொருந்தாது. எல்லாம் பொருந்தும் ஒருவனிருக்கையில் மற்றவரை ஏன் கொள்ள வேண்டும்?

அவனே முதற் பராந்தகன் மகன் இராசாதித்தன். ஆதித்தனென்றே திருமுறைகண்ட புராணத்தில் கூறப் படுவதால், இராசாதித்தனென இவன் அடைபுணர்த் துரைக்கப்படலால் ஆகாதென்னுமிவர் ஆதித்த கரிகாலன் என இவர் கூறும் சோழன் பின்னொரு தனிப்பெயர் (கரிகாலன்) சேர்த்துத்தானே அழைக்கப்படுகிருனென உணரவில்லை போலும்! பெயரை இவ்வாறு சுருக்கி யெழுதும் பழக்கம் இரு வழக்கிலுமுண்டு; இதனை வீணே மறுக்கவேண்டியதில்லை. மற்ற காரணங்களோடு பொருத்தியே முடிவு காணவேண்டும்.

ஆதித்தன் அம்பலம் பொன் வேய்ந்தவன்; ஈழம் வென்றவன்; இராசராச குலசேகரன் என்ற பட்டப் பெயரினன்; நம்பி காலத்தேயே இறந்தவன்; கொடும்பாளூர் உறவுடையவன் — இக்குறிப்புக்களே திரு முறை கண்ட சோழனைப்பற்றித் திருமுறைகண்ட புராணம் கூறுவது.

---

* சோமசுந்தர தேசிகர். செந்தமிழ் தொ. 26 — 365.

இராசாதித்தன் கொடும்பாளூர் வேளான் மகளை மணந்தவன். இவன் தந்தை பராந்தகன் மனைவியருள் ஒருத்தியும் அவ்வூர் மன்னன் மகளே. இவன் தந்தை முதல் பராந்தகனது வெற்றிகளில் இவனுக்குப் பெரும் பங்குண்டு. ஈழத்திற்கு ஒருபடையனுப்பப்பட்டதெனவே சோழ வரலாற்றில் பண்டாரத்தார் கூறுகிறார். அப்படை இவன் தலைமையிலேயே பராந்தகனால் அனுப்பப்பட்டிருக்கவேண்டும். இவன் சிறந்த வீரன் எனப் பட்டம் பெற்றவன். தலைமை தாங்கிப் போரை நடத்தியுள்ளான். அத்தகையதொரு 'தக்கோலப் போரிலேயே' இராட்டிரகூடரை எதிர்த்து இவன் யானைமீதிருந்துயிர்விட்டான். எனவே நம்பி காலத்திலேயே இவன் இறந்திருக்கிறானென்ற குறிப்பும் உண்மையாகிறது. இவன் தலைமையாயிருந்து தன் தந்தைக்குக் கொண்டுவந்த பாண்டி மண்டல, ஈழ வெற்றியைத் தன்னதாகவே கூறிக்கொள்கிறான்; தவறில்லை. தன் காரணமாக தந்தைக்குற்றது தனக்கும் உரியதுதானே? மேலும் இவன் சோழ வடபகுதியைக் கண்காணித்துக் கொள்ளும்பொருட்டு திருமுனைப்பாடி திருநாமநல்லூரிலிருந்தாளுமாறு இவன் தந்தையால் அமைக்கப்பட்டிருக்கிறான். அப்போது இவன் ஒரு தனியரசனாகவே அரசன் போன்றே ஆண்டு தன் பெயரால் கல்வெட்டேற்படுத்தி, கோயில் கட்டித் தானம் செய்திருக்கிறான். இவன் மனைவியும் சேனாபதியருங்கூட கோயில், அறமுதலியவற்றை யேற்படுத்தியுள்ளனர். திருச்செந்துறைக்கோயில் இவன் மனைவி ஆதித்தபிடாரியால் கட்டப்பட்டது. நாமநல்லூர் இராசாதித்தபுரம் எனவும், அவ்வூர்க்கோயில் இராசாதித்தேச்சுரம் எனவும் வழங்குமளவு இவனாட்சி சிறந்திருந்தது.

எனவே இவன் சிறந்த சிவபக்தன் இவன் தந்தையாலானதாக் குறிக்கப்படும் 'அம்பலம் பொன் வேய்ந்தமை' இவன் கண்காணிப்பிலேயே நடந்திருக்க வேண்டும்.

தில்லைக்குத் தஞ்சையைவிட திருநாமநல்லூரே மிக அண்மையாம். தந்தையின் பொன்னெல்லாம் இவன் தலைமையில் சென்ற படை கொணர்ந்ததாதலால் இவனே பொன் வேய்ந்தானெனக் கொண்டதிலும் தவறில்லை. பதிகம் பாடிய கல்வெட்டு 9-ஆம் நூற்றுண்டாகக் கருதும் படியொன்றுள்ளதெனப் பிள்ளையவர்கள் கூறுவது இவனுக்குப் பின்பேற்பட்டதையேயாதல் வேண்டும். இவன் தந்தை பராந்தகன் காலமாய 907—953-க்கு உரியனவான். அதிலும் 949 கி. பியில் தக்கோலப் போரில் இறந்துள்ளான். எனவே இவன் காலத்தேதான் திருமுறை வகுப்பு நடைபெற்றிருக்கவேண்டும். இவன் தில்லைக்கருகேயிருந்தாண்டமையால் பொன் வேய்தலும், திருமுறை காண்டலும் எளிதாயிற்றெனல் வேண்டும். இவன் "குலகேசரி" எனப்படுகிருன். எனவே குலத்தில் கேசரி போன்றவன் சேகரன் எனவும் தக்கவனன்றே? இவன் தந்தை பராந்தகன், இராசராசன் அதாவது இராசர்க்கு அரசன். இவனும் அப்பெயரைக் கொளற்குரியன்தானே? இராசராசன் என்பதும் சோழர்க்குப் பொதுப் பெயரேயாம்; பேரரசர்க்குரியது. தன் தந்தையுடன் ஒப்பப் பேரரசனுகவே வாழ்ந்துமுள்ளான்.

ஆனல் திரு. பண்டாரத்தாரவர்கள் திருமுறை கண்டவன் முதல் ஆதித்தியனென்கிருர். ஆனல் கொங்கிற் கனகமணிந்து என்பதற்கேற்ப இவன் கொங்கரை வெல்லவில்லை. முதல் பராந்தகனே வென்றுள்ளான் என இவரே கூறுகிருர். எனினும் ஆதித்தனென்ற பெயரொற்றுமையால் இவனைக் குறிக்கிருர். இதைவிட கொங்கை வென்றவன் முதல் பராந்தகன். அப்பொன்னைக்கொண்டு அவன் மகன் பொன்னம்பலம் வேய்ந்தான் என்பது எவ்வளவு பொருத்தம்! பராந்தகன் ஆட்சித் தொடக்கத்தேயே கொங்கு நாட்டில் அவன் கல்வெட்டுள்ளதை பண்டாரத்தார் ஐயுறுகிருர். அது அவன் தந்தை ஆதித்தன்

காலத்தேயே தன் தலைமையில் படைசெலுத்தி வென்றதாயிருக்கலாம். எனவே வெற்றியைத் தன்னதாக்கிக் கொண்டிருக்கலாம்.

மற்றும் முதல் ஆதித்தன் ஈழத்தை வென்றதாகவே செய்தியில்லை. எனவே முதல் பராந்தகன் மகன் இராசாதித்தனே பாண்டியனையும், ஈழத்தையும் வென்ற பின் நாமநல்லூரில் ஆளத்தொடங்கியுள்ளான். பாண்டிய வெற்றி 931-ல் எனக்கொள்ளலாமென்பர் பண்டாரத்தார். நல்லூர் ஏற்பாடு 936-ல். எனவே இதற்கும் இவன் இறந்த 949-க்குமிடையே 'பொன் வேய்வு' நிகழ்ந்திருக்கலாம் (கி. பி. 936—949). அன்றி ஈழ வெற்றி 949-க்கு முன் எனப்படுகிறது. அப்படியானால் 942—949 இக்காலத்தே திருமுறை கண்டிருக்கலாம்.

---

# சேக்கிழார் காலம்

சேக்கிழார் காலத்தை கோபிநாத ராவ் போன்ருேர் (செந்தமிழில்) முதல் குலோத்துங்கன் காலம் என்றும்' சிலர் (நீலகண்ட சாஸ்திரியார் போன்ருேர்) இரண்டாம் குலோத்துங்கன் காலம் எனவும் குறிக்கின்றனர். பிற்பட்ட இருவரும் கொண்ட கொள்கைக்குள்ளேயே நம் ஆராய்ச்சி உள்ளது. இரண்டாம் குலோத்துங்கன் காலமே முற்றும் சேக்கிழார் காலத்துடன் பொருந்துவதாகின்றது.

அபயன், அநபாயன் என்ற சிறப்புப் பெயர்கள் இவனுக்கும் தெளிவாக வழங்கப்பட்டுள்ளன. மற்றும் "பொன்மலைப் புலிநின்ருேங்க புதுமலையிடித்துப் போற்றும் அந்நெறி வழியேயாக அயல் வழி அடைத்த சோழன்" என்ற வரிகளிலுள்ள சிறப்பு இவன் காலத்து நிகழ்ச்சியைக் குறிப்பதாகத் தெளியலாம். இவ்வரிகளுக்கு பொருத்தமும், சத்துமற்ற வெற்றுரை கூறுவோர் பலர். புதுமலையிடித்து அயல்வழி அடைத்தலுக்கு, பொன்மலையில் புலியைப் பொறிக்க புதிய மலைகளை இடித்துச் சுருக்கு வழி கண்டதாகவும், மற்ற பழைய வழிகளை அடைத்து விட்டதாகவும் கொள்ளும் உரையெல்லாம் வெற்றுரையெனத் தெற்றெனத் தெளியலாம். மேருவில் புலி பொறிப்பவனுக்கு புதுவழியைக் காண்பதோ, பழைய வழிகளை அடைப்பதோ ஒரு வேலை! பின்பு வரும் "போற்றும் அந்நெறி வழியாக" என்ற தொடருக்கு இதனுல் பொருள் வற்றிப்போகிறது. எனவே புதுமலை இடித்துப்போற்றும் நெறியென்பது மேருவைத் தவிர்த்த மற்ற மலைகளைக்

கடந்து அடையும் கைலாயத்தே சிவனைப்போற்றும் அச் சைவ நெறியே மக்களுக்கு உண்மைச் சமய வழியாக்கி, அயல் வழிகளாகிய வைணவம் முதலிய மதங்களைப் பரப்பாமல் தடுத்தது என்பதேயாம் இதற்கேற்ப, மற்ற குலோத்துங்கர்களின் காலத்தில் அன்றி இவன் காலத்தே சமயப்பொறை தவறி, தில்லை கோவிந்தராஜப் பெருமானைக் கடலில் எடுத்து எறிந்திருக்கிறான். இதனைத் தொடர்ந்து பிற்காலத்தே ராமானுஜரைத் துன்புறுத்திய கொடுமையையும் காண்கிறோம். கிராமக் கோயில்களில் சிவனுக்கு சமமாக விஷ்ணு பூஜை நடத்தினால் வரும் தண்டனைபற்றியும் கல்வெட்டுள்ளது. (கி. பி 1160 — திருக்கடையூர் கல்வெட்டு) ஆராய்ச்சி வல்லுநர் இதற்கு சமாதானம் கூறினும் அது பொருந்துவதாகத் தோன்றவில்லை. எனவே "அந்நெறி வழியேயாக அயல் வழி அடைத்த சோழன்" (எறிபத்தர் புராணம். 2 பெ. பு.) இவனைத் தவிர வேறில்லையாம்.

மற்றும் இவனே தில்லைப் பேரம்பலத்திற்கும் பொன் வேய்ந்துள்ளான். இது பெரிய புராணத்தும், பண்டாரத்தார் சோழ வரலாற்றுள்ளும் ஒப்புக்கொள்ளப் படும் ஒரு செய்தியாம். ஆனால் பண்டாரத்தார் கூறுகிறபடி மூன்றும் குலோத்துங்கனும் பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்திருப்பினும், பெரிய புராணத்தும், குலோத்துங்கன் உலாவிலும் பறையறைந்து உரைக்கப்படும் ஒரு நிகழ்ச்சி இரண்டாம் குலோத்துங்கனுக்கே உரியதாகிறது. அது "மன்னு திருத்தில்லை நகர் மணிவீதி அணிவிளக்கும் சென்னிநீடு அநபாயன், தில்லைத் திருவெல்லை பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறு" என்ற தொடர்களால் குறிக்கப்படும் தில்லைத் திருவீதியை அணி செய்ததாகும். இதனைக் குலோத்துங்கன் உலாவும் "முனைவன் திருவீதி ஈரிரண்டும் தேவர்கோன் மூதூர் பெருவீதி நாணப்

பிறக்கி" என முழங்குகின்றது. இத்தனிச் சிறப்பைப் பண்டாரத்தாரவர்களும் ஒப்புகின்றார்கள். மேலும் திருக் காமக்கோட்டம் கட்டியதும் இவன் சிறப்பாகும். "இமயப் பெருங்கடவுட் குன்றம் மறக்கும்படி செல்வம் மல்கச் சிறக்கும் திருகாமக்கோட்டம் திகழ்வித்து" என்ற உலாத்தொடர்கள் இவன் உமாதேவி இமயமலையை மறக் கும்படி மலைபோன்ற சிகரங்களை (கோபுரங்கள்) எழுப்பிப் போற்றியதனைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். (புதுமலை இடித்துப்போற்றும்" என்ற தொடருக்கு)

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தை மறுப்பதற்கு பண்டாரத்தார் கூறும் ஒரே காரணம் அக்காலத்திய ஒட்டக்கூத்தன் பரணி. களவழி, இறையனார் அகப் பொருள் முதலியவற்றைப் புகழ்ந்து, பெரிய புராணத்தைப் புகழவில்லையென்பதேயாகும். ஆனால் கூத்தரின் மனப்போக்கையும் புலமையையும் ஆராய்ந்தால் இத்தடை ஒருவாறு நீங்கும். சேக்கிழார் சோழனிடம் அமைச்சராகிய பெருந்தகுதியில் இருந்தவர், கூத்தர் அவைப் புலவர். எனவே சமதகுதியுடையாரிடம் ஏற்படும் பொறாமை கூத்தரிடம் இருந்ததெனலாம். இதற்குக் கம்பர் புகழேந்தியுடன் இணைத்துக்கூறும் கதைகளின் குறிப்பே சாலும். மேலும் சமகாலத்திலுள்ளவரை மதிப்பதும் ஒரு அருமையாம். கூத்தர், பிரபந்தங்களாகிய சிற்றிலக்கியங்களையே இயற்றும் தகுதிபெற்று, ஆனால் அரசனிடம் பெருமதிப்புப் பெற்றவர். அவர்க்கு எதிரே பெரிய புராணம்போன்ற பேரிலக்கியத்தை இயற்றும் சேக்கிழார் இருந்தது அவருக்குப் பொறுக்கவில்லை யாகலாம். இன்னும் கூத்தர் உலா, பரணி போன்ற மனிதரையே போற்றும் நூல்களைப் பாடியவர். (தக்க

யாகப் பரணி பாடியது பிறர் நெருக்கியதாலும், உயிரைக் காத்துக்கொள்ளவுமன்றி, மனம் விரும்பியன்று என்பது கதையால் நன்கு விளங்கும்) சேக்கிழாரோ சிந்தாமணி போன்ற மனிதனைப் பாடும் நூலைப் படிக்காமல் பெரிய புராணத்தை இயற்றி, கடவுள் இலக்கியத்தைப் படிக்கும் படி மன்னர்களைத் தூண்டிய புரட்சி கண்டவர். எனவே இத்தகைய அடிப்படைக் கொள்கை, தகுதி பற்றிய வேறுபாடுகளால் ஏற்பட்ட காழ்ப்பே கூத்தர் சேக்கிழாரைப் புகழாமைக்குக் காரணமாகலாம். இங்ஙனம் தில்லைவீதி சமைத்தது, பிற சமய வளர்ச்சியைத் தடுத்ததுபோன்ற நிகழ்ச்சிகளைக்கொண்டு சேக்கிழார் காலம் குலோத்துங்கன் I அல்லது III-ன் காலமன்று எனவும், இரண்டாம் குலோத்துங்கன் காலமே எனவும் துணியவேண்டியுள்ளது.

---

# திருமங்கையாழ்வார் காலம்

இவ்வாழ்வாரது காலம் II-ஆம் நந்திவர்மனதிலிருந்து III-ஆம் நந்திவர்மனது வரைப் பேசப்படுகிறது. வைரமேகன் என்ற பெயரைக்கொண்டே இவ்வாராய்ச்சியைத் தெளிவாக்க வேண்டியுள்ளது. "தொண்டையர்கோன் வணங்கு நீண்முடிமாலை வைரமேகன் தன் புகழ் தன்வலி சூழ்ந்த கச்சி" என்ற திருமங்கைப்பாடலில் "வைரமேகன்" என்பது பல்லவனையே குறிப்பதாயும், இரட்ட அரசனையே குறிப்பதாயும் கொள்வோர் இருதரத்தார்.

கல்வெட்டின்படி தந்திவர்மன், இரட்ட அரசன் தந்திதுர்கன் ஆய இருவர்க்கும் வைரமேகன் என்ற சிறப்புப் பெயர் உள்ளது. அவ்வகையில் இரட்டவரசன் தந்திதுர்கனை இப்பெயர் குறிப்பதாக் கொள்ளினும் குறையில்லை. அவன் காஞ்சியை நந்தி II-ஐத் தோற்கடித்து வென்றதாக் கல்வெட்டு கூறுகின்றது. பின்பும் நந்தி ஆண்டுண்மையின் இருவர்க்கும் மணவுறவேற்பட்டிருக்கலாம் *ரேவதியை நந்தி மணந்து பிறந்த மகனுக்குத் தந்திவர்மனெனப் பாட்டன் பெயரையிட்டிருக்கலாமென ஆராய்ச்சியாளர் கருதுவர்.

தொண்டையர்கோன் வணங்குமென்ற தொடர் ஒருவரையே குறிப்பதாக் கொள்வதைவிட இருவர்க்குக் கொளலே பொருத்தமாகிறது. அதன் போக்குணர்த்துவதும் அஃதே; பல்லவன் தன் நகரைப் பேசுகையில் அவன்

* Dr. ராஜமாணிக்கனூர் பல்லவர் வரலாறு.

வலியும், புகழும் உங்கு சூழ்தல் இயல்பு; விதந்து பேச வேண்டாம். விதந்து பேசியதால் அங்கு அயலானையே பேசியதாக்கோடலே பொருத்தம். அவ்வகையில் மாமனு ராகிய தந்திதுர்கனது வலியும், புகழும் சூழ்ந்த கச்சியெ னில் மருமகனுய நந்திக்கு அதனுல் இழுக்கென்னே? இல்லை யேனும் உண்மையைக் கூறினுரெனில் அதனுல் நந்திக்கு இழிவு நினைத்ததாமா?

அன்றி வைரமேகனுகிய தந்திவர்மப் பல்லவனெருவனேயே உணர்த்திற்ருக் கொளினும் குறையில்லை. ஆழ்வார் தந்திதுர்கன் காலத்தரானவர். இப்போது பலர் கருதுமாறு நந்தி II காலத்தும், தந்தி காலத்தும் ஆய இரு காலத்தும் வாழ்ந்தார் ஆழ்வார் எனக்கொளலும், அவ்வாறு 'கொளலே' பொருத்தமாயும் தோன்றுகிறது. அப்போதே "பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழற்பல்லவன்" என்ற சொல்லும் தந்திக்குப் பொருந்தாதாகையால், II நந்திக்காகிறது. நந்தி காலத்தே 'வணங்கும்' என்று கூறிய ஆழ்வார் தந்திவர்மன் காலத்தே நந்தியைப்பற்றி "நந்தி பணி செய்த, பல்லவர்கோன் பணிந்த" எனச் சென்ற காலத்தால் கூறினுர் என்பதும் பொருந்தி வருகின்றது. எனவே இரண்டாம் நந்தியை விட்டுவிடவோ மூன்ரும் நந்தி காலத்திற்குப் போகவோ வேண்டாம். ஈரரசு பட்டிருந்ததாக தொண்டையர்கோன் வணங்கும் என்ற பாடலுக்குப் பொருள்கண்ட பெரியவாச்சான்பிள்ளை குறிப்பிட்டிருத்தற்கும் பொருத்தந்தெரிகின்றது. திரு சீனிவாசப் பிள்ளையவர்கள் ஈரரசை இருமதமெனக்கொண்டு சைவத்திலிருந்து வைணவத்திற்குப் பல்லவன் வந்ததாக் கொண்டு இடர்ப்படவேண்டியதில்லை. II-ஆம் நந்தி காலத்தும், தந்தி வர்மன் காலத்தும் இவர்கள் இரட்ட அரசருக்குத் தோற்றுண்மையால் தோல்விக்குப் பின்னும் இவர்களே ஆண்டு கொண்டிருத்தலைக்கண்ட மக்கட்குக்

காஞ்சியரசன், பல்லவனா இரட்டனா எனப் புலப்படவில்லை. நந்தி, தந்திதுர்க இரட்டன் மகளை மணந்தும், தந்தி இரட்டர்க்குப் பணிந்திருப்பதாக்கூறி மக்களை சமாதானஞ் செய்தும், தொடர்ந்தாண்டமையால் அக்காலம் ஈரரசு பட்டதாய்த் தோன்றியதியல்பே.

மங்கை பதிகங்களில் பல்லவன் பாண்டியனை வென்றதாகக் கூறுவதெல்லாம் நந்தி II-க்குப் பொருந்துகின்றது. தந்தி சைவப்பற்றுடனிருந்தாலும் அவன் சிறந்த வைணவனென்பதற்கையமில்லை. இவன் காஞ்சி கோவிலுக்குப் பொற்குடமளித்தமையும் இவன்கால முத்தரையனொருவன் திருவாலத்தூர் மலையைக் குடைந்து பெருமாள் கோயிலொன்றெடுத்தமையும் கல்வெட்டு கூறுகின்றது.

எனவே ஆழ்வார் நந்தி II, தந்தி இருவர் காலத்திலும் வாழ்ந்தவர் என்பது மிகப் பொருத்தமாத் தோன்றுகிறது. அதாவது எட்டாம் நூற்றுண்டின் இறுதியிலும், ஒன்பதாம் நூற்றுண்டுத் தொடக்கத்தும் வாழ்ந்தவராவர். நந்தி II 710 — 775; தந்திவர்மன் 775 — 825.

---

# நம்மாழ்வார் காலம்

சீவரமங்கையையும், வரகுண மங்கையையும் நம்மாழ்வார் பாடியுள்ளார். இஃதொன்றே இவர் கால ஆராய்ச்சிக்குப் போதிய சான்றும். திரு. கோபிநாதராவும், வெங்கோபராவும் இதனை வெளியிட்டுள்ளனர். வரகுண மங்கையென அவ்வூர் அம்மனின் பெயர் ஊருக்காயிருக்கலாம்; வரகுணனுக்குப் பிறகுதான் அவ்வூர்க்காகியிருக்க வேண்டுமென்பதில்லை என வாதிக்கின்றனர்.

மங்கை என்பது இயற்பெயரன்றெனவும், மங்கலமென்பதன் மரூஉவெனவும் உத்தரகோச மங்கை, சத்தமங்கை, பட்டமங்கையென மற்ற ஊர்களும் இவ்வாறே மருவியுள்ளவெனவும் கல்வெட்டைக்கொண்டே வெங்கோபராவ் அவர்கள் (செந்தமிழ்-தொ. 3. பக். 228) மெய்ப்பித்துள்ளார்கள். பாண்டிய ஜடிலவர்மன் வேலங்குடி என்ற ஊரை சீவரமங்கலமென மாற்றி மகதப்பிராமணனொருவனுக்குத் தானங்கொடுத்திருக்கிறான். அது சீவரமங்கையென மாறிய பின் ஆழ்வார் பாடியுள்ளார். அவரே வரகுண மங்கையையும் பாடியுள்ளார். எனவே வரகுணன் காலமாய கி. பி. 800—830-க்குப் பிற்பட்டவராகலாம், அதுவும் மங்கலமென்பது "மங்கை" யாதற்கு 50, 100 ஆண்டுகள் ஆயினும் கி. பி. 950-க்கு முன்பாகலாம் ஆழ்வார் காலமெனக் கொள்வதில் வேறு பொருத்தமும் உண்டு.

கம்பர் சடகோபரந்தாதி பாடியுள்ளார். எப்படியும் அவரிடம் சடகோபரைப் பாடினையோவென்ற கேள்வி பிறந்தது. எனவே அவர் காலத்திற்கு முன்பாகலா மெனவும், அதுவும் ஆழ்வாரின் புகழ் பரவிக்கொண்டிருந்த அண்மைக் காலமாகவேயாகலாமெனவும் தெரிகின்றது. கம்பர் காலம் திரு பண்டாரத்தார் கருதுவதுபோன்று உத்தம சோழன் காலமாகவும் கொள்வதற்குண்டு. தொண்டை நாடும், திருமுனைப்பாடி நாடும் முதலாதித்தன் காலத்திலிருந்தே பல்லவரிடமிருந்து விடுபட்ட பின், சோழர்க்கடங்காது தனியாட்சி செய்ய முயன்றுள்ளன. கம்பர் கதையில் வரும் சடையப்ப வள்ளலும், புதுவைச் சேதிராயரும் தனிக் குறுநில மன்னராகவே ஆண்டுள்ளனர். பின்பு இரண்டாம் பராந்தகன் காலத்திலேயே தெளிவாக அவை சோழர்க்குட்படுகின்றன. அதுவரைப் போரிட்டு வெல்லினும் அதனையடக்கியடிப் படுத்த 5-6 ஆண்டுகளாயிருக்கின்றன. சோழர்க்கு மீண்டும் மீறி வெளியே போய்விடும். சோழர், பாணர், கங்கர், வைதும்பர், இராட்டிரகூடர் என எத்தனையோ பிரிவினர் 850—950 இவ்வாண்டுகட்குள் இத்திருமுனைப் பாடியை ஆண்டுள்ளனர்.—'இரவுநண்பகலாகினென்'— (தமிழ் நாவலர் சரிதை பார்க்க) இது சோழர் வரலாற்றை நுணுகிப் படித்தால் தெரியவரும். இத்திருமுனைப்பாடியே சடையப்பர்க்கும், சேதிராயருக்கும் உரிய நாடாகும். முதலில் இவர்களிடம் வளர்ந்த கம்பர் பின்பு சோழனிடம் போகிறார். அவன் திருமுனைப்பாடியைத் தெளிவாகப் பிடித்த இரண்டாம் பராந்தகன் அல்லது அவன் மகன் உத்தம சோழனாகவேண்டும். கம்பர் காலத்திலேயே அவரை வெறுத்த சோழன் இறந்துவிடுகிறான். புலவரொருவரால் சபிக்கப்பட்டு சோழ வமீசமே அழிந்து

விட்டதாகக் கதை கூறுகிறது. உத்தமருடன் அவன் கிளை முடிந்து சோழரின் இரண்டாங்கிளை தொடங்குகிறது. எனவே இக்காலம் கம்பர் வாழ்ந்ததெனக் கோடலில் தவறில்லை. உத்தம சோழன் காலம் 970—985 எனவே, ஆழ்வார் புகழ் பரவ 70, 80 ஆண்டுகளாயினும், அவர் காலம் 9-ஆம் நூற்றாண்டின் கடைசிக் காலமாகவோ அன்றி 10-ஆம் நூற்றாண்டின் முதற்காலமாகவோ கொள்ளலாம்.

---

# கம்பர் காலம்

கம்பர் காலம், 9-ஆம் நூற்றாண்டெனவும் 12-ஆம் நூற்றாண்டெனவும் மிக வேறுபட்ட இரண்டு கொள்கைகளுள் அல்லற்படுகின்றது. திரு. சதாசிவ பண்டாரத்தார் போன்றோர் முதற்கொள்கையுடன்பட்டு உத்தம சோழன் காலமாகலாமெனக் கருதுகின்றனர். இரண்டாங் கொள்கையினர் திரு. மு. இராகவையங்கார் உட்பட மிகப் பலராவர்.

இவற்றுள் 10-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாய கொள்கையே மிகப் பொருத்தமாகத் தோன்றுகிறது. 12-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் (சேக்கிழார் கூத்தர்) தம்காலக் குறிப்பிற்குரிய அரசர் பெயரையோ, நிகழ்ச்சியையோ தெளிவுபடக் குறித்துள்ளனர். அரசர்களும் நிலைத்த அரசியலையுடைய, பெயர் குறிக்கத்தக்க பேரரசர்களாயிருந்தனர். 'அநபாயன்' எனச் சேக்கிழாரும், குலோத்துங்கன் விக்கிரமனெனக் கூத்தரும் குறித்தற்குரிய பெயரும், புகழும் அரசர்க்கிருந்தது. கம்பர் இக்காலத்தவராயின் கண்டிப்பாகச் சோழனொருவன் பெயரைக் குறித்திருப்பார். சடையப்ப வள்ளலையும், தியாகமாவிநோதனெனச் சோழனையும் குறித்தவர் அவன் பெயர் குறிக்கத்தக்க பெருமையுடையனாயின் அவனையும் குறிக்கத் தவறியிரார். எனவே சோழன் பெயர் குறிக்கத்தக்கவனல்லன் எனவும், ஏதோ பொதுவாகச் "சோழன்" எனவே குறிக்கத்தக்கவனாயிருந்தானெனவுந் தோன்றுகிறது. இந்நிலை 9-ஆம் நூற்றாண்டுப்

பக்கமாக வாழ்ந்தோராகக் கருதப்படும் அனைவர்க்கும் (நம்மாழ்வார், மணிவாசகர்) அக்காலத்திற்கும் உண்மையறிகிறோம். எனவே மற்ற காரணங்கள் பொருந்தி வருமாயின் கம்பரை இக்காலத்தவராக் கொள்ளல் பொருத்தமேயாம்.

தமிழ் நாவலர் சரிதை, சோழ மண்டல சதகம் முதலியவற்றின் மூலம் வரும் கம்பர் கதைகளின் உட்கருத்தைக் கொண்டு பார்க்கினும் அவர்கால அரசியல்நிலை 9-ஆம் நூற்றாண்டுக்குப் பொருந்தியதாகவே தோன்றுகிறது.

சடையப்பர் காலத்தே திருக்கோவலூர், புதுவைப் பகுதிகள் (தொண்டை நாடு) சோழர்க்குட்பட்டதாத் தோன்றவில்லை. சோழர் கல்வெட்டொன்றும் அங்குக் காணாமையுடன் ஆந்திரவரசரின் கல்வெட்டுக்கள் அங்கு காணப்படுவதால் அக்காலத்தே ஆந்திரர் செல்வாக்கு அங்கிருந்தமையறிகிறோம். 12-ஆம் நூற்றாண்டில் இப் பிரதேசத்தில் சோழர் கல்வெட்டுக்கள் மிகுதியாக் காணப் படுகின்றன. சோழன், மூவேந்தர் ஆகியோர்க்கப்பாலேயே அவர்கட்கடங்காமல், ஆளும் அவர்களும் பொருமையடையும் செல்வச் சீருடனும், ஆட்சியுடனும் சடையப்பரும், புதுவைத் திரிகர்த்தராயரும் அன்று அப்பிரதேசத்தை ஆண்டுள்ளனரெனவுணர்கிறோம். 'ராயர்' என்ற பெயரால் அவர் ஆந்திரவரசர்க்கடங்கியவரெனவுணரலாம். வாணராயர் என்போர் (தெலுங்கர்) சோழர்க்கடங்காமலும், சிலகாலம் அடங்கியும், தொண்டைமண்டலத்தை விசயாலயன், ஆதித்தன் காலத்தே ஆண்டுள்ளனர் கம்பர் பாடல்களில் தெலுங்குச் சொற்கள் பல பயில்கின்றன. மேலும் கம்பரின் முதல் நூல்கள் சிலவற்றை சடையப்பரும், ராயரும் தனியாகவே அரங்கேற்றக் கேட்டுள்ளனர். சோழன் அவ்வவையில் இருந்ததாக் காணோம். மேலும் மூவேந்தர்க்கும் சடையப்பர் விருந்திட்டுள்ளார்;

சோழரைவிடச் சிறந்த ஆடையும், முத்தும் தம்மிடமிருந்தமையை அவர்களிடம் பெருமிதத்துடன்காட்டி அவர்களைத் தலைகுனிய வைத்துள்ளார்; இந்நிலை அவர்கட்கடங்கியவொருவரால் செய்ய முடியாததாம்.

மற்றும் இக்காலம் சோழரது நிலையற்ற, சாதாரணமான ஆட்சி காலமாகவே இருந்திருக்கவேண்டும். கூத்தர், குலோத்துங்கன் காலத்தே ஒரு வள்ளலுக்கும் சிற்றரசனுக்கும் இந்நிலை ஏற்பட முடியாதன்றோ? எனவே இது விசயாலயன், ஆதித்தன் போன்ற அவ்வளவு சிறவாத சோழர் காலமெனக் கருதினால் அது பொருத்தமேயாம்.

வள்ளலுக்கு சரராமன் என்ற பெயருமுண்டு. முதற்பராந்தகனுக்கு இலங்கையை வென்றபின் சங்கிரராமராகவன் எனப் பெயர். ராமனுக்கு இக்காலத்தே ஈச்சுரங்கள் ஏற்பட்டன. ஆதித்தன் கோதண்டராமன் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டான். எனவே வெற்றிப் பெயராகக் 'கோதண்டராமன்' எனக் கொண்டதால் ராமன் கதையும், பேரும் தமிழகத்தில் பரவியகாலமெனத் தெரிகிறது எனவே கம்பர்க்கு இராமகதை எழுதத் தூண்டுதல் ஏற்பட்டிருக்கலாம். இக்காலத்தே இவ்வகைப் பெயர்கள் பிரதியாக வழங்கத் தொடங்கியுள்ளன. ஆதித்தன் என்ற பெயரும் இக்காலத்தே வழங்கி வந்துள்ளது. கம்பர் தந்தை ஆதித்தன் என்பதன்றோ? கண்டராதித்தன், இராசாதித்தன், ஆதித்தன் பிடாரி ஆதித்த கரிகாலன் போன்றவை இக்காலப் பெயர்கள். முதற்பராந்தகன் 'சங்கிரராமராகவன்' என்ற சிறப்புப் பெயரினன்.

மற்றும் நம்மாழ்வாரையொட்டியவராகவே கம்பர் வாழ்ந்திருக்க வேண்டும். ஆழ்வார் 9-ஆம் நூற்றுண்டினராக் கருதப்படுகிறார். கம்பர் சடகோபரந்தாதி பாடியுள்ளார். இவ்வந்தாதி பாடிய வரலாறு இவரை ஆழ்வா

ரின் அண்மைக்காலத்தவர் என்பதனையுணர்த்தும். 'சடகோபரைப் பாடினுயோ' எனப் பெருமான் கேட்க வேண்டிய தேவையென்ன? மற்ற ஆழ்வார் பெயர் பரவியிருக்க அண்மையினராய சடகோபர் பெயரைப் பரப்பவே பரந்தாமன் அவ்வாறு கேட்டிருக்க வேண்டும். மிகத் தொலைக்காலமாயின் 'சடகோபரை' மட்டும் குறித்து அவரைப் பாடினுயோவெனக் கேட்க வேண்டியதில்லையன்ருே? பெரும்பாலும் யார்க்கும் புகழ்ப்பிரபந்தம் பாடுதல் அவர் பேர் பரவியுள்ள அவரது அண்மைக் காலத்திற்ருனே?—'குலோத்துங்கன் உலா' போன்று.

'இரவு நண்பகலாகிலென்' என்ற தமிழ் நாவலர் சரிதைப் பாடலில் "மன்னர் போகிலென் ஆகிலென், சோழ மண்டல வாழ்க்கை காரணமாகவே, கருது செம்பொனின் அம்பலத்திலோர் கடவுள் நின்று நடிக்குமே" என்ற குறிப்பு சோழவாட்சியில் நிலையற்றதோர் காலத்தைக் குறிப்பதாகவே கொள்ளலாம். தொண்டை நாட்டை பல்லவர், பாணர், கங்கர், இராட்டிரகூடர், சோழர் ஆகியோர் மாறிமாறி ஆளவும், உரிமை கொண்டாடவும் போட்டியிட்ட காலமிதுவெனச் *சோழர் வரலாறுணர்த்துகிறது. அப்போது சடையப்பர் போன்ற வள்ளல்கள் நாட்டை வாழ்வித்ததாக அப்பாடல் கூறுகின்றது. இவ்வரசியல் நிலை 12-ஆம் நூற்ருண்டு என்பதைவிட நிலையற்ற விசயாலயன், ஆதித்தன் கால நிலையென்பதே பொருத்தமாகின்றது. சோழவாட்சி நிலையற்ற காலத்தே சடையப்பரிடம் வளர்ந்து, பின் சடையப்பருக்குப் பின்போ, அன்றி சோழவாட்சி தொண்டைமண்டலத்தே பரவிய பின்போ கம்பர் சோழனிடம் தொடர்பு கொள்கிருர். தனக்குச் சமமாக நின்ற சடையப்பரைப்

---

* பிற்காலச் சோழர் — பண்டாரத்தார்
I பராந்தகன் 42, 43........

போற்றியதாலான பொருமையாலோ வைணவத்தை வெறுக்காவிடினும் தான்போற்றும் சைவத்தைவிட்டு (சைவம் ஓங்கும் நிலை இக்காலம்) வைணவத்தைப் பரப்பும் இராமகாதையைப் பாடியதாலோ, அடிக்கடி போர் முதலியவற்றுள் ஈடுபட்டுப் புலவரைப் புரக்கவியலாததாலோ சோழர்க்கும் கம்பர்க்கும் பொருமையும், பிணக்கும் ஏற்படுகிறது. அப்போதுதான் வளர்ந்து கொண்டிருக்கும் தன் பெருமையையே பாடாமல், புலவர் பொது நோக்குடன் பாண்டியன் மற்றும் தமிழகத்திற்கு வடக்கேயிருந்தவன் (அடைப்பைக் கொடுத்தவன்) ஆகியவரையெல்லாம் அகமகிழப் போற்றியது சோழனுக்குப் பிடிக்காமலிருக்கலாம்.

எனவே கம்பரை யானைக்காலிலிட்டும், அம்பையெய்தும் கொல்லும்மனம் சோழனுக்கேற்பட்டிருக்கலாம். கம்பரும் அவன் குலம் அழியும்படி 'அழிசொல்' (சாபம்) கூறியிருக்கலாம். இதற்கேற்பவே இராசராசனுக்கு முற்பட்ட சோழர் கிளையிரண்டுனுள் கம்பர் காலத்தேயாண்ட அக்கிளை உத்தமசோழனுடன் அழிந்துவிடுகிறது.

வாரங்கல் பிரதாபருத்திரனிடம் சென்று அவனைத் தனக்கு அடைக்காய் மடித்துத் தரும் ஏவல் கொண்டாரென்றகுறிப்பே காலத்தில் முரண்பாட்டைத் தருகின்றது நாவலர் சரிதை, இறையனாரகப்பொருளுரையில் அடிப்படை நிகழ்ச்சியையன்றி நேரே அப்பெயரையும், நிகழ்ச்சியையும் ஆதாரமாகக் கொள்வதற்கில்லை அவ்வகையில் தமிழகத்திற்கே வடக்கேயாண்டவொருவன். அவ்வரசன் எனக்கோடலே பொருத்தம். அவ்வகையில் கங்கர், பாணஅரசருள் பிரதாபருத்திரன் போன்று சைவப்பெயர்களைக் கொண்டாண்டுள்ளனர். சிவமாறன் அவருட் சிறந்தவன். இப்பரம்பரையுள் ஒருவனாகக் கம்பருக்கேவல்பூண்ட வரசனிருந்திருக்கலாம்

எனவே "சகாப்தம் எண்ணூற்றேழின்மேல் சடையன் வாழ்வு நண்ணிய, பண்ணிய இராமகாதை" என்று குறிப்பு பொருத்தமாகவே தோன்றுகிறது. எண்ணூற்றேழின்மேல் என ஒரு நினைவாகவே காலம் குறிக்கப் பெற்றிருப்பதால் அதன்மேல் 25 அல்லது 50 ஆண்டுகள் செல்லவும் அங்கு இடமிருக்கிறது. எனவே எப்படியும் கம்பர் காலம் 10-ஆம் நூற்றுண்டிற்குப் பிறகு போகாதெனவும் 9-ம் நூற்றுண்டின் பிற்பகுதியும் 10-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியுமாகலாமெனவும் கொள்ள இடமுண்டு.

*திரு. சேஷையரவர்களும் இக்காலத்திற்குப் பேராதரவு தருகிருர்கள் நாதமுனிகள் 9-ஆம் நூற்றுண்டினர் எனவும் அவர் தலைமையில் அரங்கேறிய இராமாயணத்தின் கம்பர் அக்காலத்தவராகிருர் எனவும் அவர் கூறுகிருர். மேலும் "கொல்லிமலையுடைய கொற்றவா" என்ற கம்பரது பாடல்குறிப்பில் கொல்லி கொங்கர்க்குரித்தெனவும் அதனை ஆதித்தன்வென்றுனெனவும் எனவே அவனது 9-ஆம் நூற்றுண்டே கம்பர் காலம் எனவும் அவர் திண்ணமாக் கூறுகிருர்.

ஹர்ஷன் காலத்திலிருந்து சூரியன் வழிபாடு வழங்கி, காலப்போக்கில் சூரியன் இராமன் குல முதல்வனுக்கப்பட்டு வந்துள்ளான் எனவே இராமன் பெயருடன் சூரியன் பெயரும் ஆதித்தன்-மக்கட்கு வழங்கலாயிற்று. குப்தர் காலமுதல் வடநாட்டிலும் வைணவும் மேலோங்கத் தொடங்கியது 8 9-ஆம் நூற்றுண்டுகளை இந்தியாவிலேயே "இராமன் யுகம்" என்னலாம் இராமனைப்பற்றிய காவியச் சிற்பக் கலைகள் இப்போது மலிந்தன வடவரசர் பரம்பரைபல வைணவத்தைப் பரப்பியுள்ளன பிற்காலத்தில் வைணவம் காணப்படினும் அது திருமால்

* V. G. Seshiyer செக். 25 — 3.9.

வைணவம். ஆனால் 7, 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் இராமன் வைணவம். 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கன்னோசியசோவர்மன் "ராமப்யுதய" என்ற காவியத்தையும், பவபூதி, மஹாவீர (ராம) சரிதத்தையும் எழுதினர். புகழ்பெற்ற வடமொழி உத்தரராம சரிதம் இக்காலத்தேதான் தோன்றியது. தென்னிந்தியாவின் கிழக்கே கம்போடியாவில் 6-ஆம் நூற்றாண்டிலும், ஜாவாவில் இதே 9-ஆம் நூற்றாண்டிலும் ராமாயணச் சிற்பங்கள் ஏற்பட்டன. ஜாவாவில் கம்பர் போன்றே வால்மீகியிலிருந்து சிறிது வேறுபட்ட ராமாயணமொன்று இயற்றப்பட்டது. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இராசசேகரன் என்ற கவி பாலராமாயணத்தையும், 7-ஆம் நூற்றாண்டில் பட்டிகவியென்பார் "இராவண வதத்"தையும் எழுதினர். சளுக்கியர்கள் ஆஜந்தாவில் "இராவணன் கைலாயந்தூக்குவதை"யும் விருபாட்சர் கோவிலில் இராமாயண நிகழ்ச்சிகளையும் செதுக்கினர். 12-ஆம் நூற்றாண்டே அறுவகைச்சமயத்துடன் வீர சைவமும் பரவி இராமானுசரைத் துன்புறுத்திய காலம். வைணவக்காழ்ப்புடைய இரண்டாம் குலோத்துங்கன் காலம்.

மேலும் கம்பர் காலத்தைக்காண இராமகாதையில் அகச்சான்று ஒன்றும் தெளிவாகக் காணப்படவில்லை யென்பது நம்பிக்கை. ஆனால் பாலகாண்டம் உலாவியற் படலத்தில் 47 – 49 பாடல்கள் போதிய சான்று பகர்வதாக யான் உணர்கிறேன். சீதையின் திருமணத்திற்கு வந்த அரசர் பெயர்கள் அங்குரைக்கப்படுவன:-

கங்கர் கொங்கர் கலிங்கர் தெலுங்கர்கள்
சிங்களாதிபர் சேரலர் தென்னவர்
அங்க ராசர் குலிந்த ரவந்திகர்
வங்கர் மாளவர் சோழர் மராடரே

மான மாகதர் மச்சர் மிலேச்சர்கள்
ஏனை வீரர் இலாடர் விதர்ப்பர்கள்
சீனர் தெங்கணர் சிந்துகர் சோமகர்
சோன கேசர் துருக்கர் குருக்களே.

ஏதி யாதவர் ஏழ்வகைக் கொங்கணர்
சேதி ராசர்கள் ....................

இப்பாடல்களில் வரும் அரசர்கள் இராமாயண காலத்தரசரல்லர்; மிலேச்சர், சீனர், சோனகர், துருக்கர் ஆகியோர் பிற்காலத்தியோர் ஆவர். எனவே கம்பன் தன் காலத்தரசியல்நிலையையே இங்குக் குறித்தானாக வேண்டும். அவ்வகையில் பொருத்தம்மிகவுள்ளது. 9-ம் நூற்றுண்டிலிருந்து 12-ம் நூற்றுண்டுவரை இந்திய, தென்னிந்திய அரசியல் நிலை ஒரே மாதிரியாக, அமைதி யின்றி இருக்கிறது. இந்நூற்றுண்டுகளை ஒரு பிரிவாக வரலாற்றுர் எழுதுகின்றனர். இக்காலத்தே இப்பாடல்கள் குறிக்கும் அரசுகளெல்லாம் உள்ளன. தென்னிந்திய அரசுகளில் மிகச் சிறியதெல்லாம் குறிக்கப்பட்டிருக்க' சளுக்கிய, இராட்டிரகூடர் இங்குக் காணுமையால் சளுக்கியர் மறைந்து இராட்டிரகூடர் வலுப்பெறுமுன் இராமகாதை எழுதப்பட்டிருக்கலாம். இது ஒன்பதாம் நூற்றுண்டுப் பக்கமேயாகவேண்டும். மற்றும் அங்கர், குலிந்தர், அவந்திகர் எனும் பெயர்கள் 12ம் நூற்றுண்டுக் குரியவென்பதனைவிடப் பழமையாகவே கொள்ள வேண்டும் மற்றும் 8 — 9-ம் நூற்றுண்டுவரை கனிஷ்கப் பரம்பரையும் கூர்ச்சரப் பரம்பரையும் இருந்துள்ளன. இவை சோனகப் பிரிவுகளென்னலாம். சிந்துகர் துருக்கர் குருக்கள் என்ற குறிப்புக்கள் முஸ்லீம்களைக் குறிப்ப வாகலாம். 8-ம் நூற்றுண்டுத் தொடக்கத்தில்

முஸ்லீம்கள் சிந்துவில் ஆட்சிபெறுகின்றனர். முதலில் கலிபாக்களின் (குருக்கள்) ஆட்சியே அங்கு வலுப்பெறு இன்றது. எங்கும் குருமார்களின் காட்சி காணப் பட்டதாக வரலாறுரைக்கும். குருக்கள் என்பது குருநாட்டார் என்பதைவிட முஸ்லீம்-குருக்கள் என்பதாக் கொளல் பொருத்தம்.

எனவே இவ்வகையாலும் இராமகாதை 9-ம் நூற்றுண்டுப் பகுதியதெனத் தெரிய நிற்கின்றது. எப்படியும் 10-ம் நூற்றுண்டின் முற்பகுதிக்குப் பின் போகவியலாது.

# பல்லவர் யார்?

இதுபற்றிப் பலஅறிஞர் பலவாறு கூறுகின்றனர். அவற்றுள் பல்லவர் மேற்கே மராட்டியப்பகுதியில் அப்போதாண்ட பஹ்லவர் என்னும் பார்த்தியர் எனவும், மணிமேகலையில் கூறப்படும் பீலிவளைமகன் பரம்பரை எனவும் அன்றி, தென்னாட்டிற்கேயுரிய மக்கட் பிரிவினர் எனவும் பலதிறக் கருத்துக்களுள்ளன.

இவற்றுள் இங்கு நோக்கத்தக்கது பஹ்லவர் என்போரைப்பற்றிய கருத்தும், மணிபல்லவப் பீலிவளை மகன்பற்றிய கருத்தும் புறக்கணிக்கத்தக்கவல்ல என்பதே.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியே மணிமேகலைக் காலம் என முன்பு கூறுகிறோம். அறிஞரும் இதனை ஒப்புகின்றனர்.

பல்லவர் சாதவாகனர்க்குப்பின் அதாவது கி. பி. 3-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே ஆளத் தொடங்கியுள்ளனர். அதே சாதவாகனருடன் போரிட்டு பஹ்லவரும் பல பிரதேசங்களைப் பற்றியுள்ளனரென நாகபாணனென்ற பஹ்லவன் வரலாற்றாலறிகிறோம். மணிமேகலை கூறும் பீலிவளைமகனும் இக்காலத்திற் குரியவனே. இவனே பெரும்பாணாற்றுப் படையில் வரும் தொண்டைமான் இளந்திரையனாகலாம் என்பதிலும்

தவறில்லை. எப்படியும் இவற்றுள் வரும் பல்லவத் தொடர் பாகிய நாகர், பல்லவம் (மணிபல்லவம் (அ) அங்குரம்) முதலிய குறிப்புகளுடன் பல்லவர் என்ற சொல்லும் அவர் தம் மற்றவாழ்க்கையும் தொடர்பில்லாமற் போக முடியாது. இலக்கியத்தை அத்தனை எளிதாகத் தள்ளிவிட முடியாது; இலக்கியம் இக்கதைகட்டும் நோக்கத்துடன் அன்றைக்கு எழுதப்படவில்லையாதலால்.

எனது கருத்து பஹ்லவரும், பீலிவளை மகன் பரம்பரையும் கலந்த கலப்பே பல்லவராக வேண்டுமென்பதே. அவர்கள் தென்னாட்டுக் குறும்பரையும், கள்ளரையும் அடக்கி ஆண்டிருக்கலாம். பஹ்லவர் என்ற சொல்லும், பல்லவம் என்ற சொல்லும் ஒன்றி வந்தது அவர்கட்கு மிக்க மகிழ்வூட்டியிருக்கலாம்.

பாரசீகராகிய சாகர் என்போரே பஹ்லவர் எனப் படுவர். அவர்கள் சத்ரபர் என்ற இனத்தோடு கலந்த பின் இருவினமும் பிரிக்கமுடியாதபடி ஒன்றாய்விட்டது. இவர்களின் பெயர்கள் அஸ்பவர்மன், இந்திரவர்மன் என வர்மனில் முடிவதுபோன்றே பல்லவர் பெயரும் முடிகின்றன. மகேந்திரவர்மனில் இந்திரவர்மன் என்ற முழுப் பெயரேயுள்ளமைக் காண்கிறோம். சத்ரபஅரசர்கள் சிங்கத்தூணை வெற்றியடையாளமாகக் கொண்டிருந்தமை வட மதுராவிலுள்ள தூணொன்றால் தெரிவதாக அறிஞர் கூறுகின்றனர். பல்லவரிலும் சிம்மவர்மன், சிம்மவிஷ்ணு, நரசிங்கவர்மன், ராசசிம்மன் என்ற பெயராலும் இவ் வடையாளத்திற்களித்த மதிப்பைக் காண்கிறோம். நரசிங்கவர்மன் காலத் தூண்களின்அடியில் சிங்கங்களும் மாமல்லபுரக் கற்கோயில் முன்புள்ள சிங்கங்களுங்கூட இதற்குச் சான்றெனலாம்.

சோழன் கிள்ளி வளவனுக்கும் நாககன்னிகையாகிய பீலிவளைக்கும் பிறந்த இளந்திரையன் முதலியோர் பஹ்லவருக்கு முற்பட்ட பல்லவராகலாம். அவர்களே சிலப்பதிகார, மணிமேகலைக் காலத்தில் தொண்டைநாட்டுப் பகுதியை யாண்டிருக்கவேண்டும். காஞ்சி, வேங்கடக் கோயில்களைப் போன்ற சிறந்தகோயில்களைக் கட்டியவர் அக்காலத்து அங்கிருந்த குறும்பர் (இடையர்) ஆவர். அவர்கட்குரியவரே திருமால். அவர்களையடக்கி இளந்திரையன் ஆண்டிருக்கவேண்டும். எனவேதான் கரிகாலன் காலத்தில் காஞ்சி அவனாட்சிக்குட்படவில்லை. இதனை *நீலகண்ட சாத்திரியார் போன்றோரே ஒப்புகின்றனர். பீலிவளை மகன் கடலில்தடுமாறி மீண்டுவந்த போது அடையாளந்தெரியாமலும் மிகவிழிந்த நக்கசாரணராய நாகர் மகளுக்குப் பிறந்தவன் என்பதாலும் உயர்ந்த உரிமையுடைய சோழபரம்பரையிற் பிறந்தவர்கள் அவனுக்கு அரசுதர மறுத்திருக்க வேண்டும். எனவே இவன் அவர்கட்கெதிரியாய் குறும்பர், கள்ளர் இவர்களைத்துணையாக்கொண்டு காஞ்சியைப்பற்றியாண்டிருக்கவேண்டும். எனவேதான் சோழர்க்கும் பல்லவர்க்கும் இடையறாப் போராகவே இருந்திருக்கிறது. மூவேந்தருள்ளும், சோழருள்ளும் ஒரு—குடும்பச் சண்டை ஒன்றும் வியக்கத்தக்கதன்று.

எனவேதான் சோழர்க்கெதிராய வடமொழியையும், வடவர் நாகரிகத்தையும் மிகுதியும் போற்றினர் பல்லவர். எனினும் சோழரத்தம் பலனளியாமற் போகவில்லை. அதனாலேயே, இவர்கள் பஹ்லவரை எதிர்த்து நிற்கும் ஆற்றலும் தமிழையும் புறக்கணியாத பற்றும் கொண்டிருந்தனர். இவர்கள் தமிழிலும் கல்வெட்டின் பகுதிகளைச்

---

* A history of South India. Sastri—P. 121.

செதுக்கியுள்ளனர். பிரபந்தங்களும் வேறு பல தமிழ் நூல்களும் இவர்கள் காலத்தில் பெருகியுள்ளன. நந்தி வர்மனும், பிற்காலத்தோரும் தமிழுக்கு நிறைந்த ஆதர வளித்துள்ளனர்.

வடமொழியை மிகுதியும் போற்றி யாகங்கள் செய்து, வடநாட்டினர் வழிவந்தோர் எனச்சொல்லிக்கொள்வ் தாலேயே இவர்களை அயலாராகச் சொல்லிவிடமுடியாது. மூவேந்தருள் கரிகாலன் முதலியோரும் யாகம் செய்திருக் கின்றனர். சோழர் கல்வெட்டுகள், பகுதி வடமொழியில் செதுக்கப்படும் வழக்கிருந்துள்ளது. வேள்விக்குடிப் பட்டயமும், வீரராசேந்திரன் கன்னியாகுமரிக்கல் வெட்டும் பாண்டிய சோழரை, காசிபர் சந்திரன் வழி வந்தோரெனவும் அகத்தியரைக் குருவாகக் கொண்டவ ரெனவும் கூறுகின்றன. இதற்கென் சொல்வது? மேலும் இலங்கை நாகரே வடமொழியைத் தழுவிப் பிற்காலத்தில் சிங்களமொழியுடன் சிங்களவராயினர். இந்த நாகர் ரத்தமுடைய இளந்திரையப் பரம்பரை வடமொழியை யாதரித்ததில் வியப்பென்ன? மேலும் இவர்களுடன் கலந்த பஹ்லவரும், வடவர், வடமொழியுடன் நெருங்கிய உறவுள்ள பாரசீகர். இவர்களுடன் இளந்திரையப் பல்ல வருக்கு உறவு ஏற்பட்டதெப்படி?

சாதவாகனர் காலத்தேயே ஆட்சிக்குப் போராடிக் கொண்டிருந்த இவர்கள் அவர்கட்குப் பின்வந்த பஹ்லவ ருடன் போராட நேர்ந்தது. சோழ ரத்தம் கலந்த இவர்கள் எளிதில் விட்டபாடில்லை. எனவே பஹ்லவர் இவர்களைச் சமாதானமாக அடக்கி ஒன்றுக்கிக் கொண்டனர், இருவர் பண்பாட்டிற்கும் ஒருவர்க்கொருவர் இடந்தந்து கலந்து விட்டனர். பெரும் போர்களால் இது நடந்திருந்தால் சரித் திரத்திற்குத் தெரிந்திருக்கும். சமாதானமாகவே நடந்து விட்டது. எனவே வரலாறு இதற்குக் குறிப்பில்லையே

யென முழுவதையும் புறக்கணிக்கப் பார்க்கிறது. இப்படிக் கலப்பது சாகர், பஹ்லவருக்குப் புதிதன்று. இவர்க்குப் பிற்பட்ட சத்ரபருடன் இவர்கள் இங்ஙனமே கலந்து விட்டனர். குஷான் இனத்தாரோடும் இப்படிக் கலந்துள் ளனர். இவர்கள் அடக்கிய இனத்தாரைக் கவர்னர்க ளாகவோ, படைத்தலைவராகவோ ஆக்கிக்கொள்வதுண்டு. சத்ரபருடன் ஏற்பட்ட உறவு இத்தகையதே. பரஞ்சோதி போன்ற பல்லவப் படைத்தலைவரும் இங்ஙனம் கலந்தவ ராகவே இருந்திருக்கவேண்டும்.

இப்படி பஹ்லவர், மணிபல்லவர், குறும்பர் முதலி யோர் கலந்ததாற்றான் மகேந்திரவர்மனுக்கு "சங்கீரண சாதி" என்ற பட்டம் வந்திருக்கவேண்டும். நரரைப் புசிக்கும் நாகர் ரத்தக்கலப்பால்தான் அவனுக்கு "நர வாகனன்" என்ற பட்டமேற்பட்டிருக்கலாம். பஹ்லவருக் குரிய "வர்மன், சிம்மம் பஹ்லவர் முதலியவையும் மணி பல்லவர்க்குரிய பல்லவர், தொண்டையர், அங்குரர் முதலி யவையும், குறும்பர்க்குரிய காட (முல்லை) வர் முதலியவை யும், அப்பிரதேசத்தாருக்குரிய சைவம் முதலியவும் கலந்து ஒன்றுயின. முதன் முதலில் பஹ்லவர் கையோங்கியிருந் தமையால் வடமொழிச் செல்வாக்கு மிகுதியும், பின்னே காலம் போகப்போகப் பல்லவர் செல்வாக்கால் தமிழ்ச் செல்வாக்கு வளர்ச்சியும் ஏற்பட்டிருத்தலைக்காண் கிறோம். எனவே பஹ்லவரும், மணிபல்லவரும் (நாகர்—சோழர்) கலந்த கலப்பே பல்லவராகலாம்.

---

# மணிவாசகர் காலம்

மணிவாசகரை மூவருக்கு முந்தியவராக்கப் பெருநூலெழுதிய மறைமலையடிகளாரே கடைசியில் சென்னை புரசவாக்கத்தில் நடைபெற்ற பெரிய புராணமநாட்டில் ஒன்பதாம் நூற்றாண்டுக் கொள்கையை ஒப்புக்கொண்டு பாராட்டிச் சென்றுவிட்டார். இனியும் மூவருக்கு முந்திய கொள்கையை ஆராய்வதிற் பயனில்லை.

கீர்த்தித் திருவகவல் 140 – 142 வரிகளில் 'அம்பொற் பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில், கையையுயர் கிழவோனே' என மணிவாசகர் அருளுகிறார். 'அம்பொற் பொது' என்பது பொன்னம்பலத்தைத் தெளிவாகக் குறிக்கின்றது. எனவே அம்பலம் பொன் வேயப்பட்ட பிறகே இவ்வகவலும் வாசகத்தின் பெரும்பகுதியும் பாடப்பெற்றிருக்கவேண்டும். கடைசியான ஆராய்ச்சியில் அம்பலம் முதற் பராந்தகன் காலத்தே பத்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் (950 கி. பி.) வேயப்பட்டதாத் தெரிகின்றது. எனவே அடிகளைப் பத்தாம்நூற்றாண்டிற்கு முன் கொண்டுபோக இடமில்லை.

மேலும் நம்பியாண்டார் தமது கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் (58) "வருவாசகத்தினின் முற்றுணர்ந்தோனை வண்தில்லைமன்னைத் திருவாதவூர்ச் சிவபாத்தியன்செய் திருச்சிற்றம்பலப் பொருளார்தரு திருக்கோவை" என்பதிற் குறிப்பது வாசகரையேயெனத்

தெற்றெனத் தெளிகிறோம். இப்பாடல் திருக்கோவை யாரிலும் பாயிரமாக ஆளப்பட்டுள்ளது. வாசகர் முதலில் புலமையும், பின்பு சிறந்த பக்தியும் ஆகஇரண்டும் கலந் தவராவர். இப்பாடற்றொடரைக் கூர்ந்து நோக்கினால் மணிவாசகர் நம்பிகாலத்தே விளங்கியவரோவெனத் தோன்றுகிறது. சுந்தரரது திருத்தொண்டத்தொகையை விரித்து அந்தாதியாகப் பாடலையன்றி அதனில் வேறொரு வரைச்சேர்த்தல் அந்தாதியின் நோக்கமன்று. எனவேதான் மணிவாசகரை அதனில் நால்வராகச் சேர்க்க வில்லை. வரகுணன் 9-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். அவனையும் இதேவிடத்தில் (62) பாடியுள்ளார்; அவனையும் அறுபத்து மூவருள் சேர்க்கவில்லையென்பதை நினைத்தால் இதன் பொருத்தம் புலப்படும்.

மற்றும் பட்டினத்தார் தமது திருவிடைமருதூர் மும்மணிக்கோவை முடிவில் 'வித்தகப் பாடல் முத்திறத்தடியரும் திருந்தியவன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்' என அடிகளைக் குறிக்கிறார். இங்கே அடிகள் நாலாமவராக ஆக்கப்படுகிறார். பட்டினத்தார் திரு விசைப்பா பாடிய சேந்தனை அமைச்சராக் கொண்டவர். சேந்தன், திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர் மூவரும் ஒரு காலத்தவர். கருவூரார் கங்கைகொண்ட சோழேச் சுரத்தைப் பாடியுள்ளார். எனவே 11-ம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் திருவிசைப்பா பாடிய காலம் செல்கிறது. சொல், பொருள், பாடலமைப்பு, விரவிய வரலாற்றுக் குறிப்புக்கள், உவமைகள் முதலியவற்றால் திருவிசைப் பாவும், திருவாசகமும் ஒரு காலத்திய நூல்களாகத் தோன்றுகின்றன. இரண்டும் இவ்வகையில் நூற்றுக்கு நூறு இசைகின்றனவெனலாம். மணிவாசகருக்குப்பின் பட்டினத்தார் சிவவாக்கியரைக் குறிக்கிறார். நம்பி

அவரைக் குறிக்கவில்லை. எனவே வாக்கியரை 10-ம் நூற்றாண்டின் பிற்பகுதிக்காக்கினாலும் வாசகரை 10-ம் நூற்றாண்டின் முற்பகுதிக்குப் பின் கொண்டுபோக முடியாது.

மாணிக்கவாசகத்தின் மற்ற நூற்குறிப்புக்கள் இதற்கிடந்தருகின்றன. பாண்டியரின் குதிரை வாணிபத்தையும், அரேபியர் தமிழகத்தின் மேற்கரையில் குதிரைகளுடன் வருதலையும் பற்றி 13-ம் நூற்றாண்டின் கடைசியில் வந்த மார்க்கபோலோ குறிப்பிடுகிறான். அக்குறிப்பு மணிவாசகர் வரலாற்றிலும் வாசகத்திலும் இடம் பெறுகின்றது.

"குதிரையைக் கொண்டு குடநாட்டதன்மிசை
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந்தருளியும்"

எனக் கீர்த்தித் திருவகவல் விளம்புகிறது. இது மார்க்கபோலோவிற்குப் பல நூற்றாண்டுத் தொலைப்பட்டதாகவிருக்க முடியாது, மேலும் 'பதஞ்சலி'ப் பெயர் வாசகத்திலும், திருவிசைப்பாவிலும் குறிக்கப்படுகின்றது. பதஞ்சலி தேவாரத்தில் குறிக்கப்படுவதாத் தெரியவில்லை. பத்தாம் நூற்றாண்டிற்கண்மையோராகவே இருக்க வேண்டும். இது சங்கரரின் மாயாவாதம் (9—12 நூற்றாண்டுகள்) நன்கு பரவிய காலம். மிண்டிய மாயாவாதமென வாசகமும், வேதாந்தமென திருவிசைப்பாவும் இதனைப் பேசுகின்றன.

அல்லமதேவர் பத்தாம் நூற்றாண்டினர். அவரது வீரசைவ மதம் 11, 12-ம் நூற்றாண்டுவரை நல்ல செல்வாக்குப் பெற்றிருந்துள்ளது. அதன் குறிப்புகள் வாசகத்தில் மிகுதியாகக் காண்கின்றன. என் கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க என்ற ஒரு மதப்பிடிவாதமும் தக்கயாகக் குறிப்பும் (தக்கன், எச்சன், சூரியன் முதலோர் தோல்வி) இம்மதத்தின் தாக்குதல்களே

யாகலாம். வீரபத்திரரும் இந்நூல்களில் குறிக்கப்படு கிறார். வீரபத்திரர்க்கும் மணிவாசகருக்கும் வீரசைவத் துடன் நெருங்கிய தொடர்பிருப்பதாகத் தெரிகின்றது. வீரசைவச் செங்குந்தராய ஒட்டக்கூத்தர் 12-ம் நூற் ருண்டில் இதனுற்ருன்போலும் தக்கயாகப்பரணி இயற்றியுள்ளார்.

மேலும் இக்காலத்தே காளாமுகப் பிரிவும் சித்தரும் வாழ்ந்துள்ளனர். 'முட்டிலேன் தலைகீறேன்' என்ற தொடர் காளாமுகப் பழக்கத்தைக் குறிக்கலாம். யோகம், முனிவர், சித்தர், ஐந்தெழுத்து, நாதம், மருந்து, சிந்தாமணி முதலிய சொற்கஞ் சித்தர் தொடர்புடையவை. இந்நூல் களில் இவை மிகுதியும் பயில்கின்றன. உலக வாழ்வையும், பெண்களையும் வெறுத்தல் இவர்களது பழக்கமேயாம்.

இவற்றையும் குதிரைச்சாத்து முதலிய வழக்குகளையு மொட்டிச் சிலர் அடிகளை 13—14 நூற்ருண்டிற்கும் கொண்டு செல்வர். அப்படியாஞல் அதற்கப்பால் பட்டினத்தடிகள் செல்லவேண்டும். அது பொருத்தமாத் தோன்றவில்லை.

எனவே அடிகளை பத்தாம் நூற்ருண்டினரர்கவே தான் கொள்ளமுடியும். இறைவனைத் தலைவனுக் கொள்ளாததால் (தில்லைக் குறிப்பிருப்பினும்) கோவையாரை 8-ம் திருமுறையில் பிற்பட்ட திருமுறை வகுத்தோர் சேர்க்கவில்லை. எனவே நம்பியின் 'கோவைக் குறிப்பைத்' தள்ளிவிட முடியாது. எப்படியும் வாசகரை 10-ம் நூற்ருண்டின் இடைப்பகுதிக்குப் பிற்பட்டவராக்க முடியாது. 9-ம் நூற்ருண்டுக் கொள்கையும் இதனுல் பொருந்தாமற்போய்விடுகின்றது.

——

# ஆழ்வார் சிலர்

முதலாழ்வார்கள் ;- திரு. சீனிவாசப்பிள்ளை முதலாழ்வார் காலம் 7-ம் *நூற்றுண்டெனவும், மு. இராகவையங்கார் 5-ம் நூற்றுண்டெனவும் கருதுவர். அய்யங்காரவர்களுடன் ஓரளவு ஒத்தாலும், எனது கருத்து 'ஒரு குறித்த அரசன் காலத்தையே' இதற்குரித்தாக வரையறுப்பதாம்,

பல்லவர் ஆட்சித் தொடக்கம் கி. பி. 250 ஆகலாமென்பர். 3-ம் நூற்றுண்டு பப்பதேவன் மகனெனக் கருதும் சிவஸ்கந்தவர்மன் காலமும் இதுவேயாம். பேயாழ்வாரது மூன்றுந்திருவந்தாதி 61-ம் பாடலில் "இளங் குமரன்தன்விண்ணகர்" என்ற குறிப்பொன்றுள்ளது. அது—இளங்குமரன்—அரசனையே அதுவும் பல்லவனையே குறிப்பதாகும். முதலாழ்வார்கள் பல்லவ அரசர்களைத் தம்பாடலில் குறிப்பிட்டும் பாராட்டியுமுள்ளமை இராகவையங்காரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இங்கு இளங்குமரன் என்பது இளவரசன் என்ற பொதுப் பெயரைக் குறிக்காது. அப்பொதுப் பெயரையே சிறப்புப் பெயராக வைத்து வழங்கிய ஒருவனையே குறிப்பதாகும். இங்ஙனம் சிவஸ்கந்தவர்மனும், விஷ்ணுகோபவர்மனும் (5-ம் நூற்றுண்டு நடு) வழங்கப்பட்டுள்ளனர். 'யுவமகாராசன்' என்ற பெயரோடேயே சிவஸ்கந்தன் பட்டயம்

* ஆழ்வார் காலநிலை. மு. ரா—48 — 51.

கிடைத்துள்ளது. ஆனால் அவன் காலத்தே பல்லவ ஆட்சி புதுக்கோட்டை,காவிரிவரைப் பரவியதாத்தோன்றவில்லை, பாலாறுவரையே பரவியிருந்துள்ளது.

எனவே விஷ்ணுகோபன் காலமே பொருத்தமாகிறது. சிம்ம விஷ்ணு காலத்தில் காவிரி, புதுக்கோட்டைப் பகுதி பல்லவர்கையில் இருந்துள்ளது. திருக்கோட்டியூர், குடந்தை முதலாமிடங்களை ஆழ்வார்கள் குறிக்கின்றனர். எனவே இடைக்காலப் பல்லவரே இப்பிரதேசத்திற்குரியராக்கொள்ளவேண்டும். மேலும் கடிகாவுக்கும் இவ்விடைக்காலப்பல்லவர்க்குமே தொடர்பு மிக கூறப்படுகிறது. "வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகை இளங்குமரன்தன் விண்ணகர்" என்பதில் இளங்குமரன் அரண்மனை கடிகை எனப்போற்றப்படுகிறது. இவ்விஷ்ணுகோபன் இளவரசன்விஷ்ணுகோபனெனவே அடைமொழியுடன் கூறப்படலால் இவனை இளவரசன் இளங்குமரனெனவே தனிச்சிறப்புடனே வழங்கியும், மக்கள் அறிந்தும் இருக்கக்கூடும். இவனையே ஆழ்வார் குறிப்பதாக்கொள்ளலாம். இவனும் இவன் பரம்பரையும் சிறந்த வைணவர்கள். "பரமபாகவதரெனக்" கூறிக்கொண்டவர்கள். இவர்கள் பரம்பரையையே திருமால் போற்றும் வழியினராக ஆழ்வார்கள் தம் அந்தாதியில் கூறுகின்றனர்.

சிறந்த வைணவனாகிய சிம்மவிஷ்ணுவின் காலத்தைக் குறிக்கலாமெனில் அதற்குத் தடைகள் பலவுள. இவன் காலத்தில் காஞ்சி பல்லவர்த் தலைநகராய்விட்டது. ஆழ்வார்களோ காஞ்சியைச் சுற்றிய ஊர்களையும் கோயில்களையுமே பாடுகின்றனரன்றி காஞ்சியை ஓரிருவிடத்தே கூட குறிக்கவில்லை. மேலும் திருவேங்கடத்தையே அடிக்கடி சிறப்பித்தும் பாடுகின்றனர். எனவே

ஆந்திரப் பகுதியிலிருந்து அவர்கள் ஆண்ட காலமா கலாம் இது. இடைக்காலப் பல்லவர்வரை ஆந்திரத்தி லிருந்தே ஆண்டுள்ளனர். "குணபரன்" என்ற பெயரைத் திருமழிசை குறிக்கிருர். அவர் மூவாழ்வார் காலத்தவர் என்ற கருத்தில் அய்யங்காருக்குப் பிடிப்பு ஏற்பட்டிருக் கிறது. எப்படியும் மஹேந்திரன் காலமாக இவர்களைக் கொள்வதற்கில்லை.

திருமழிசை இவர்கள் காலமா என்பதிலேயே ஐயமிருக்கிறது. சமணம் ஓங்கிச் சைவத்தை வருத்திய காலக் இது. இப்போது வைணவம் தொடங்கித் தழைத்த தெனில் பொருந்தாது. மேலும் சமணம் போய் அப்பர் சைவமே அவன் காலத்திற்றழைத்தது. இளங்குமரன் க'டிகை இக்குறிப்புக்கள் இவனுடன் பொருந்தவில்லை. மற்றும் மூவர் பாடலுள் நல்லபழமை காணப்படுகிறது. சைவ, வைணவ சமரசம் மிகச் சிறப்பாக இவராலேயே போற்றப்படுகிறது. சமணத்தைப்பற்றிய பழிப்பே இல்லை யென்னலாம். அப்பர் (சம்பந்தர்கூட) காலத்தே அப்படி யில்லை.

குலசேகரர் :- 9-ம் நூற்றுண்டுக்குப் பின்னென்போர் பலர். *திரு மு. ரா. ஐயங்கார் 8-ம் நூற்றுண்டினரென் கிருர். பெரிய புராணத்தை இதற்காதரவாக்கொள்கிருர். சேரமான்பெருமாள் குறிப்பில் அவர்க்குமுன் சேரநாட்டை யாண்டு ஒருமன்னன் முடி துறந்தானெனக் காணும் குறிப்பு ஆழ்வாரையே குறிக்குமென்கிருர். சுந்தரர் காலமே 7-ம் நூற்றுண்டின் கடைசியாகையால் ஆழ்வார் 7-ம் நூற்றுண்டாகவேண்டும். இது பொருத்தமாத் தோன்றவில்லை.

---

* ஆழ்வார் வரலாறு — மு. ரா. குலசேகரர்.

7, 8 நூற்ருண்டிலிருந்து ஆழ்வார் நாயன்மார்க்கு எப்படியோ குறிப்புக்கள் கிடைத்துவிடுகின்றன, இல்லாமலில்லை. ஐயத்திற்குட்பட்டு பின் தெளியலாமன்றி தெரியாமலே இருக்கவில்லை. 9, 10 நூற்ருண்டுக்குத்தான் தெளிவாகக் கிடைக்கவில்லை. மற்றும் பெரியாழ்வாருக்கு முந்தியவராக இவரை யாருங்கொள்ளார். பெரியாழ்வார் 8-ம் நூற்ருண்டின் பிற்பகுதியெனில் இவரை 9-ம் நூற்ருண்டாக ஏன் கொள்ளலாகாது? பெரியாழ்வாரும் இவருமே இராமனையே மிகுதியாப் பாடியவர்கள். மற்றும் இவர் இராமகதையை மிகவிரும்பி ராமபக்தி சிறந்திருக்கிருர். இராம பக்தியும், கதையும் 9-ம் நூற்ருண்டிற்குரியன. கம்பர் இராமகாதை இயற்றியதுமிப்போதே. எனவே இவரைச் சோழ ராச்சியத் தொடக்கத்தையொட்டியவர் எனக்கோடல் மறுத்தற்கியலாதாம்.

திருமழிசையாழ்வார் :- "கொடுத்தளித்த கோனே குணப்பரனே யுன்னை" என அந்தாதியில் ஆழ்வார் கூறியுள்ளது கொண்டு குணப்பரன் என்பது அரசன்நினைவுகொண்டு ஆண்டவனை அப்பெயரால் அழைத்ததாகலாமெனக் கருதி "குணபரன்" மஹேந்திரவர்மனுகலின் அவன் காலமாகிய 7-ம் நூற்ருண்டே திருமழிசைக் காலம் என ஆராய்ச்சியாளர் பலரும் கருதுவர்.

ஆனுல் கர்ண பரம்பரைக் கதையையும் திருமழிசைப் பாடல்களையும் நோக்கினுல் இவர் வரலாற்றில் ஏதோ ஒரு சிக்கல் தீர்க்கப்படவேண்டியுள்ளதாகத் தெரிகிறது. அந்தாதிக்கும், சந்தவிருத்தத்திற்கும் பாடலமைப்பிலேயே வேறுபாடிருக்கிறது; இதனுல்கருத்திலும், காலத்திலும் வேறுபாடுண்மையைக் கூர்ந்து ஆராயவேண்டியுள்ளது.

பிரபந்தத்தில் உள்ள இவர் கதையிலேயே ஆழ்வார் சைவத்தினின்றும் வைணவத்திற்கு வந்தவர்; சிவவாக்கியரே அப்படி மாறினுர் என்றெல்லாம் கூறப்படுகிறது. சந்தவிருத்தம் சிவவாக்கியர் பாடலைப் பெரிதும் ஒத்திருக்கின்றது.

பட்டினத்தார் சிவவாக்கியரைப் பாடுகிருர். மணிவாசாகருக்குப பின்வைத்து சித்தமார் சிவவாக்கியரும் எனப்போற்றுகிருர். எனவே சிவவாக்கியர் 10-ம் நூற்ருண்டிற்குரியவராகிருர். ஆழ்வாருக்கு எப்படியோ சிவவாக்கியத் தொடர்புள்ளமையால் இவரையும் 10-ம் நூற்ருண்டுக்குரியராக்கலாமோ என எண்ண வேண்டுகிறது.

திருமூலர்மாதிரியே இரண்டு திருமழிசையை ஒப்புவது தவிர வழியில்லை. ஒரே பெயரால் இருவர் பாடலும் பிரபந்தத்தில் இடம் பெற்றிருக்கலாம். திருமூலரும் அப்படித்தான். சுந்தரர் திருமூலர் பெயரையே குறித்தார். பிற்காலத் திருமூலர் கதை, பாடல் அனைத்தையும் முன்னவர்க்காக்கி 12-ம் நூற்ருண்டுச் சேக்கிழார், கதை பாடினுர். திருமழிசைக்கும் பிற்காலத்தார் அப்படியே செய்தனர் எனத்தெரிகிறது. ஆழ்வார் பாடலில் யோகி, சித்தர்தம் போக்கு தெளிவாகக் காணப்படுகிறது.

---

# கல்லாடம், திருமூலர்

கல்லாடம் :- திரு. சீனிவாசப்பிள்ளை 9-ம் நூற்றாண்டெனவும் கா. சு. பிள்ளை 6-ம் நூற்றாண்டெனவும் கூறுவர். பிற்காலக்கொள்கை மிகப் பொருத்தமானது. கல்லாடத்தில் கிட்டத்தட்ட எல்லாத் திருவிளையாடற் கதைகளும் குறிக்கப்படுகின்றன. தேவார காலத்தில் அத்தனையும் காணப்படவில்லை. மதுரையில் வெள்ளியம்பலம், கால்மாறியாடியது. பதஞ்சலிக்கருளியது ஆகிய விளையாடற்கதைகள் தேவாரத்தே கிடையா. எனவே இக்கதைகள் தேவாரப் பிற்காலத்தனவாம். இவை கல்லாடத்தே குறிக்கப்படுகின்றன. பதஞ்சலி திருவாசகத்தே குறிக்கப்படலாற்றான் மாணிக்கவாசகர் காலத்தையும் 10-ம் நூற்றாண்டெனக்கொள்ளவேண்டி வந்தது. எனவே கல்லாடமும் இந்நூற்றாண்டேயாகலாம். மேலும் 10-ம் நூற்றாண்டினராய பட்டினத்தார் பாடலுடன் 11-ம் திருமுறையில் இவர் பாடலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திருமூலர் 10-ம் நூற்றாண்டினராவர். அவர் பாடலில் பதஞ்சலி வியாக்ரபாதர் குறிப்புள்ளது. பதஞ்சலியுடன் திருமூலரும் நந்திகணத்தவராகக் கூறிக்கொள்கிறார். கல்லாடரும் பதஞ்சலியைத் தமது நூலில் குறித்துள்ளார். எனவே பதஞ்சலிக் குறிப்பு பத்தாம் நூற்றாண்டினதாக் கொள்ளலாம்.

இதன்மூலம் 11-ம் திருமுறையிற் பாடிய நக்கீரர், கபிலர், பரணர் முதலியோரும் 10ம் நூற்ருண்டினராகவே கொள்ளத்தகும். மற்றொரு பொருத்தம், பட்டினத்தடிகளுடன் இத்திருமுறையிற்பாடிய நம்பியாண்டாரும் இந் நூற்ருண்டரேயாவார்.

கொங்குதேர் வாழ்க்கைக் கதையும், நக்கீரரும் தொடர்புற்றோராகலின் இக்கதையும் கல்லாடத்திலே தான் இறையனரகப் பொருளை இறைவன் பாடியதாகக் குறிப்பு முதன்முதல் வருதலால் இறையனர் களவியலும் அதன் உரையும் இந்நூற்ருண்டிற்கேயுரியவெனலாம். 11-ம் திருமுறையிற்காண்டலாலும் நக்கீரர் பாடிய தென்கையாலும் இந்நூற்ருண்டில் கல்லாடம் முருகன் புகழைப் பரப்புதலாலும் திருமுறைகாற்றுப்படையும் இந்நூற்ருட்டுக்குரியதெனில் அதனை எளிதில் மறுத்தற் கில்லை. அன்றி இந்நிகழ்ச்சிகளை 8-9ம் நூற்ருண்டுகட்கும் கூறலாம்.

திருமூலர்;- சுந்தரமூர்த்திகளே திருமூலரைப் பாடியுள்ளாரெனினும் திருமந்திரமியற்றியவர் வேருனவரெனவும் 10-ம் நூற்ருண்டினராயுமே கொள்ளவேண்டியுள்ளது. இதனையிணைக்கவே திருமூலர் நீண்டகாலம் வாழ்ந்தார், சித்தராகையாலெனப் பரம்பரை கூறுவதாயிற்று. சுந்தரர் 7-ம் நூற்ருண்டு; மூலர் 10-ம் நூற்ருண்டு. இவ்வளவு நீண்டகாலம் வாழ்ந்திருக்கக்கூடுமாவென்ற ஐயம் ஏற்படுகிறது.

10-ம் நூற்ருண்டில் பழம்பெயர்களைக்கொண்டு பாடிய புலவர் பலர் இருந்துள்ளனர்; நக்கீரர், பரணர், கல்லாடர், கபிலர்.

திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர் முதலோர் போகர் மாணுக்கரென்ப. இவர்கள் 10-ம் நூற்ருண்டின் கடைசிக் காலத்தவர். போகர், திருமூலர் தம்மாணவர்க்கு மாணவர். எனவே திருமூலர் 10-ம் நூற்ருண்டினரேயாக வேண்டும். சித்தர்கள் 10-ம் நூற்ருண்டினரேயெனக் கூறப்படுவர். இக்காலத்தே ஒரு அகத்தியர் குறிக்கப்படுகிருர், அவர் சைவர். அவர் 9-ம் நூற்ருண்டினராகலாம். கல்லாடத்தும் அவர் குறிக்கப்படுகிருர். திருவிளையாடலில் 'குடமுனிக்கு தமிழை வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்' என்றவிடத்து இவ்வகத்தியரே குறிக்கப்படுகிருரெனலாம். அகத்தியர் சித்தருள் ஒருவர்; தலைவர். திருமூலர்க்கு ஆசிரியர்; நந்திகணத்தவர்.

---

# நிகண்டுகள்

திரு. சீனிவாசப் பிள்ளை திவாகரத்தில் சளுக்கியர் குறிப்புகொண்டு அதனை ஆரும் நூற்றுண்டிற்குரித்தாக்கு கிருர். திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் அரட்டர் (இராட்டிரகூடர்) சொல் அதனை 8-ம் நூற்றுண்டின் தொடக்கத்திற்காக்கும் என்கிருர், இது பொருந்தலாம்.

திவாகரத்திலேயே 'விநாயகர்' பெயர் தெய்வப் பெயருள் காணப்படுதலால் அந்நூலை 7-ம் நூற்றுண்டின் இடைப்பகுதிக்குப் பின்பே கொண்டு செல்லவேண்டும். திவாகரத்தில் 'அகத்தியர்' காணப்படாததும், பிங்கலத் தில் காணப்படலுங்கொண்டு இரண்டிற்கும் கால வேற்றுமையுண்டெனத் தெரிகிருேம். பொருளமைப்பு காட்டும் வேறுபாடுகள் வேறு.

சூடாமணியுடன் இம்மூன்று நிகண்டுகளும் 10-ம் நூற்றுண்டுக்கு முன்பேதான் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்பதற்குத் தக்க ஆதாரமுண்டு. 10-ம் நூற் ருண்டிற்முன் திருக்கோவை, கல்லாடம் முதலாம் நூல் களிலும், இறையனுர் களவியதுரையிலும் முத்தமிழ், முச்சங்கம்பற்றிய குறிப்பு முதன்முதல் வருகிறதென்ன லாம். இந்நிகண்டுகளில் "பல்பொருள் கூட்டத்தொரு பெயர்த்தொகுதி" களில் 1, 2, 3, 4 முதலிய எண்பற்றிய வழக்குப் பெயர்கள் குறிக்கப்படுகின்றன.

அங்கே முச்சங்கம், முத்தமிழ்பற்றிய குறிப்பில்லை. இங்ஙனம் குறிக்கப்படாதது புறக்கணித்தற்குரியதொன் றன்றாம். இதனை ஆராய்ச்சிக்குரிய ஆதாரமெனவே கொள்ளவேண்டும். எனவே இந்நூல்கள் 10-ம் நூற் ருண்டிற்கு முன்பே ஏற்பட்டுவிட்டவெனத் தெளிய லாகும். எனவே இவற்றின்பின்னெல்லை 10-ம் நூற் ருண்டாம்.

9-ம் நூற்ருண்டின் பிற்பாதியில் புகழ்பெற்ற தஞ்சாவூர் இடப் பெயர்த் தொகுதியில் காணவில்லை. காஞ்சிபுரம் காணப்படுகிறது. தேவார காலத்தே சிறந்த திருவாரூரும், சோழர்தம் கரூரும் அங்குக் காணப்படு கின்றன. எனவே இந்நூல்களை 700 — 900க்குட் பட்டனவாக் கருத இடமுண்டு.

---

# செங்குட்டுவன் காலம்

சிலப்பதிகார காலம் அல்லது சேரன் செங்குட்டுவன் காலம் †கி. பி. இரண்டாம் நூற்றாண்டென யாவரும் ஒப்பு கின்றனர். சிலர்மட்டும் * 4, 5-ம் நூற்றாண்டாகக் கூறுவர். Dr. ராஜமாணிக்கம் பிள்ளை தம் பல்லவர் வரலாற்றில் ஒரு நல்ல ஆதாரத்துடன் செங்குட்டுவன் கி. பி. 166 – 193 காலவெல்லைக்குட்படலாம் என்கிறார். அவர்க்குரிய தக்க ஆதாரம் இலங்கை கயவாகுவின் காலமாகும். கயவாகுவின் காலம் 171 – 193 ஆகிறது. அப்போதே நூற்றுவர் கன்னர் எனப்படும் ஆந்திர சதகர்ணிகளுள் யக்ஞஸ்ரீ இருந்திருக்கிறான். அவன் சிறந்த வலியுள்ளவனா யினும் செங்குட்டுவனை எதிர்க்கும் வலியற்றிருக்கலாம். மற்றும் அவனுக்குப்பின் ஆந்திரர்கள் வலியற்றுப்போயின தாகவும் அவனே சிறந்த கடைசியரசனெனவும் வரலாறு கூறுகிறது. எனவே அவனது கடைசி காலத்தே அவனே வலிகுன்றிப்போயிருக்கலாம்.

இவ்வாராய்ச்சியில் யான் சேர்க்கப்போவது இக் காலத்தை நிலைநாட்டுதற்குரிய வடநாட்டரசர், தென் னாட்டரசர் சிலர்பற்றிய குறிப்புக்களாம். "கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்," "கொங்கணர், கலிங்கர் கொடுங்கருநாடர்; குடகக்கொங்கரும், மாளுவ

---

பல்லவர் வரலாறு Dr. பக். 6 — 7.

*மு. ரா. சேரன் செங்குட்டுவன் காலவாராய்ச்சி 169.

†Dr. S. K. Iyengar 2-ம் நூ. செக். 4 — 525,7.

வேந்தரும்" (குடகரும் எனவும் பாடம்) என்ற சிலப்பதி கார அடிகள் இவனது தென்னிந்திய வெற்றியைக் குறிப்பன. எனவே இப்பேரரசர் இவன் காலத்தே வாழ்ந் திருக்கவேண்டும். கடம்பு என்பது கடம்பரைக் குறிக் கலாம். இவர்களைக் கடலின்வழியே சென்று செங்குட்டுவன் வென்றிருக்கலாம். இக்கடம்பர் கன்னடம் வரை யாண்டதாகத்தெரிவது இதற்கு நல்லஆதார மாகும். இவர்கள் ஆந்திர வீழ்ச்சியில் தோன்றிய சிறு நாடர்களாக வரலாறு கூறுகிறது. எனவே கடைசி அரசனாய யக்ஞஸ்ரீயின் காலத்தே இவர்கள் குழப்பமிடத் தொடங்கியிருக்கலாம். இவர்கள் * 3-6-ம் நூற்றாண்டு வரை ஆண்டதாகத் தெரிகிறது. குடகக்கொங்கர் என்பது கொங்கர்களையே குறிப்பதாம். இவர்களும் ஆந்திரர் வீழ்ச்சிக்காலத்தே தோன்றியவர்களாம். மைசூர்ப் பகுதியை ஆண்டனர். இவ்விடம் குறிப்பிடத்தக்கதொன் றுண்டு. இக்காலப் பகுதியில் 50 ஆண்டுகள் வேறுபாடி ருந்தால் அது பொருட்படுத்தத்தக்கதில்லையாம். இக் காலத்தைத் திட்டமிடும் வரலாற்றாராய்ச்சியாளர் பலரும் பலவிடங்களிலும் பெரிதும் இடர்ப்படுகின்றனர். இக்கால அரச பரம்பரையாகிய ஆந்திரர், கனிஷ்கர் முதலியோர் காலத்தை அறிஞர் பலரும் 50, 60 ஆண்டுகள் முன்பின் கூறியே முரண்படுகின்றனர்.

குடகரும், கொங்கரும் எனப் பிரிக்கினும் குடகர் என்போர் மேற்குப் பகுதியாகிய கொங்கணராய் வாழ்ந்த மஹாராஷ்டிரரைக் குறிக்கலாம். யக்ஞஸ்ரீ மராட்டியரை வென்றாண்டதாகத்தெரிவதால் இஃதுறுதிப்படும். மேலும் சத்ரபதி ருத்ரதாமனிடமிருந்து யக்ஞஸ்ரீ வட கொங்கணத்தையும் பிடித்ததாகத் தெரிகிறது. "இது "கொங்கணர்" கலிங்கர் என்பதற்கு ஆதாரமாம்.

* Indian History Mukerji 206.

அசோகனால் வெல்லப்பட்டனரன்றி கலிங்கர் இது வரையும், பின்னும் அழியாமலே இருந்துவந்துள்ளனர். கலிங்கன் காரவேலன் சதகர்னிகளை வென்றதாகச் செய்தியுள்ளது. அது கி. பி. முதல்நூற்றாண்டெனவும், மூன்றும் நூற்றாண்டெனவுமெல்லாம் கூறப்படுகிறது. எனவே கலிங்கம் இவ்விரண்டாம் நூற்றாண்டில் அழிந்துவிடவில்லை, இருந்திருக்கிறதெனவே தெரிகிறது.

மாளுவவேந்தரும் என்பதில் மாளுவநாடும் மாளுவரும் இருந்தமை புலனாகிறது. கண்ணுவர் என்போரை கிழக்கு மாளவத்தில் சாதவாகனர் தொடர்ந்தாண்டதாய்த் தெரிகிறது. கண்ணுவர் என்போர் கி. மு. 300வரை ஆண்டனரெனவும் அதற்குப் பின்னும் அவர்கள் பரம்பரை அடங்கியிருந்ததாயும் தெரிகிறது. எனவே மாளுவம் கி. பி. 200-ல் இருந்திருக்கவேண்டும். மேலும் வட இந்தியாவில் "பங்களர், கங்கர், பலவேற் கட்டியர்" என்ற அரசர் இருந்தமை சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. பங்களரே வங்காளர் ஆவர். கனிஷ்கன் காலத்தேகூட கி. பி. முதல் நூற்றாண்டில் அவன் கிழக்கே காசிவரையே வென்றதாய்த் தெரிகிறது. அவன் நாணயம் கரக்பூர்வரைப் பரவியிருந்ததாகவே தெரிகிறது. எனவே வங்காளம் தனியாகவே இருந்திருக்கவேண்டும். கங்கர் எனக் குறிக்கப்படுவது சுங்கர் எனப்படுவோரையேயாக வேண்டும். அப்போது மகதத்தில் மௌரியரை மாற்றியாண்டோர் இவரேயாவர். இவர் கங்கைப்பகுதியை யாண்டமையால் சிறப்பாகத் தமிழர் இவரைச் சுங்கர் என்பதிற்குப் பதில் கங்கர் என்றனர்போலும். இவர்கள் நர்மதைப் பகுதி, பஞ்சாப் என மத்திய இந்தியப்பகுதிகளையெல்லாம் ஆண்டதாய்த் தெரிகிறது. இவர்களைக்

* கி. மு. முதல் நூற்ருண்டில் கண்வர் வென்ற பிறகும் இவர்கள் அழிந்துவிடவில்லை. அவர்க்கு அடங்கி வாழ்ந்த தாகவே தெரிகிறது.

மற்ற பல்வேறக்கட்டியர் என்போர் வடமேற்கிந்தியப் பகுதியில் ஆண்டோராகத் தெரிகிறது. இவர்கள் செலூகஸ்நிகேடர்க்குப் பிற்பட்ட (நிகேடர், நிகேடியர், கட்டியர்) கிரேக்கராக வேண்டும். இவர்களே பல்வேற் கட்டியர் என்பதற்கேற்ப வேற்படைகொண்டு போரிடுவோராவர். அன்றி பாக்டீரியப் பகுதியை இந்த செலூகஸ் பெற்றமையால் அப்பகுதியினர் பாக்டீரியர், க்டீரியர், கட்டியர் எனப்பட்டனரோ, இருக்கலாம்? இவர்கள் சிந்து பகுதியிலும் ஆண்டனர். கனிஷ்கனுக்குப் பின் ஹூவிஷ்கன்காலத்தேயும் கிரேக்கதெய்வ வழிபாட்டை அவன் ஆதரித்ததாத் தெரிகிறது. கிரேக்கரை மாற்றியே குஷானியர் ஆட்சியைத் தொடங் கியதாகத் தெரிகிறது. எனவே இவர்கள் செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்புக்காலத்தே அங்குவாழ்ந் திருக்க வேண்டும். பாலகுமரர் மக்கள் மற்றவர் காவாநாவில் கனகவிசயர் என்பதும் உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன் சித்திரன் சிங்கன் தனுத்திரன் சிவேதன் வடதிசைமருங்கின் மன்னர் என்பதும் ஆகியகுறிப்பே இக்காலத்தைப்பற்றியவாராய்ச்சியில் தெளிவுபடுத்தப்படவேண்டிய இன்றியமையாதவாம்.

இவர்கள் வடநாட்டையாண்ட சத்திரபதியரசரும் குஷான் பரம்பரையினருமேயாக வேண்டும். வடசத்ரபதி யரசருள் ருத்ரபன் சிறந்தவன். மேற்குறித்த பெயருள் ருத்ரன் என்பது இவன்பின் வந்தோருள் ஒருவனுகலாம்.

---

* Indian History Mukerji 115.

இவன் கி. பி. 130 — 150-ல் இருந்தான். வடசத்ரபதியர் என இவர் பெயராதலால் வடக்குக்கு வடமொழிச் சொல்லாகிய "உத்தரன்" என்ற பெயர் பொருந்தலாம். * சத்திரபதி—சித்திரன் விசித்திரன் என்ற பெயர்கள் தொடர்புடையனவே. இவர்கள் "சிங்கம்" அமைத்த தூணை வெற்றித்தூணைக்கொண்டிருந்ததாய் வரலாறு கூறுகிறது. கொடி அடையாளமாயும் கொண்டிருக்கலாம். எனவே சிங்கன் என்ற பெயரில் புதுமையில்லை. இத்தகைய வடமொழிப் பெயர்களை இவர்களே கொண்டிருந்தனர். சுவேதன் அஸ்பவர்மன் என்ற பெயர்களுடன் ஒற்றுமையை எளிதில் அறியலாம். கீழச்சிந்துப் பகுதி, சட்லஜ் பகுதியையெல்லாம் இவர்கள் ஆண்டனர். இவர்கள் கனக விசயர்க்குத் துணையாக வந்தவர்.

கனகவிசயர் என்பது கனிஷ்கர், ஹூவிஷ்கர் என்பவற்றினடியாக வந்திருக்கலாம். குஷான் அரசருள் கனிஷ்கரும் ஹூவிஷ்கருமே இரண்டு சிறந்தோர். இவர்க்குப்பின் வந்தோர் இவர்கள் பெயரையே வைத்து வழங்கியிருக்கலாம். கனிஷ்கனுக்குப் பின்னும் வேறோர் கனிஷ்கன் இருந்ததுபற்றிய விவாதமிருக்கிறது. ஒரே சமயத்தில் ஆளும் இருவராயின் கனிஷ்கன், ஹூவிஷ்கன் என்றே முன்னோர்பெயருடன் ஆண்டிருக்கலாம். கனிஷ்கன் கனகன் என மருவுவதும் ஹூவிஷ்கன் விசஹன் விசயன் என மாறுவதும் தமிழர்க்குப் புதிதன்று. குஷானியருள் வலிகுன்றியோரே இக்காலத்தில் ஆண்டதாய்த் தெரிகிறது. இவர்கள் கனிஷ்கனுக்குப் பிற்பட்டோர். கனிஷ்கர்கள் சிந்து கங்கைச் சமவெளிப் பள்ளத்தாக்கு, காஷ்மீர்வரையாண்டுள்ளனர். எனவே கங்கையைக் கடந்ததும் இவன் பரம்பரையினரே சேரனை

---

* Indian History Mukerji 129.

எதிர்த்திருக்கவேண்டும். கனிஷ்கன் சுமார் கி. பி. 78-ல் அரசனானன். பின்னர் ஹுவிஷ்கன், பின் இவ்விருவர் பெயரையுங்கொண்ட பரம்பரையினர், ஆண்ட காலம் சேரன் படையெடுப்புக் காலத்தோடும் ஒன்றிவருகிறது.

பாலகுமரன் மக்கள் கனகவிசயர் எனச் சிலப்பதிகாரம் பேசுகிறது. வடசத்திரபதிகளை * சத்திரபால் குடும்பம் என வரலாறு கூறும். கனகவிசயர் குஷான் பரம்பரையினர். எனினும் இவ்விரு பரம்பரைக்கும் நெருங்கிய தொடர்பிருந்திருக்கிறது. குஷான் அரசரிடம் சத்ரபதி மன்னனொருவன் வைஸ்ராயாக இருந்திருக்கலாமென அறிஞர் கூறுகின்றனர். சத்திரப அரசரை மாற்றியே குஷான்கள் பட்டமடைந்துள்ளனர். குஷான் காட்பிஸிஸ் II என்பான் சத்ரப நாகபாணனின் தலைமை வேந்தனேவென அறிஞர் ஐயுறுகின்றனர். இவற்றாலேயே இருவர்க்கும் பெண்ணுறவு, குடும்பஉறவு ஏற்பட்டிருக்கவும் இடமுண்டு. இரு குடும்பக்கூட்டில் பிறந்தவர் கனகவிசயராகலாம். தமிழகத்தார் பிரித்தறிய முடியாமல் பாலகுமரன் மக்கள் என நினைத்துவிட்டிருக்கலாம். சிலம்பும் "கலந்த கேண்மையெனவே" உருத்திரவிசயன்முதலோர்க்கும் கனகவிசயர்க்குமுள்ள தொடர்பைக் கூறுகிறது.

எனவே சேரன் செங்குட்டுவன் காலம் கி. பி 2-ம் நூற்றுண்டின் கடைசிப்பகுதியாகலாம் என்பதில் பொருத்தமிருக்கிறது.

---

*Indian History Mukerji 129.

# கரிகாலன் காலம்

செங்குட்டுவன் காலம் ஒருவாறு கி. பி. இரண்டாம் நூற்றூண்டின் கடைசிகாற்பகுதியெனக் கண்டோம். அவன்தந்தை, இமயவரம்பன்சேரலாதனெனச் சிலப்பதிகாரம் கூறும். குமரியொடு வடவிமயத் தொருமொழி வைத்துலகாண்ட சேரலாதனென வாழ்த்துக்காதை கூறும். செங்குட்டுவன் காலத்தையறிந்தபின் சேரலாதன் காலத்தில் கடினமொன்றுமில்லை. இக்காலத்தைக்கொண்டே கரிகாலன் காலத்தை எல்லைகட்ட முடியுமென்பது இவ்வாராய்ச்சியின் நோக்கம்.

கரிகாலன் வெண்ணிப்போர்க்களத்தில் சேர பாண்டியரைத் தோற்கடித்தமை இலக்கிய, வரலாறுகள் ஒப்பும் உயர்ந்த உண்மை. அந்த வெண்ணியில் சிறந்த சேரன்பெயர் பெருஞ்சேரலாதனெனப் புறநானூறு கூறுகிறது. அச்சேரலாதனே இமயவரம்பனுதல் வேண்டும். அப்படியானல் கரிகாலன் காலம் எளிதாகக் கிடைத்துவிடுவதாம். "கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின் நெடுஞ்சேரலாதன்" எனப்பதிற்றுப்பத்து கூறுகிறது. சாதவாகனர் வலிகுன்றியபிறகு கி. பி. 3-ம் நூற்றூண்டிலிருந்து கடம்பர் வலியுற்றனரென வரலாறு கூறும். ஆந்திரர் 2-ம் நூற்றூண்டின் கடைசியிலேயே வலிகுன்றி விடுகின்றனர். அப்போது கடம்பர் ஆட்சிக்காக முயற்சி செய்துகொண்டிருக்கவேண்டும். அதனை எதிர்க்கவே குட்டுவன், சேரலாதன் அனைவரும் அவருடன்

போரிடநேர்ந்திருக்கலாம். எனவே முடிந்தவரை இரண்டான் நூற்ருண்டின் பிற்பகுதியேயாகவேண்டும். அதுவும் சேரலாதனின் கடைசி வெற்றியாதல் வேண்டும்.

கி. பி. 166 — 193 என்ற செங்குட்டுவன் காலத்தே இமயப் படையெடுப்பு 190 கி. பி. யாளுலும் அவன் முன் பொருமுறை தன்தாயை கங்கைநீராட்ட வந்ததாகச் சிலம்பு கூறுகிறது. இக்காலம் 4, 5 ஆண்டு முந்தியதாயினும் 185ஐ ஒட்டியதாகலாம். இது சேரலாதனைப் போரில் இழந்த தன்தாயைப் புண்ணியநீராட்டவே கொண்டுசென்றதாகலாம்.

எனவே கி. பி. 185-ஐச்சுற்றியே இமயவரம்பன் கரிகாலனுடன் செய்த போரில் புறப்புண்ணுணி இறந்திருக்கவேண்டும். கி. பி. 2-ம் நூற்ருண்டின் கடைக்காற் பகுதியே கரிகாலன், இமயவரம்பன், குட்டுவன் அனைவரின் இமயப் படையெடுப்புக் காலமாகிறது. இதனை இமயப் படையெடுப்பு யுகமென்னலாம்.

கரிகாலனுடன் போரில் இறந்தவன் இமயவரம்பனே என்பது எப்படித் தெரிகிறது? புறநானூறு அவனை மிகப் புகழுகின்றது. "உவவுத்தலை வந்த பெருநாளமையத்து இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர் புன்கண் மாலை மலை மறைந்தாங்கு" என்கிறது புறம்: ஞாயிறு திங்கட்கு ஒப்பிடத்தக்க வேந்தருள் ஒருவன் கரிகாலனுனல் மற்றவன் இமயவரம்பனைப் போன்ற மாபெரியவனுகவே வேண்டும். இவ்வுவமைக்கு அத்தனை வலியுள்ளது. மற்றும் "புறப் புண்ணுணி மறத்தகை மன்னன் வாள் வடக்கிருந்தனன்"— மிகப்புகழுலகெய்திப் புறப்புண்ணுணி வடக்கிருந் தோனே" எனவும் அவனதுமானம் பாராட்டப் படுகின்றது. மேலும் பதிற்றுப்பத்தில் கூறப்படும் அவன்

கொடையும் வளமும் புறம் 65-ல் "மண்முழா மறப்ப பண்யாழ் மறப்ப இருங்கட்குழிசி கவிழ்ந்திழுதுமறப்ப, உழவரோதை மறப்ப"-என்றவடிகளால் நன்கு புலனாகின்றன. சிலம்பு, பதிற்றுப்பத்து இவற்றில் காணும் வீரம், கொடை, மானம், தலைமை யாவும் இப்புறச் செய்யுட்களில் காண்கின்றன.

ஆனால் Dr. இராசமாணிக்கனார் முதலாம் ஆசிரியர் பலர் கரிகாலன் * கி. மு. 14 – 17க்குட்பட்ட காலமென்பர். ஆனால் மேனாட்டறிஞர் பலரும் கி. பி இரண்டாம் நூற்றாண்டெனவும் கி. பி. 100 எனக் கூறுவோரும் உள்ளனர். எனவே கரிகாலன் இமயவரம்பன் காலத்திலிருந்திருக்கக் கூடுமென்பதில் வியப்பொன்றுமில்லை. இதற்கு இரண்டு மூன்று ஆதாரங்கள் தரலாம். அடியார்க்கு நல்லார் உரையில் மாதவிஅரங்கேற்றம் கரிகாலன்சபையில் என்கிறார். சிலப்பதிகாரம் அதனைத் தெளிவாகக் குறிக்காவிடினும் கரிகாலனுக்கு அண்மைக்காலமாயில்லாவிட்டால் நல்லார் அங்ஙனம் குறித்தற்கிடமிருந்திராது. மேலும் சிலப்பதிகாரத்தில் "விண்பெரு பெரும்புகழ்க் கரிகால் வளவன் தண்பதங்கொள்ளும் தலைநாட்போல" (6—160) என்றவடிகள் அவனது அண்மையாட்சியையேயுணர்த்துகின்றன. மணிமேகலையில் "மன்னர் கரிகால் வளவனீங்கியநாள் இன்னகர் போல்வதோர் இயல்பினராகி" என்றதோர் உவமை வருகிறது. கரிகாலன் வடக்கே படையெடுத்துச் சென்றபோது நகரம் எப்படி வெறுமையாய்க் கிடந்ததோ அதுபோல்என உவமை கூறவேண்டுமானால் அவ்வெறுமையைக் கண்டோர் கூறக் கேட்டிருக்கவேண்டும். கூறுவோரும் அந்நிகழ்ச்சி அண்மையதானால்தான் கூறுவர். பல நூற்றாண்டிற்கு முற்பட்டதானால் அதனை மறந்துவிடுவர். எனவே

* பல்லவர் Dr. பக். 8. 170 — 100 கி. மு.

கரிகாலன், மணிமேகலை சிலப்பதிகார காலத்திற்கண்மை யிலேயே இருந்திருத்தல்வேண்டும். மேலும் * திரு. மு. இராகவையங்கார் அவர்கள் முதலில் இமயஞ் சென்றவன் நெடுஞ்சேரலாதனேயென்கிறார். அப்படி யானால் இமயம் வென்ற கரிகாலன் அவர்க்கு ஒருநூற் றாண்டு முன்னராக எப்படி இருக்கமுடியும்?

கரிகாலன் இமயத்தை வென்றுவருகையில் மகத, வச்சிர, அவந்தி நாட்டுமன்னர்கள் அவற்குப் பல பொருள்களைக் காணிக்கையாகத் தருகின்றனர். இம்மகத வேந்தரை கனிஷ்கன் வென்று தனது நாட்டை விரிவாக்கி யதும் உஜ்ஜயினி (அவந்தி)யில் சத்ரபதியரசருள் ஓரினம் ஆண்டதும் இக்காலத்தில் வரலாறு குறிக்கின்றது. எனவே இச்செய்தியும் ஒத்துவருகின்றது.

மேலும் மணிமேகலையரசனாகிய கிள்ளியின் மகன் உதயகுமரனை மணிமேகலாதெய்வம் "இளமைநாணி முதுமையெய்தி உரைமுடிவு காட்டிய உரவோன் மருக" என்கிறது. ஆனால் புகாரின் பெருமையை சிபி, மனுநீதி இவர்களைக் குறித்துப்புகழும் கண்ணகி கரிகாலனைக் குறிக்கவில்லை. எனவே அவன் அப்போது மிக நெருங்கிய வனாயும் அவன்புகழ் அவ்வளவாகப் பரம்பரைக்கும்' உலகிற்கும் பரவாததாகவும் இருந்திருக்கவேண்டும். மணிமேகலைக்காலத்தே நன்கு பரவிவிட்டதால்தான் கரிகாலன்நீதியை எடுத்துக்காட்டி தெய்வம்கூறி யுள்ளது. எனவே செங்குட்டுவன் (சிலப்பதிகாரம்) காலத்திற்கு மிகஅண்ணியதே கரிகாலன்காலம் என்பதும் எனவே, கரிகாலனுடன் போரில் புறப் புண்ணுற்று உயிர்நீத்தபெருஞ்சேரலாதன் இமயவரம்பனேயென்பதும் தெளிவாகிறது.

எனவே கி. பி. இரண்டாம் நூற்ருண்டென்பதில் தடையில்லை.

அன்றி குட்டுவன் தாயைக்கங்கையாடுவித்தது 180 கி. பி. வாக்கிலென்ருல் சேரலாதன் இறந்தது 175 என வைத்துக்கொண்டால் அவன் இமயம் வென்று யவனர் கடம்பர் முதலோரை வென்றவனுகையால் அவன் காலம் 150 — 175வரைபோகலாம். எனவே கரிகாலன் காலம் கி. பி. 120—125க்குகூடப்போகுமாஞல் கி. பி. 100 எனக் கூறும் அறிஞர்கருத்துடன் நம்கணக்கு ஒன்றும் வேறுபட்டுவிடவில்லை, ஒத்து வருகின்றது.

# திருவள்ளுவர் காலம்

திருவள்ளுவர் காலம் கி. பி. 2-ம் நூற்றுண்டிற்குப் பின்னில்லையென்பது அனைவரும் ஒப்பியதோருண்மை. ஆனால் திரு. வையாபுரிப்பிள்ளையவர்கள் கடைச்சங்கப் புலவர் திருவள்ளுவமாலையில் பாடவில்லை. எனவே இரண்டாம் நூற்றுண்டிற்குப் பிற்பட்டவர்; நாலடியார், குறளைப் பின்பற்றிப் பாடியுள்ளது, எனவே அதன் காலமாகிய–பெருமுத்தரையர் காலம்–ஏழாம் நூற்றுண்டுக்கு முற்பட்டவர், ஆகவே 5-ம் நூற்றுண்டாகலாம் என முடிவு கட்டுகிறுர். மணிமேகலையின் "பொய்யில் புலவன்" என்ற குறிப்பை ஏற்க முடியாதென்கிறுர்.

வள்ளுவமாலையைக்கொண்டு காலத்தைத் திட்டப் படுத்தமுடியாதென்ப தனைவருமறிந்ததாம். மற்றும் கடைச்சங்கப் புலவர் ஒருவர் மற்றவரைப் பாராட்டித் தம் பாடலில் குறிப்பிடுவதன்றித் தனியே பாயிரம்பாடுவது மில்லை, பாடியதுமில்லை. எனினும் அவர்க்குக் கடைசியிலும் மணிமேகலைக்கு முன்பும் பதினெண்கீழ்க்கணக்கின்முதல் இயற்றப்பட்ட நூலாகும் குறள்எனக் கொள்ள இடமுண்டு. இல்லையென்பதற்குத்தக்க ஆதாரம் கிடைத்தாலன்றி மணிமேகலையில் வரும் "தெய்வம் தொழாஅள் கொழுநற்றெழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெருமழையென்றப் பொய்யில் புலவன் பொருளுரை தேருய்" என்ற குறிப்பை மறுத்தற்கில்லை. தெய்வந் தொழாளென்ற குறள் எழுத்தெழுத்தாக

வந்துள்ளது. இன்றுவரை மரபில் புகழுடன்வந்த பொய்யாமொழியார் என்பது "பொய்யில் புலவன்" எனக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு நூற்றுக்கு நூறு தெளிவாகவுள்ளதை ஏன் மறுக்கவேண்டுமெனப் புலப் படவில்லை இக்குறளும், பெயரும் வள்ளுவர்க்கில்லை யானல் வேறுயார்க்குரியது எனக்காட்டவேண்டியது மறுப்போரது கடமையாகும். அதுவரை அது வள்ளுவரையே குறித்தலாக் கொள்ளவேண்டுவதே. எனவே மணிமேகலைக்கு முற்பட்டதே வள்ளுவரது காலம்.

சிலப்பதிகாரத் தண்டமிழ்ச்சாத்தனும், மணிமேகலைச்சாத்தனாரும் ஒருவரல்லர் வேறே என்பதுண்மையே. ஆனல் அதற்கென இருகாவியங் களையும் ஆறும் நூற்றுண்டிற்கப்பால் கொண்டுபோதற் காதாரமிருப்பதாத் தோன்றவில்லை.

செங்குட்டுவனும், கரிகாலனும் வரலாற்று மனித ராவர். இளங்கோவடிகள் தம் வாழ்நாளில் நடந்ததைத் தானேபாடினர் என்பதனையும் மறுத்தற்காதாரமில்லை. சிலம்பில் காணுத புகாரைக் கடல்கொண்ட நிகழ்ச்சியும், கிள்ளிவளவப் பெயரும் மேகலையில் காண்டலால் சிலம் பிற்கு 50, 100 ஆண்டுகள் பிந்தியென்றுவது மணிமேகலையைக்கொள்ளலாம். மணிமேகலைக் கூல வாணிகன் மதுரைச் சாத்தனர் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறனைப் புறத்தில் பாடியுள்ளார். புறத்தில் 2-ம் நூற்றுண்டிற்குப்பிற்பட்ட அரசர்யாரும் இருப்பதாத் தெரியக்காணேம். எனவே அவர் எப்படியும் 3-ம் நூற் றுண்டின் முற்பகுதியினர் எனக்கொள்ளினும் வள்ளுவர் அத்தனைப் புகழ் பரப்புவதற்கு 50 ஆண்டுகட்குமேல் வேண்டும். எனவே கி. பி. முதல் நூற்றுண்டென்போர் கொள்கையும் ஒப்புதற்குரியதே. எப்படியும் 2-ம் நூற் றுண்டிற்குப் பின்பில்லை. இன்னும் பாக்கியம், பூசனை,

ஆசாரம், மந்திரி முதலிய வடசொற்கள் நாயன்மார் காலத்திற்கேயுரியவை எனக்கொள்ளவேண்டாம். கடைச் சங்கத்திற்குரித்தல்ல என்பதில் தவறில்லை. ஆனால் அதனையடுத்த சிலப்பதிகாரமுதலிய நூல்களில் இவைபோன்ற வடசொற்கள் காணப்படாமலில்லை. எனவே கடைச் சங்கத்திற்கும், நாயன்மார்க்கும் இடைப் பட்ட நூல் வழக்கிற்கு இச்சொற்கள் உரியனவே எனக் கொள்ள இடமுண்டு.

சங்கத்திற்கும், நாயன்மார்க்கும் இடையே மற்ற பதினெண்கணக்கு நூல்கள் விரவியிருக்கலாமேயன்றி அனைத்தும் கி. பி. 650-ஐச் சுற்றியே தோன்றியிருக்க வேண்டுமென்ற பிள்ளையவர்கள் முடிபு பொருந்துவதாத் தோன்றவில்லை. முத்தரையர் காலம் நாலடியார் கால மெனக்கொண்டு அவர்கள் 7-ம் நூற்றுண்டினர் எனக் கொண்டதும் பொருந்தாதாம். இவர்கள்பெயர் இந் நூற்றுண்டில் வெளிப்பட்டாலும் இவர்கள் வாணகோவரையர், வேட்டரையர்போன்ற தமிழகத்தே நீண்ட காலம் ஆண்ட குறுநில மன்னராவர். இவர்கள்குடி தஞ்சைப்பகுதியில் எவ்வளவுகாலமாக இருந்துள்ள தெனத் தெரியாதவரை இவர்களை 7-ம் நூற்றுண்டின ராகவே கொள்ளமுடியாது.

# தொல்காப்பியர் காலம்

பாரதத்தில் தமிழ்நாடு குறிப்பிடப்படுகிறது. பாரதப் படைக்குப் பெருஞ்சோறிட்ட உதியஞ்சேரலை முடிநாகராயர் பாடுகிறார். நேரே சோறிட்டவனையல்லாவிடினும் அவன் வழிவந்தோனைப் பாடினாராகலாம். ஒருவனை விளித்து, நீங்களெல்லாம் அப்படிச் செய்தவர்கள், இப்படிச் செய்தவர்களென்னும்போது அச்செயல் எதிரில் இருக்கும் ஒருவனுடையதாகமட்டும் இருக்கவேண்டு மென்பதில்லை. அவன் முன்னோரையும் குறித்தலுண் டன்றோ? எப்படியும் இப்பாடல் புறநானூற்றில் பழமை யுடைத்தாகலின் கி. மு. 4, 5-ம் நூற்றாண்டினதாகலாம். பாரதமே கி. மு. சுமார் 12-ம் நூற்றாண்டெனத்தானே கணிக்கின்றனர், அது பொருத்தமே. கி. மு. 6-ம் நூற் றாண்டில் வட இந்தியாவிலிருந்த சிறு குடியரசு நாடுகளில் காந்தாரம், குரு, பாஞ்சால நாடுகள் குறிக்கப்படுகின்றன. சிசுநாகனுடைய கிரிவிரசநகர் பேசப்படுகிறது அதனில் அஜாதசத்ருவின்மகன் உதயணன் ஆள்கிறான். இச் சிசுநாகரை எதிர்த்தே அடுத்த நந்தர் காலத்தில் பாண்டவ வம்சம் அழிந்ததாகப் பரம்பரை கூறும். எப்படியும் கி. மு. 6-ம் நூற்றாண்டில் உள்ள பாண்டவர்கால நாடுகள் அந்நூற்றாண்டிலும் அவர் பரம்பரைக்குப் பகை யாகவேயிருந்ததனால் (சிசகன் பகை, அவன் கிரிவிரசத் தில் ஆண்ட சிசுநாகரிடமும் தொடர்ந்தமை) அப்பகை

500, 600 ஆண்டுகளாத் தொடர்ந்தது என்பதே மிகுதி. எப்படியும் பாரதகாலத்திற்கும் கி. மு. 6-க்கும், பாரத கால குறுநாடுகளையழியாதுடைமையின், தொடர்புண்டு.

பாணினி 6-ம் நூற்றாண்டினராக்கொள்ளப்படுகிறார். 'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணை யாத் தென்மொழியைக் குடமுனிக்கு வலியுறுத்தார் கொல் லேற்றுப் பாகர்' என்ற கற்பனையில் வரும்மரபு, பாணினீயமும், அகத்தியமும் காணுமையால் அவர் மாணவரதாய தொல்காப்பியமும் ஒரு தன்மையானதாயும் ஒரே காலத்தே தோன்றியதாயும் கொள்ளப்பட்டதேயாம். ஆம், அகத்தியமும், தொல்காப்பியமும் இடைச்சங்கத் தவெனவே கொள்ளப்படுவன. தொல்காப்பியத்தை கி. மு. 4-ம் நூற்றாண்டாகக் கருதுவதானல், அதன் முன்னிருந்த நூல்களும் ஆசிரியரும் (அகத்தியர் அன்றில்லை) 200 ஆண்டுகள் முன்னிருந்தனரென்பது பொருத்தந்தானே? இலக்கண இலக்கியத் தோற்றங்கள் வடநாட்டிற்போலவே தென்னுட்டிலும் ஒரே காலத்தும் ஒரேதரத்திலும் தோன்றியுள்ளன. இக்கோட்பாடு தொல்காப்பிய, கம்ப ராமாயணத்தோற்ற காலநிலையை யொப்பிட்டுப்பார்த்தால் வலியுறும். இலக்கணம் கி. மு. 6 ஆனல் அதற்கு முற்பட்ட இலக்கிய காலம் (இலக்கியங் கண்டு இலக்கணமியம்பலின்) 500, 600 ஆண்டுகளெனில் அதுவும் தவறில்லை. எனவே பாரதகாலச் சேரனை நேரே பாடியது புறநானூற்று 2-ம் பாடல் என்பதிலும் முரண் மிகுதியில்லை. தமிழிலக்கிய வழக்கு அன்று இருந்துள்ளது உண்மை.

புற, அகநானூற்றுப் பாடல்கள் கி. மு. 2, 3 நூற் றாண்டிற்கும் அதற்குப்பிற்பட்ட நூற்றாண்டுகட்கும் உரியவை. மோரியர் படையெடுப்பு இவற்றுள் குறிக்கப்

படுகின்றன. மோரியர் கி. மு. 325 முதல் 185 வரைப் பட்டவராவர். கடைச்சங்க நூல்களில் இல்லா வழக்குகள் தொல்காப்பியத்திலுண்மையால் அவ்விலக்கணம் அவற்றிற்கு முந்தியவெனத் தெளிவாகின்றது. கடைச் சங்கநூல்கள் தெளிவாக முன்கூறியாங்கு கி. மு. 3-ம் நூற்றுண்டிலிருந்து தொடங்குவதால் தொல்காப்பியம் அவற்றிற்குமுன் ஓரிரு நூற்றுண்டுக் குரித்தாகலாமெனக் கருதுவர் ஆராய்ச்சியாளர்.

தமிழ்வளர்ச்சிக்காலத்தைச் சங்ககாலமெனக் கொண்டால் மூன்று பிரிவான வளர்ச்சிக்கு (சங்கத்திற்கு) இடையே ஒவ்வொரு கடல்கோள் ஏற்பட்டுள்ளதாகக் கர்ணபரம்பரை கூறுகிறது.

இலங்கையின் (Tenant,Ceylon) இராஜாவளி, என்ற நூல்களால் கி. மு. 12, 6, 3-ம் நூற்றுண்டுகளில் கடல் கலக்கமேற்பட்டுள்ளதாக அறிகிறோம். இவற்றுள் கி. மு. 306-ன் கடல்கோளை கடைச்சங்கத் தொடக்கமாக் கொண்டாலும், 6-ம் நூற்றுண்டின் (கி மு. 504.) கலக்கத்தை இடைச்சங்கத்தின் தொடக்கமாக்கொளினும் பொருந்தும். எனவே இதன்படியும் தொல்காப்பியர்க்குரிய இடைச்சங்க காலம் கி. மு. 6—3-க்குட்பட்ட நூற்றுண்டாகலாம்.

இனிக் கடைச்சங்க நூல்களிலில்லாத் தொல்காப்பிய வழக்குகளாவன :

1. தொல்காப்பிய எழுத்து, சொல் உரையாசிரியர் பலவிடங்களில் சூத்திரங்கட்கு உதாரணங்கொடுக்க முடியாவிடில், உளவேல் கண்டுகொள்கவெனவும், வேறு பொருள் செய்தும் செல்வதால் தொல்காப்பியவழக்கு கடைச்சங்க விலக்கியங்களில் வீழ்ந்தமை காணலாம்.

2. அதோளி, இதோளி, ஆக ஆகல், என்பதென்பது, ஔஔ முதலியன.

3. சகர சைகார முதலெழுத்துச்சொற்கள் கடைச் சங்க நூல்களில் வந்துவிட்டன. தொல்காப்பியத்தே இம்முதல்கள் மறுக்கப்படுவன.

4. அழன், புழன், குயின் என்னுஞ்சொற்கள்.

5. ஆண் முதலா பெயர் வழக்கற்றன.

6. வருது, சேறு முதலிய குற்றுகரவீற்றுத்தன்மை யொருமைவினைகள்.

7. மற்றும் 'புறனடைகளில்' எடுத்துக்காட்டும் பிற வழக்குகள்.

---

# தொல்காப்பியர் யார்

தொல்காப்பியர் எச்சமயத்தைச் சார்ந்தவராகலாம் என்றகேள்வி பிறக்கிறது. இதற்கு விடையிறுத்து விட்டால் அவரது காலத்தையறுதியிடலும் எளிதாகலாம். அவர் சமண சமயத்தைப்பற்றியவராகலாம் என்பதே எனது கருத்தாகும். எனவே அறிஞர் பலர் கருதுகிறபடி அவர் காலம் கி. மு. 5-ம் நூற்ருண்டுவரைச் செல்லும். அதாவது சுமார் 3400 ஆண்டுகட்கு முற்பட்டவர் என்பது ஒப்பக்கூடியதாம்.

அவர் சமணர் என்பதற்கு பனம்பாரர்பாயிரம் ஓர் சான்ருகலாம். அகத்தியம் நிறைந்த தொல்காப்பியரென்ருமல் ஐந்திரம் நிறைந்த எனப்பாயிரம் பகர்கின்றது. ஐந்திரவியாகரணமொன்றிருந்ததாக சிலம்பு காடுகாண் காதை கூறுகிறது. "புண்ணிய சரவணம் பொருந்துவிராயின் விண்ணவர்கோமான் விழுநூலெய்துவீர்—99" என்கிறது. இலக்கணத்தில் சிறந்த அறிவும், ஊக்கமுமுடைய சமணர் இந்தவியாகரணத்தையே தமக்கு முதனூலாகக்கொண்டு போற்றியிருக்கவேண்டும். இந்திரன் என்ற ஒரு தலைவனுடன் சமணர்க்குத் தொடர்பிருந்தமை அவரது சமயவொழுக்கங்களால் அறியப்படுகின்றது. "பல்புகழ் நிறுத்த படிமத்தோனே" என்பதில் படிமம் சமணர்க்குரித்தெனச் சம்பந்தர் தேவாரத்தாலும் தெரிகிறது. *திரு. ரா. இராகவையங்கார் அவர்கள் ஐந்திரம் ஜைனர்க்குரியதேயெனச் செந்தமிழில் தெளிவாயெழுதியுள்ளார்.

---

* இரா. ரா. ஐயங்கார்—தமது ஆராய்ச்சி நூல் தமிழ் வரலாறு. அகத்தியர் 204. II பதிப்பு.

மற்றும் தொல்காப்பியன் என்ற பெயரும் காப்பியம் என்றபெயரும் ஜைனரால் மிகுதியும்வழங்கப் பட்டுள்ளன. பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்ற பெயர்களே போதும். அகச்சான்றுஒன்று தந்து ஆராய்வோம்.

' உந்து முதலா முந்துவளிதோன்றி '' என்பதில் எழுத்தொலி வளியின்தொழிலெனக் கூறப்படுகிறது. ஒலி வானின்றொழிலென்பது ஆகாயம் ஒன்று உண்டென்போர் கொள்கையாம். ஆனால் பூதம் நான்கேயென்னும் ஜைனர் வானமுண்டென ஒப்புவதில்லை. எனவே ஒலியணுத்திரள் காற்றின்றொழில் என்பர். இதனை நச்சினார்க்கினியர் எழுத்ததிகாரப்பாயிரவுரையில் நன்குவிளக்குகிறார். மணிமேகலையில் 27 — 112 "உரந்தரு முயிரோ டொரு நால்வகை யணு நிலநீர்தீக்காற்றென நால்வகையின" என ஆசீவகன் (ஜைனப் பிரிவு) கூறுவதால் ஜைனர்க்குப் பூதம் நான்கேயென்பது புலப்படும்.

மற்றும் கொடிநிலை கந்தழிவள்ளியென்ற வடுநீங்கு சிறப்பின் மூன்றும் கடவுள் வாழ்த்தொடுங் கண்ணிய வருமாறமைத்துப் பாடல், ஜைனர் வழக்கேயாம். குறளில் வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் முதலான மூன்றும் மேற்கூறிய இலக்கணத்திற்கிலக்கியமாகுமென திரு. சோமசுந்தர பாரதியார் கூறுவது பொருத்தமேயாகும். இளங்கோவடிகளும் மங்கல வாழ்த்தில் ஞாயிறும் திங்களும் போற்றி (கொடிநிலை) மாமழையையும் (வள்ளி) சோழனையும் (கந்தழி) போற்றித் தொடங்குவதில் இக்கொள்கையே வற்புறுத்தப்படுவதாயறியலாம். எனவே ஜைனநூல்கள்கொண்ட இவ்வழக்கினை தம் நூலில் உணர்த்திய தொல்காப்பியர் ஜைனராகலாமெனக் கருதுவதில் தவறில்லையாம்.

மேலும் நிலையாமையைக் காஞ்சிப்புறத்திணையில் வற்புறுத்தும் போக்கு ஜைனர்க்குப் பெரிதும் உகந்ததாம். அதனினும் சிறப்பாக மனித வாழ்வடையும் வெற்றியாக, வாகையில் ஒழுக்கத்தினை முதன்மையாக வற்புறுத்துதல் ஜைனர்க்கேயுரிய பெரிய நெறியாகும். காமநீத்த பாலினுனும் எனப் பிறர்மனை நோக்காவிரதத்தைச் சமணரே முதன்முதல் பெரிதும் வற்புறுத்தினர். "கட்டமையொழுக்கத்துக் கண்ணுமை, அருளொடு புணர்ந்த அகற்சியும்"—என்ற வாகைத்திணையடிகட்குக் கூறப்படும் உரையுடன் பார்க்கையில் கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை முதலிய சீலங்கள் தமிழில் மிகுதியாக ஜைனராலேயே வற்புறுத்தப்பட்டன.

எனவே மேற்கூறிய குறிப்புக்களைக்கொண்டு நோக்குகையில் தொல்காப்பியர் ஜைன சமயத்தைப் பற்றியவராகலாம் என எண்ணுதற்கு இடமிருக்கிறது.

---

# மணிமேகலை ஆசிரியர்

நூலில் குறிப்பிடப்பட்ட ஆசிரியர் மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச்சாத்தனார் என்பது. இவரை செங்குட்டுவற்குக் கண்ணகி வரலாற்றைக்கூறிய தண்டமிழ்ச் சாத்தனுக்கொண்டே குறிக்கப்பட்டுள்ளது. மலைவளங் காணச்சென்ற செங்குட்டுவனிடம் கண்ணகியைப்பற்றிக்கூறிய அதே சாத்தனுரா மணிமேகலையாசிரியர் என்பதில் ஐயமுள்ளது. அவர்தானு மதுரைக்கூலவாணிகன் சாத்தனுர் என்பதும் ஆராயத் தக்கதாம்.

காட்சிக்காதை 66-ல் தண்டமிழாசான் சாத்தனிஃது ரைக்கும் ஒண்டொடி மாதர்க்குற்றதையெல்லாம் என்ற அடிகளே இவ்வாசிரியரைப்பற்றிய கருத்துக்கெல்லாம் ஆதாரமாம். இவர் சொல்லக்கேட்டு முக்காண்டத்தால் முடியுடை மூவேந்தரையும்பற்றி இளங்கோ எழுதியமை யால், அவர் எழுதிச் சொல்ல சாத்தனுர் கேட்டாரெனவும் அப்படியே மாற்றிச் சாத்தனுர் மணிமேகலையைக்கூற இளங்கோ கேட்டாரெனவும் கற்பனை செய்யப் பட்டுள்ளது. சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டின் பதிகங்களும் ஒருவராலேயே எழுதப்பட்டிருக்க வேண்டு மென்பதனை அவற்றின் போக்கும் முடிவுமே காண்பிக் கின்றன.

“இளங்கோ வேந்தனருளிக் கேட்ப
வளங்கெழு கூலவாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமேகலைத்துறவு
ஆறைம் பாட்டினு ளறிய வைத்தனனென்”

இது மணிமேகலைப்பதிக முடிவு. இவ்வாறைந்தும், உரைசாலடிகளருள மதுரைக் கூலவாணிகன்சாத்தன் கேட்டனன். இவற்றுள் ஆறைம்பாட்டு, அருள, கேட்ப முதலியவிடங்கள் ஒரே கையிலிருந்தெழுதப்பட்டன வாகத் தெளிவாகின்றன.

சிலப்பதிகாரத்தைப் பார்த்து மணிமேகலை எழுதப் பட்டிருக்கவேண்டுமென்பதற்கு அகச்சான்றுகள் நிறைய வுள்ளன. மேலும் சிலப்பதிகாரமெழுதி 25, 30 ஆண்டு கழித்தே மணிமேகலை எழுதப்பட்டிருக்கவேண்டும்.

"மகனை முறைசெய்த மன்னவன் வழியோர்
துயர் வினையாளன் ரோன்றின னென்பது
வேந்தர் தஞ்செவி யுறுவதன் முன்னே
ஈங்கிவன் தன்னையு மீமத்தேற்றி"

என்றவடிகள் "எம்மோரன்ன வேந்தர்க்குற்ற செம்மையினிகந்த சொல்செவிப்புலம்படாமுன் உயிர்பதிப் பெயர்த்தமை யுறுகவீங்கென" என்ற சிலப்பதிகார வடிகளை எவ்வளவு பின்பற்றி எழுதப்பட்டுள்ளனவென் பது உள்ளங்கை நெல்லியாம். "செய்தவத்தாட்டியைச் சிறுமைசெய்தேன், என்மகற்குற்ற இடுக்கண் பொறுது பொன்னேரனையாய் பொறுக்கென்றவடொழ" இவ் வடிகளை "சிறுமுது குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்" என்ற கோவலன் கழிவிரக்கத்துடன் ஒப்பிடுக. மணிமேகலைத் துறவும் கேளாயோ தோழி: சிலப்பதிகாரத்தில் மணிமேகலை துறந்ததும் கண்ணகி தேவருலகம் சென்றதுந்தான் கூறப்பட்டுள்ளது. இப்போது மணிமேகலைக்கு 3, 4 வயதுகூட இருந்திருக்க முடியாது. பின்னர் மணிமேகலை துறவுபூண்டு வஞ்சியில் சமயத்திறம்கேட்கையில் இளையள் என்று யாவரும் கூற மறுப்பர் எனப்படுகிருள். பின் காஞ்சியில் தர்மோப தேசமும் அறவாழ்வும் கொண்டிலங்கும்வரை மணிமேகலை கூறுகிறது.

இப்போது அவளுக்கு வயது சுமார் 25, 30 இருக்க வேண்டும். இவள் நல்ல பருவமுற்றபின் அறமேற் கொண்டு மணிபல்லவம், சாவகம் முதலியவிடங்களெல் லாம் சென்றுவந்து வஞ்சி சென்று காஞ்சியில் தங்குகிருள். இவ்வளவிற்கும் இவட்கு 30 வயதிற்குக் குறைந்திருந்தால் முடியாது. உதயகுமரனுக்கு அறிவுரை கூறவும், பிற சமயத்தார் கூறுவதனையுணர்ந்து இகழ்ந்துநகைக்கவும் கூடிய உணர்வுவர இவ்வயது அதிகமன்று. எனவே 25, 30 ஆண்டுகள் தள்ளியே மணிமேகலை எழுதப்பட் டிருக்கவேண்டும். அன்றி 25 ஆண்டு தள்ளி இளங்கோவடிகள் சாத்தனுருடன் சிலப்பதிகாரம் எழுதினுர் என்றுரைக்கவுமுடியாது. மணிமேகலையில் புகார் கடலால் கொள்ளப்பட்டுவிடுகிறது. புகார் கிள்ளிவளவன் என்பானுல் ஆளப்படுவது பெயருடன் தெளிவாகக் கூறப்படுகிறது. பதிகங்களைப் பார்த்தால் ஏதோ ஒரே சமயத்திலோ அன்றி மிகஅண்மைக் காலத் திலோ ஒருவர்க்கொருவர் மற்றவர் பாடியதைக் கேட்டது மாதிரி நினைக்குமாறு கூறப்படுகிறது. இதற்கு மேற்கூறிய குறிப்பால் இடமில்லையெனவறியலாம்.

இரு நூல்களிலும் சமயநிலையே வேறுபடுகின்றது. புகார் ஜைனமும்பௌத்தமும் கலந்து பிணக்கின்றி வாழ்ந்தஇடமாகச் சிலம்பு கூறும். இளங்கோவிடம் சமயக்காழ்ப்பினைக் காணேம். கோவலன் இறந்தபின் அவன் தந்தை பௌத்தமடத்தையடைகிருர். ஆனுல் கண்ணகியின் தந்தை ஜைனத்துறவுபூண்டுவிடுகிருர். நாடுகாண் காதையில் கோவலன் பௌத்த விகாரத்தைக் கடக்கிருனெனவும் ஜைனசிலாதலத்தை வலங்கொண்டா னெனவும் கூறப்படுகிறது. அவனேடிருந்த மாதவி பௌத்தத் துறவியாகிருள். மணிமேகலைக்கு அத்தெய்வப் பெயரைஇட கோவலன் சம்மதிக்கிருன். ஆனுல்

மணிமேகலையில் சமயக்காழ்ப்புக் காணப்படுகிறது. புகார்ச் சோழன் பௌத்தத்திற்கே அடிமையாகி "கறையோரில்லாச் சிறையோர் கோட்டம் அறவோர்க் காக்கின அரசாள் வேந்தன்" ஆகிருன். மற்றும் ஆசீவக முதலிய சமயக்கருத்தையெல்லாம் கேட்டபின் மணிமேகலை "நன்றலவாயினும் நான்மாறுரைக்கிலேன் அறிந்தோருண்டோ"வென்று நகுகிருள். மேலும் அராந்தானத்துளோன் நாணமுமுடையு நன்கனம் நீத்து மண்ணு மேனியனை புழுக்கறைப்பட்டு வருந்துவோனுகக் கேலி செய்கிறது ஜைனத்துறவியை மணிமேகலை. இங்ஙனம் இளங்கோவடிகள் பின்பற்றித்துறவியாய ஒரு சமயத்தைப் பழித்தும் நகைத்தும் எழுதிய நூலினை அவர் முன்னரே படித்தரங்கேற்றினுரெனில் பொருந்துமா, அவர்தானதனைக் கேட்டிருப்பாரா? மற்றும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் முன்பே, அவரது மதத்தை இங்ஙனம் பழிப்பாரா ஒரு புலவர்?

மேலும் சிலப்பதிகார காலத்தே வாழ்ந்த இவர் உயிர் விட்டுக் கோலைநிறுத்திய ஆரியப்படை கடந்தவனையோ அவன் மகன் வெற்றிவேற்செழியனையோ பாடியதாகக் காணேும். ஆனுல் புறத்தில் மதுரைக்கூலச்சாத்தனுர் சித்திரமாடத்துத்துஞ்சியநன்மாறனைப் பாடியுள்ள செய்யுள் ஒன்றுள்ளது. இதனுல் இவர் காலத்திலும் இவரா தண்டமிழ்ச் சாத்தர் எனவும் ஐயமேற்படுகிறது.

சிலம்பைப்போலன்றி இவர் சமய நோக்குடனேயே எழுதுகிருர். செங்குட்டுவனிடம் இருந்து இளங்கோமுன் நூலரங்கேற்றிய இவர் சேர நாட்டவராக, அன்றி அங்கு நீண்டநாள் இருந்திருக்க வேண்டும். ஆனுல் இவர் எழுதியதெல்லாம் காவிரி, புகாரைப்பற்றியேயாம்.

சோழன் நீதிபற்றியேயாம். சேர நாட்டைப்பற்றி "வஞ்சி சென்ற"ளென்ற ஒருகுறிப்பைத்தவிர வேறொன்று மில்லை. ஆனால் சோழன் கிள்ளி "சிலைக்கயனெடுங்கொடி காரியாற்றுக்கொண்டவன்" எனச் சேரனை வென்றடிப் படுத்திய சோழனைப்பற்றி சேர இளவரசத்துறவியிடமே கூறுவாரா ஒரு புலவர்? இது சேரரைப் புகழ்ந்ததாமா? எனவே இவர் சோழ நாட்டினராகவேண்டும். சேரனை இகழ்ந்து சேரனிடமேஅரங்கேற்றினாரென்பது பொருந்தாததாம். மேலும் காந்தமன்வேண்ட அகத்தியன் கரகம் கவிழ்த்த காவிரிப் பாவையின் கதை விரிவடைந்துள்ளது; சிலம்பில் இது காணோம். எனவே மணிமேகலைக்காலம் நீண்டநாள் பிற்பட்டதாகலாம். எனவே இரு சாத்தரும் ஒருவரா?

---

# சங்கப் பாடற் பழமை

சங்கப் பாடல்களின் பழமையை வரையறுக்கும்போது கடைச்சங்க காலமெனப்படும் கரிகாலன்காலமும் (Literary Period) வரையறுக்கப்படுகிறது. இப்போது கிடைக்கும் சங்கப்பாடலுள் புறநானூற்றின் இரண்டாம் பாடலாகிய பெருஞ்சோற்றுதியலாதனைப் பற்றி முரஞ்சியூர்முடிநாகராயர் பாடியதே மிகத் தொன்மையுடையதென்பது அறிஞர் கருத்தாம். "ஈறைம்பதின்மரும் பொருதுகளத்தொழிய பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" என்பதே அதற்காதாரமான அடிகள். நால்வேத நெறிதிரியினும் என வேதங்களும் அங்கு குறிக்கப்படுகின்றன. பாரத காலத்தை இதற்குமுதல் உறுதிப்படுத்தவேண்டும். கி. மு. 6ம் நூற்றாண்டு பௌத்த, ஜைன தோற்றக்காலம். கி. மு. 7-ம் நூற்றாண்டிற்குமுன் இந்திய வரலாறு ஒன்றும் தெளிவற்றதென ஆசிரியர் கூறுகின்றனர். எனினும் கி. மு 7-ம் நூற்றாண்டில் கடல் வாணிபஞ் சிறந் திருந்ததெனவும் மிகப் பழங்காலந்தொட்டு *சப்ப, ராஜ கிருஹ, சிரவஸ்தி, சாகேத, காசி, கௌசாம்பி போன்ற ஆறு பெருநகரங்கள் இருந்தனவாகவும் புத்த நூல்கள் கூறுகின்றன. எனினும் இவற்றுள் பாரதகால நாடுகளோ, நகரங்களோ தென்படவில்லை. ஆறும் நூற்றாண்டின் தொடக்கத்தில் புத்த, ஜைன நூல் களின்படி 16 பேரரசுகள் வடநாட்டில் இருந்தனவாக அதுவும் இமயமுதல் கங்கைப் பகுதிவரை பரவியிருந்தன வாகக் கூறப்படுகின்றன. அவற்றுள் காந்தாரம், அங்கம்,

பாஞ்சாலம், குரு என்பன. பாரதக் கதையின் முக்கிய நாடுகள். பாரதம்போன்ற இதிகாசங்கள் எழுதப்பட்ட காலத்தைப்பற்றித் தெளிவில்லாவிடினும் அவை கி. மு. 2 முதல் கி. பி. 4-ம் நூற்றாண்டு வரையாகலாமென அறிஞர் கருதினும் அக்கதையில் வரும் நாட்டின் பெயரும் உறவுங்கூடப் பொய்யென அவர்கள் கூறமாட்டார்கள். எனவே குரு நாட்டவரும் அங்கர்கோன் கன்னனும் அந் நாட்டிற்குரியவரே. இதனைப்பற்றியவரை கதை பொய் யாகாது. எனவே இந்நாடுகள் கி. மு. 6-ன் தொடக்கத் திலேயே குறிக்கப்படுகின்றன,

எனவே பாரதம் இன்றைக்கு எப்படியும் 2600, 2700 முற்பட்டதாகவேண்டும். எனவே நேராகப்பார்த்துப் பாடியதாக அமைந்த இப்பாடல் 2600 ஆண்டுகட்கு முற்பட்டதெனலாம்.

அடுத்து பிம்பிசாரன் காலத்தே அதாவது கி. மு. 6 ன் இடையில் அவந்தி, வத்சம், கோசலம், மகதம் இவற்றைத் தவிர்த்து பல குடியரசுப் பகுதிகள் வடக்கே இருந்துள்ளன, அவற்றுள் சாக்யர், மல்லர், மோரியர் என்பாரது பகுதிகள் சிறந்தன. இந்த மோரியரைப் பற்றியே புறம் 175ஆதனுங்கனைக் கள்ளில்ஆத்திரையனூர் பாடிய பாடல் குறிக்கக்கூடும். "விண்பொரு நெடுங் குடைக் கொடித்தேர் மோரியர், திண்கதிர்த்திகிரி திரிதரக் குறைத்த உலக விடைகழியறைவாய் நிலேயிய மலர்வாய் மண்டிலம்" என்றவடிகளில் மோரியர் குறிக்கப்படுகின் றனர். இவர்கள் குடியரசுடையயராய் சிறப்புடன் வாழ்ந்துள்ளனர். ஆதனுங்கனைப்போன்ற வள்ளலர் பழமையான வேங்கடத்தை இக்காலத்தேயே ஆண்டுள்ளனர்.

பிம்பிசாரன் புதல்வனுகிய அஜாதசத்துரு கடைசிப் பகுதியில் ஆண்டிருக்கிருன். இவன் காலத்தே மகதநாடு வன்மைமிக்கதாகியுள்ளது, இவன் மிகச் சிறந்த அரசனுகப் போற்றப்படுகிருன், இவன் காலத்தேதான் இவன் தந்தை காலத்தலைநகரமாய ராஜகிருஹத்தின் அருகாக பாடலியில் லிச்சாவியரைத் தடுப்பதற்காகக் கோட்டை கட்டினுன். 'வெண்கோட்டியானை பூஞ்சுனைபடியும் பொன்மலி பாடினிபெறீஇயர்'' என்ற குறுந்தொகையடிகள் படிமத்துமோசிகீரனுர் பாடியன. எனவே பாடலி அரணுகத்தோன்றிய இவன் காலத்தாயின் இப் பாடல் கி. மு. 6-ன் கடைசிப்பகுதியாகலாம். அன்றி பாடலி சிறந்த தலைநகராயிருந்த சந்திரகுப்தமௌரியன் காலத்தது இப்பாடல் என்பதைவிட இந்நகரைத் தலைநகராக்கிய உதயணன் காலத்ததாகவே கூறலாம். உதயணனைப்பற்றி மணிமேகலையிலேயே குறிப்பு வருகிறது, அப்படியானுல் கி. மு. ஐந்தாம் நூற்ருண்டின் முற்பகுதியாகலாம் இப்பாடற்காலம். கி. மு. 6-இலேயே பாடல்கள் காண்பதால் இக்காலம் பொருத்தமற்றதென சந்திரகுப்தனின் கி. மு. 324 — 300க்கு கொண்டு செல்ல வேண்டியதில்லை. பாடலியைத் தோழி பெறட்டும் எனத் தலைவிகூறலால் பாடலி வலியற்ருேரால் ஆண்ட காலமாதல் வேண்டும். அது உதயணனுக்குப் பிற்பட்டோர் காலமாகலாம். அவர்களே நாட்டை முறை வழுவியாண்டதாக வரலாறு கூறுகின்றது.

# மௌரியர் படையெடுப்பு

அகப்புறநானூறுகளில் வரும் "கொடித்தேர் மோரியர்" (புறம்) 'இயல்தேர் மோரியர்' (அகம்) என்ற குறிப்புக்கள் வடநாட்டிலாண்ட சந்திரகுப்தன் முதலான மௌரியரது பரம்பரையையே குறிப்பதாக ஆராய்ச்சியாளர் பலர் கருதுவர். ஆனால் திரு வையாபுரிப்பிள்ளை போன்றோர் இதனை மறுக்கின்றனர். இது 'மறுப்பதற்கெனவே' எழுந்த மறுப்பெனத் தெரிகின்றது இங்கு மோரியர் என்பது 'ஓரியரே' என்பவர், இலக்கியத்தே பலவிடத்தும் இப்பாடமே–மோரியர்–வந்துண்மையை மறுக்க முடியாது; எங்கும் பாடபேதம் காட்டவுமுடியாது.

இதனை வெறும் புராணக்கதையென்பவர் தம் கட்டுரையின் பிற்பகுதியில் ஓரிடத்தே வரலாற்றுக் குறிப்பாகவும் தோன்றுகிறதென்கிறார். மேலும் உரைக் குறிப்பில் ஓரியரை சக்கரவாள சக்ரவர்த்திகள், விச்சாதரர், நாகர் எனக் குறிப்பிடுவதை அவரே எடுத்துக்காட்டுகிறார். எனவே அப்பரம்பரை யாரதெனக் கூறின் அதனை ஆராய வேண்டுவது கடமைதானே?

ஒரு காலத்தில் வழங்கும் 'சொல்லோ, நிகழ்ச்சியோ" பெரிதும் ஒரே பொருளையோ அல்லது அதன் பகுதியையோதான் குறிக்குமன்றி பெரிதும் வேறுபட்ட தொன்றனைக் குறித்தலில்லை. எனவே இவரே ஓரிடத்தில் சில ஐயங்களுடன் இவர் மோரியராகலாமோ எனக் கருதுகிறார். அப்படியாகையில் "பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த அறையிறந்து–மோரியர்" என ஒரே

மாதிரியாக எல்லாவிடங்களிலும் வர, சிலவிடங்களில் புராணக்கதையெனவும் மற்ருேரிடத்தே வரலாறெனவும் கருதுவது பொருத்தமாத்தோன்றவில்லே. எனவே இப் பெயரும், நிகழ்ச்சியும் கடைச்சங்க நூல்களில் கையாளப் பட்ட ஒரு மரபாகவே தோன்றுகிறது; பல பொருளுக்கு இங்கு இடமில்லே. "திகிரி" என்பதனே ஆக்ஞாசக்கரம் என நிலேநாட்ட விரும்புபவர் பின்ஞேரிடத்தே இதே மாதிரித்தொடரில் 'புனே தேர்நேமி' என வருதலே எடுத்துக்காட்டுகிருர். மற்றவிடங்களிலும் அதே பொருளேக்கொள்ளின் தடையென்னவோ? மற்றும் ஆக்ஞாசக்கரத்திற்குப் பொன்புனே திகிரியென 'பொன்னே' அடையாக்குவதில் என்ன பொருத்தமிருக்கிறது? தேருருளேயாஞல் 'பொன்புனே திகிரி' என்றதும் மற்ருே ரிடத்தே கொடித்தேர் திண்கதிர்த்திகிரி என்றதும் பொருத்தமேயாம்.

"திகிரி திரிதரக் குறைத்த
உலக விடைகழி அறைவாய் நிலேஇய

மலர்வ்ாய் மண்டிலத்தன்ன"—என்பதில் பிள்ளேயவர்கட்குப் பெரியதோர் கதையன்றி வரலாறிருப் பதாகத் தோன்றவில்லே. சந்திரகுப்தன் வட, வடமேற்கு இந்தியாவையுங்கடந்து இமயத்தையுந்தாண்டி ஆப்கனிஸ்தானம், பலுசிஸ்தானம் ஆகியவிடங்களேயும் கவர்ந்து ஆண்டுள்ளானென வரலாறுரைக்கும். செலூகஸ்நிகேடரை வென்று காபூல், காண்டகாரிலும் இவன் ஆணேயைச் செல்லவைத்தானெனவு மறிகிருேம். "இந்தியாவின் வட, வடமேற்குலகத்திற்குக் கழியும் இடைகழியாகிய அறுக்கப்பட்ட மலேப்பாறைப் பாதை"யில் நிலேத்த ஆதித்த மண்டலமென இதனே ஏன் கொள்ளலாகாது?

மற்றும் முன்பெல்லாம், இமயத்தின் ஓரிடமாகிய (வட) மேருவையே வடக்கிற்கடையாளமாயும், அதனையே சூரியன் சுற்றி வருவதாயும் மக்களும், புலவரும்கொண்டு எழுதியும் வந்தனர். "உலகமுவப்ப வலனேர்பு திரிதரு"— முருகாற்றுப்படை. கிரகங்கள் சுற்றுதற்குரிய இடமென் பதனை சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியும் "மேரு" என்பதற்கு விளக்கங்கூறுகிறது. மேருவைச் சுற்று வதால் சூரியன் கிழக்கில் விளங்குகையில் மேற்கிலும், மேற்கில் விளங்குகையில் கிழக்கிலும் ஒளி செய்ய முடியா விடினும் தான்சுற்றும் வடக்குச்சியில் (துருவம்) அதாவது மேருவில் எப்போதும் ஒளி வீசிக்கொண்டிருக்கிறதென் பதனை அன்றும் அறிந்திருந்தனர் மாந்தர். இது பூகோள நூலிலும் நன்குணர்த்தப்பெறுவதோர் உண்மையாம். இதனையே 'உலகவிடைகழி அறைவாய்நிலைஇய மலர் வாய்மண்டிலம்' எனப்புறநானூறு குறிக்கின்றது. வடக்கிற்கும், வடமேற்கிற்கும் செல்வோர் பெரிதும் வட மேற்குக்கணவாய், காபூல்வழியே செல்வதால் அவ் விடங்களை வென்ற மௌரியரையே இக்குறிப்புணர்த்த லாகவே கொள்ளமுடியும். "உலகவிடை-கழியறை" யென்பது வடமேற்குக் கணவாய் எனவேகொள்ளலாம்.

நந்தரதுபொருள், மௌரியர் செல்லும் மலைக்கப்பால் நீளிடையில் கிடைக்க (அகம் 251) இயலுமாறு தலைவன் சென்றமையில் பிள்ளையவர்கட்கையம் பிறக்கின்றது. நந்தர்கள் செல்வத்தில்சிறந்தோரென்பது வரலாறே யுணர்த்துவது. தனநந்தன் என்றே ஒருவனிருந்திருக் கிறான். மௌரியர் நந்தரை வென்று தெற்கே மைசூர்வரை வந்தோராக வரலாறு கூறும். அப்போது நந்தரின் சீர் கெட்ட பரம்பரை வடநாட்டுடன் அடங்கிவிட்டிருக்க வேண்டும்; அவரதுசெல்வம் வடநாட்டிலேயே கிடந் திருக்கும். இங்குணர்த்தப்படும் 'பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த அறை, வடமேற்கு மலை வழியன்று.

தென்னிந்தியாவிற்கு வரும் வழியில் விந்தியமலைப்பாதை வழியாகும். எனவே தலைவன் விந்தியப் பெருவழியைக் கடந்து வடநாடு செல்லினும் அங்கு செல்வமேம்பட்ட நந்தர் செல்வமெய்தினும், அவன் தங்கான் என்பதே இப்பாடற் பொருள். தலைவன் வடநாட்டிற்குப் பிரிதலுண்டு. அன்றி, விந்தியத்திற்குத் தெற்கே வந்த மௌரியர் வழியே சென்று கடந்து மொழிபெயர் தேயத்தே செலினும் நந்தரது செல்வம்போன்ற பெரும்புகழ்ச் செல்வங்கிடைப்பினும் என உவமப்பொருட்டாயும் அதனைக் கூறியிருக்கலாம். அன்று நந்தர், பாடலி இவற்றைப்பற்றி தமிழர் நன்கறிந்திருந்தனரென்பதற்கு இலக்கியச்சான்று நிரம்பவுண்டு.

மோரியர் ஒரு புதிய இனத்தினர் எனவும், அவர்கள் வரலாற்றில் ஒரு புதுயுகத்தைத் துவக்கினர் எனவும் வரலாற்றுளரே கூறுவதால் அவர்கள் தம்மை புதிதாக, ஆளவந்த (வம்ப) மோரியர் எனக் குறித்ததில் தவறொன்று மில்லை.

பிள்ளையவர்களது மற்றோரையம் 'கோசர்' மோரியர்க்குத் தூசிப்படையாய் வந்தமை. அதுவும் வடுக நாட்டிற்கும், மோகூருக்கும் கோசர் தூசிப்படை வந்த தெனல் பொருந்தாதென்பது. மைசூருக்கு வடக்குவரை மோரியர் படையெடுப்பு தெளிவாயினும், தெற்குக்கோடி வரையும், மைசூர்வரையும் சென்றான் மௌரியன் என்ற கருத்துமிருப்பதால் இப்படையெடுப்பால் பயன் இல்லை அல்லது நிலைக்கவில்லையெனவும் அதுவும் பெரும் படையெடுப்பன்று எனவும் கொள்ளலாம். எனவேதான் வரலாற்றில் அது தெளிவாக் குறிக்கப்படவில்லை. வரலாற்றில்காணாத பல, இலக்கியத்திற்றான் காணக்

கிடைக்கும். எனவே மௌரியர் கிழக்கிலும், மேற்கிலும் ஒருமுயற்சி செய்து பார்த்தனர். அது முடியவில்லை. அதுவும் தூசிப்படையிலேயே அப்படையெடுப்பை நிறுத்திக்கொண்டனர் எனக்கொள்ளலாம்.

கோசர் யார் என்ற ஆராய்ச்சியே இன்னும் முற்றுப் பெறவில்லை. அவர் பழையன் முதலானோர்க்குற்றுரா யினும் ஒரு பிரிவினர் புதிதாய்வந்த மோரியர்க்கஞ்சியோ, பொருளுக்கோ படைத்துணையாகி தூசிப்படையாக வந்திருக்கலாம்.

அதேபோல் வடுகர் முன்னுற அதாவது மோரியரை, வடக்கிலிருந்துவர தெற்கின் முதல் அரசராய் முன்னிருந்து தடுக்க, அங்கும் கோசர்தூசிப்படை வந்திருக்கலாம். எனவே இது இலக்கியத்திற்கேயுரிய வரலாற்றிற் குறிக்கப்பெருத மிகச்சிறிய நிகழ்ச்சியாயிருக்கலாம். எனவே "வம்ப மோரியர்" என்பது வடநாட்டு மோரியரையே குறிக்குமெனவும், அவரது தென்னுட்டுப் படையெடுப்பையே இவ்விலக்கியங்குறிக்கின்றதெனவும் எனவே இது வரலாற்றுண்மையேயெனவும் அறியலாம்.

தொலைநாடுகளை வெல்ல மோரியர் தேர்ப்படையைப் பெரிதும் பயன்படுத்தியிருக்கலாம். எனவேதான் "இயல் தேர் மோரியர்", "கோடித்தேர் மோரியர்" எனச் சிறப் பிக்கப்பட்டனர்போலும். சந்திரகுப்தனிடம் 6000 தேர் களும், ஒன்று, மூன்று ஆட்களால் நடத்தப்பட்டுவந்தன. அப்படைக்கென ஒனிதனிக்குழு அமைத்து கண்காணிக்கப் பட்டுள்ளது. உடலுக்கதிக அதிர்ச்சியின்றி நெடுந்தூரஞ் செல்லத் தேர்ப்படையே சிறந்ததெனக் கண்டனர் போலும், எனவேதான் அவர்கள் தேர்த்திகிரியுடன் இணைத்தே கூறப்பட்டுள்ளனர்.

---

# திருவள்ளுவர் சமயம்

வள்ளுவர் எச்சமயத்தையும் சேராதவரல்லர். ஏதோ ஒருசமயக் கோட்பாட்டுடனேயே குறளை நமக்குத் தந்துள்ளார். ஆனால் அதனில் தம் சமயத்தை வற்புறுத்தாமல் நூற்கருத்தையே வற்புறுத்தித் திறம்பட எழுதியுள்ளார். அதனாலேயே ஒவ்வொருவரும் தத்தம் சமயத்தவராக அவரைக் கருதுகின்றனர்.

அவர் பொதுச்சமயத்தவர் என்ற கொள்கையால் நாட்டிற்கு இன்று மிகுந்த நன்மையாயினும் ஆராய்ச்சிக்காகவேனும் அவரது சமயத்தை ஆதாரத்துடன் கண்டறிதல் நம் கடனாகும். அங்ஙனம் நோக்குகையில் அவர் "சமணர்" என்பதே நன்கு தெளிவாகின்றது. எனது ஆராய்ச்சிக்கு உறுகருவியாக சிலப்பதிகார நாடுகாண் காதையை எடுத்துக்கொண்டுள்ளேன்.

கோவலன்கண்ணகியுடன் மதுரையை நோக்கிச் செல்லும் கவுந்தியடிகளை "இலங்கொளிச் சிலாதல மேலிருந்தருளித் தருமஞ்சாற்றும்" சாரணர் காண்கின்றனர். அப்பொழுது அவர்களும் கவுந்தியடிகளும் சினேந்திரனுடைய பல்வேறு பெயர்களையுங்கூறி அவனைப் போற்றுகின்றனர். அவர்கள் (சமணர்) தம் கடவுளுக்குக் கூறும் பெயர்கள் அன்று சினேந்திரனுக்குரியனவாக தமிழகத்தில் பெருவழக்கிலிருந்திருத்தல் வேண்டும். அப்பெயர்களையே, அத்தன்மைகளையே வள்ளுவரும் தம் கடவுள்வாழ்த்தில் மிகப்பெரிதும் கையாளுகின்றார்.

இருநூல்களிலுமுள்ள பெயர்களும், தன்மைகளும் 90 பங்கு ஒத்தனவாகின்றன. ஒருவரது கடவுள் வாழ்த்தில் தவிர அவரது சமயக் கொள்கையை வேறெங்கே காணமுடியும்; உறுதிப்படுத்த முடியும்?

நாடுகாண் காதையில், "சித்தன் பகவன் (ஆதிபகவன் முதற்றே—குறள்); அறிவன் அறிவு வரம்பிகந்தோன், புலவன், புனிதன், செம்மல் (வாலறிவன்); மலர்மிசை நடந்தோன் மலரடியல்லதென் (மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்தார்); ஆர்வமுஞ் செற்றமும் அகல நீக்கிய வீரனாகலின் (வேண்டுதல் வேண்டாமை யிலானடி); ஓழிகென ஒழியாதூட்டும் வல்வினை, இட்டவித்தினை இர்ந்துவந்தெய்திஓட்டுங்காலை—வினை-யொழிக்கவு மொண்ணு (இருள் சேரிரு வினையுஞ்சேரா); ஐவரை வென்றேனடியிணையல்லது (பொறிவாயிலைந்தவித்தான்); தலைவன், பரமன், பெரியவன், செம்மல், சுயம்பு (தனக்குவமையில்லாதான்); அறவோன், தருமமுதல்வன், அருளறம் பூண்டோன் திருமெய்க்கல்லது (அறவாழியந்தணன்); பண்ணவன் எண்குணன் (எண்குணத்தான் தாளை) திகழொளி இறைவன் (இறைவன் பொருள்சேர் புகழ்); பவந்தரு பாசங்கவுந்தி கெடுகென, போதார் பிறவிப் பொதியறையோரென, சிவகதி நாயகன் (பிறவிப் பெருங்கடல் நீந்துவர்); செவியகந்திறவா, நாமமல்லது நவிலாதென்னு, காணுவென்கண், யாக்கை பூமியிற் பொருந்தாது, இருகையுங்கூடி ஒருவழிக் குவியாது, தலைமிசையுச்சிப் பொருந்து, மனம்புடை பெயராது (கோளில் பொறியிற் குணமிலவே); குணவதன், இயல் குணன், குணப்பொருட்கோமான் (பொய்தீரொழுக்க நெறி); குறைவில் புகழோன் (பொருள் சேர் புகழ் புரிந்தார்); பண்டைத் தொல்வினை பாறுக, இறுதியிலின் பத் திறைமொழி (யாண்டுமிடும்பையில)—எனவரும்

இத்தொடர்களில் குறள், சிலப்பதிகாரம் ஆகிய இரு நூல்களிலும் உள்ள ஜைனதேவனின் பெயர்கள் எவ்வளவு நெருங்கிய ஒற்றுமையுடையவாகின்றன என்பதையுணர்கிறோம். எனவே திருக்குறள் ஆசிரியரின் சமயம் ஜைனமேயெனத் தெற்றென உணரலாம். மேலும் குறள் கடைச் சங்கத்திறுதியிலும், சிலப்பதிகாரம் அதற்கடுத்த நெருங்கிய நூற்றாண்டிலும் இயற்றப்பட்டனவாம். எனவே குறள்காலத்து ஜைனக்கடவுட் பெயர்களையே சிலப்பதிகாரம் எடுத்தாளுகின்றது. எனவே அக்காலத்தில் இவை பொதுவான கடவுட்பெயர்களாக வழங்கவில்லையெனவே அறிகிறோம். இதற்குச்சான்றாக சிலப்பதிகாரம், மணிமேகலையிலுள்ள சிவபெருமான், திருமால்முதலிய கடவுட்பெயர்களில் மேற்கூறிய பெயர்கள் ஏதும் காணப்பெறவில்லை.

பழைய, புறநானூற்றிற்கூட "பால்புரைபிறை நுதற்பொலிந்த சென்னி நீலமணிமிடற்றொருவன்" என்றே சிவன் பெயர் கூறப்படுகிறது.

"நுதல்விழி நாட்டத்திறையோன், நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி உலகுபொதி யுருவத்துயர்ந்தோன், தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள், இமயவனுடிய கொட்டிச்சேதம், ஆனேருயர்த்தான், பிறவாயாக் கைப்பெரியோன்"—என்ற சிலப்பதிகாரத் தொடர்களிலுள்ள எப்பெயரும் மேற்கூறிய பெயர்களுடன் ஒப்பாகவில்லை. எனவே குறளிலுள்ள பெயர்கள் அக்காலத்தே ஜைனதேவனுக்கே வழங்கினவன்றி சிவபெருமானுக்கு வழங்கவில்லையென்பதனை அறிகிறோம்.

ஆனால் எண்குணத்தான் என்பது சிவனுக்குள்ள பெயராகச் சைவாகமத்துள் கூறப்படுவதாகப் பரிமேலழகர் உரையிற்கூறுகின்றார். இதுவே குறளி

லுள்ள கடவுள் சிவனென்பதற்குப் பேராதாரமாயிருக் கலாம்.'' எண்குணன்என்பதற்கு சிலப்பதிகாரத்தி லுள்ள உரையும் சைவாகம எண் தன்மைகளும் பெரிதும் ஒன்ருகவேயுள்ளன.

சித்தன், தேவன், பரமன், திகழொளி, சங்கரன், ஈசன், சயம்பு என்ற சிவனுடைய பெயர்களெல்லாம் சிலப்பதிகாரத்துக் காணப்படுகின்றனவே யென்னலாம். இப்பெயர்கள் பிற்காலத்துச் சைவப்புராணத்தும், விரிவடைந்த சைவக் கடவுட்பெயருள்ளும் காணப்படுவனவே யன்றி கடைச்சங்க முடிவிற்காணப்படும் சிவனின் பெயர்களல்ல. கி. பி. 3, 4-ம் நூற்ருண்டுகட்கு முற்பட்ட எந்த நூலுள்ளும் இப்பெயர்கள் சிவனுக்குரியனவாக காணப்படவில்லை. அப்போது சைவமதம் ஒன்றிருந்ததே யன்றி பிற்காலத்தியதுபோன்று அவ்வளவு விரிவடைந் ததாயில்லை. இரண்டு சமயங்கட்கிடையே போட்டியும் போரும் ஏற்படுகையில், வெல்ல நினைக்கும் சமயம் எதிர் சமயத்தின் சிறப்பியல்புகள் பலவற்றைத் தன்னதாக்கிக் கோடல் இயல்பு. அங்ஙனம் பின்னர் 6, 7, 8, 9-ம் நூற் ருண்டுகளில் ஏற்பட்ட சைவ, சமணப் போரில் சைவமே வென்று நிலைத்ததென்பதனை வரலாறுணர்த்தும். அப்போது சைவம் சமணரின் கடவுட் பெயர்களையும் தன்மைகளையும் தன்னதாக்கிக்கொண்டிருக்கலாம் சிவன் காமனை வென்றவனுகவும், காடுடைய சுடலைப் பொடி பூசியவனுகவும் ஆக்கப்பட்டது சமணரின் நிலையாமையை யும், புலனடைக்கத் துறவையும் சைவம் மேற்கொண்ட பின்னரேயாகலாமெனநினைக்க இடமுண்டு.

மேலும் தமிழ் இலக்கியவரலாற்றுள் அகப்புற நூல்கள் காலம், புத்தசமணகாப்பியக்காலம், பின்பு சைவவைணவக்காலம் என்றபிரிவுகள் உள்ளன.

திருக்குறள் கடைச்சங்கத்திறுதியிலும், புத்தசமண காலத்தொடக்கத்தும் இயற்றப்பட்டதாம். எனவே சிலப்பதிகாரம், நாலடியார் முதலியவற்றை இயற்றிய சமயத்தைச்சேர்ந்த ஒருவரே இதனை இயற்றியிருக்க வேண்டுமென நினைத்தல் பொருத்தமாம். இக்காலத்தே சைவத்திற் சிறந்த நூலெதுவும் இயற்றப்படவில்லை யென்பதே இதற்காதாரமாம்.

மேலும் ஒவ்வொரு காலநூலுக்கும் ஒரு கோட்பாடு, சில சிறந்த இயல்புகள் உண்டு. குறள்கால நூல்கள் நீதி, அறம், ஒழுக்கம், துறவு மனம் முதலியவற்றை அடிப் படையாகக்கொண்டவை. ஜைன புத்த மதங்களின் தோற்ற வரலாற்றைப் படித்தால் அவை அறத்தையும், நீதியொழுக்கம் முதலியவற்றையுமே தீவிரகொள்கை களாக் கொண்டெழுந்தனவென்பதை யறியலாம். "ஒழுக் கத்தை உயிரினும் ஓம்பியவை" அவையேயாம். பொறி வாயிலைந்தவித்ததும், காம, வெகுளி, மயக்கம் இவை மூன்றன் நாமத்தைக் கெடுத்ததும், மெய்யுணர்த்தலும், பஞ்சசீலங்களை வற்புறுத்தியதும் (பொய், கொலை, களவு, கள், சூது) பிறன்மனை விழையாமையும், கொல்லாமை, இன்னுசெய்யாமையும் ஆகியகொள்கைகள் சமணக் கொள்கைகளேயென்பது சமணத்தமிழ் நூற் கொள்கைகளை ஆராய்ந்தோர்க்குத் தெற்றெனப் புலப் படும்.

தன் மனைவியைத்தவிர பிறமனை அல்லது பரத்தையை விரும்பாமை கடைச்சங்க அகப்புறநூலுள்ளுமில்லை, சைவ நூலுள்ளுமில்லை. அக்காலத்தும், பிற்காலத்தும் எந்த சைவப்புராண நூலும் ஒழுக்கமும், மற்று கூறிய ஒழுக்கமுமே தீவிர நோக்கமாக் கொண்டெழுதப் பெறவில்லை. பக்தியைப் பரப்புவதே சைவ நூல்களின் பெருநோக்காயிற்று. அதனல் ஒழுக்கத்தைப்

புறக்கணித்தது அல்லது வற்புறுத்தவில்லையென்னவில்லை. ஒழுக்கத்தையே தீவிரநோக்கமாக் கொண்டதன்று சைவம் என்பதே முடிபு. சைவத்தின் வரலாறும் அதனை நன்கு தெளிவுபடுத்தும்.

ஆனால் வள்ளுவர் "அடியளந்தான் தாயது" போன்ற சைவ, வைணவக் குறிப்புக்களையும், கதைகளையும் பல இடங்களில் ஆண்டுள்ளாரேயென்னலாம். அது சமண நூல்களைப் படித்தோர்க்கு எளிதில் விளங்குவதொன்றும். சமணர் தமிழ் நாட்டுச் சைவ, வைணவக் கடவுட்பெயர்களையும், புராணக்கதைகளையும் உவமைகளாகவும், உண்மைகளாகவும் எடுத்தாளத் தயங்கியதேயில்லை. மேலும் சிவனையும், திருமாலையும், பிரமனையும் தம் கடவுளின் உருவமாகவே காணும் சமரசப்பான்மையையும் அவர்கள் கொண்டிருந்தனர். சீவகசிந்தாமணியில் சீவகன் மும்மூர்த்திகளையும் அருகனாகவேகண்டுவழிபடுவதை கனகமாலை இலம்பகம் கூறும். சிலப்பதிகார ஆசிரியரின் சமரசப் போக்குபற்றி சொல்லத் தேவையில்லை. எனவே எனதாராய்ச்சியில் திருவள்ளுவர் "சமண சமயத்தவர்" எனவே தெளிவாகின்றது.

# சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

**கடையெழு வள்ளல்கள் :-** சங்கங்கள் மூன்று என்ற கொள்கை தோன்றியபின்னரே கடையெழு வள்ளல் என்றபெயரும் தோன்றியதாகும். கடைச்சங்க காலம் எனப்படும் கி. பி. 2-ம் நூற்றாண்டைச்சூழ்ந்த நூற்றாண்டுகளே கரிகாலன் காலம் அல்லது வள்ளல்கள் காலம் என்பதே பொருந்துவதாகும். அதுவே எலிசபெத் காலம் (Elizabethian Period) என்பதுபோல, இலக்கிய வளர்ச்சிக்குரிய பொருந்திய காலமும் பெயருமாம்,

கடைச்சங்ககாலத்தே வள்ளல்கள்பலர் வாழ்ந்தமையால் அவருள்எழுவரை ஏனே சிறந்தோராகத் தேர்ந்து கொண்டார்கள். 'எழுபொறி நாட்டத் தெழாஅத்தாயம்'—புறம்—99 என்ற குறிப்பு இதற்குக் காரணமாகலாம். அவர்கள் வகுத்த முதல், இடைச் சங்கங்களிலும் ஏழேழு வள்ளல்களாக இருந்தனர் எனக் கூறிவிட்டனர். ஒவ்வொரு சங்ககாலத்திற்கும் வள்ளல்கள் இருந்தாக வேண்டுமென்பது அவர்கள் அவா. ஆனல் முதல், இடைச்சங்க வள்ளல்களாகக் கூறப்படுவோர் எவர் பெயருக்கும் தமிழ் நூல்களில் ஆதாரமே காணேம். இதற்குப் *பாரி முதலிய எழுவள்ளல்கள் கடைச்சங்க காலமெனப்படும் பகுதியில் வாழ்ந்தமையால் கடைச்சங்க வள்ளல்கள் எனக்கூறலாமன்றி எண்ணிக் கொண்டு முதல், இடைவள்ளல்கட்குப் பிற்பட்ட

கடையெழுவள்ளல் என்பதில் பொருத்தம் ஒன்றுமில்லை. எனவே கடைச்சங்ககால வள்ளல்கள் கடையெழு வள்ளல்கள்.

நாவலந்தீவு :- இவ்விந்தியாவிற்கே நாவலந்தீவு, சம்புத்வீபம் எனவெல்லாம் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன "நாவலந்தண்பொழில் மன்னர் ஏவல் கேட்பப் பாரரசாண்ட" எனச் சிலப்பதிகாரமும் "நாவலோங்கிய மாபெருந்தீவினுள்" என மணிமேகலையும் இப்பெயரைக் குறிப்பிடுகின்றன. இது நாவல் மரமோங்கிய தீவு என்ற கருத்துடன் வழங்கப்படும் பெயராகிறது. ஜம்புத்தீவு என்பதும் அதன் வடமொழிபெயர்ப்பேயாம். இங்கு நாவல்மரங்கள் பெருகியிருந்தனவென்பதற்குரிய ஆதாரம் எங்குமிருப்பதாகத் தோன்றவில்லை. மேலும் ஒரு மரத்தைக்கொண்டு மனிதர்வாழும் பெருநிலப்பரப்பிற்குப் பெயரிடுவதில் என்னசிறப்பிருக்கிறது எனத் தோன்றவில்லை.

எனவே இது நாகரந்தீவு, நாவரந்தீவு என இருக்க வேண்டும். இந்தியா முழுவதும்வாழ்ந்த மிகப்பழங் குடிகள் நாகர் என்போராவர், இது வரலாறு ஒப்புக் கொள்வதாம். "விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்" என்ற புறநானூற்றுக்குறிப்புக்கு (175) மோரியர், விச்சாதரரும் நாகருமாவர் என உரையுள்ளது. எனவே இந்தியாவின் வடமேற்குப் பகுதியையெல்லாம் ஆண்ட மோரியர் நாகரெனப்படுகின்றனர். கி. பி. 3, 4-ம் நூற்ருண்டுகளில் வடஇந்தியா, மத்திய இந்தியாவில் பெரும்பகுதிகளை நாகர்இனம் ஆண்டதாக வரலாறு கூறுகின்றது. கணபதிநாகன் முதலோர் சமுத்திரகுப்தனால் வெல்லப்பட்டுள்ளனர். சத்ரபதிகளில் பம்பாய் பகுதியை ஆண்டோருள் நாகபாணன் என்றபெயருள்ளவன் ஒருவன் ஆண்டுள்ளான். சாதவாகனர் நாகர்

ரத்தக்கலப்புடையோராகலாமென வரலாறு கூறும். பல்லவர் நாகர் பரம்பரையினர் ஆகலாமெனத் தென்னிந்திய வரலாற்ருசிரியர் கருதுகின்றனர். நாகருடன் பல்லவர் அடிக்கடிப்போரிட்டதாகவும் கூறப்படுகின் றனர். தென்னுட்டிற்குரியோராக அவர்கள் கருதப் படுவர். சிலோனில் நாகர்வாழ்ந்ததாக மணிமேகலை கூறும். அவர்கள் மகளே பீலிவளை எனவும் அது கூறும். இராவணன் நாகஅரசன் எனக்கருதுவோரும் உளர். பீமன் நாகலோகஞ்சென்று நாககன்னிகையை மணந்த கதையுள்ளது. எனவே ஆரியர் வருதற்குமுன் இந்தியா முழுவதுமேபரவியிருந்தோர் நாகர் எனத்தெரிகிறது. அவர்கள் திராவிடருக்கும் முற்பட்ட அல்லது திராவிட ரும் நாகரிகம்பெருத அத்தனை மிகப்பழமையான இந்தியாவிற்கேயுரிய குடிகளாகலாமெனத்தோன்று கிறது. அவர்தம்பரம்பரையினரே அப்பெயருடனும் இன்றும் இந்திய பீடபூமிமலைப்பகுதிகளில் உள்ளனர். எனவே அவர்கட்குரிய பெயரால் இது நாவலந்தீவு எனப் பட்டிருக்கலாம். கேம்பிரிட்ஜ் வரலாறு அந்நாகர் மனித உடற்பகுதியும் (மார்புக்குமேல்) பாம்பு—நாகங் களின் உடற்பகுதியும் உடையோர் என்றெல்லாம் கூறு கிறது. அவ்வகையாகவே நாகத்தோற்றமுடையோரா கலின் இவர் நாகர் எனப்பட்டிருக்கலாம். நாக வழிபாடு தென்னுட்டிலும், இந்தியாவிலும் பரவியிருத்தலின் காரணங்களில் இதுவும் ஒன்ருயிருக்கலாம். நாவல் மரம் இந்தியாவின் பழமையான பெயர்அறிந்த மரமாகும். அதனைக் கிராமத்து மக்கள்முதல் அனைவரும் அறிவர். அதன் பழத்தை மிகவும் விரும்பியுண்பர் எனவே அது இந்நாட்டார்க்கு மிகவும் பழகியதொன்ரும். அதனையும், நாகரையும் அடிக்கடி பார்த்த மக்கள் நாகர்நிறமும், நாவற்பழ நிறமும் ஒன்ருனமைகண்டு நாவர், நாக்ர் என அழைத்திருப்பர். கடைசியில் நாகர்போய் நாவல்நின்று

நாவலந் (மரத்) தீவாய் அதுவே மொழிபெயர்க்கப்பட்டு ஜம்புத்தீவாயிருக்கலாம். "நாகர் நாடு மீமிசை மிதந்து" (பட்டினத்தார் திருக்கழுமல மும்மணிக்கோவை—18: 11-ந்திருமுறை) என்றஅடி சம்பந்தர்வரலாற்றைக் கூறுகையில் நாவலந்திவைக் குறிக்கிறது.

காவற்பூதம் :- சிலப்பதிகாரத்தும், மணிமேகலையிலும் பூதங்கள் கூறப்படுகின்றன. பூதம் என்றவுடன் பேய், பிசாசுபோன்றதொரு உயிர் என்றநினைவே மனக்கண் முன் தோன்றுகிறது. ஆனால் சோழன்முசுகுந்தனை போரில் ஒரு பூதம் காத்திருக்கின்றது. அதற்குப் புகாரில் இந்திரவிழாவின்போது பலியிட்டுப் போற்றியிருக்கின் றனர். அது நகரைக் காவல் செய்திருக்கிறது. பூதசதுக்கம் என்பது நகரில் பல பெருவீதிகள் கூடுமிடம். "சதுக்கப் பூதரை வஞ்சியுட்டந்து மதுக்களவேள்வி வேட்டோனு யினும்; தொடுத்த பாசத்துத் தொல்பதி நரகரைப் புடைத் துணும் பூதம்; கொற்றவன் றுயரம் விடுத்த பூதம் விழாக் கோண் மறப்பின் இடிக்குரன் முழக்கத் திடும்பை செய்திடும்" (மணிமேகலை) இவ்வடிகள் பூதங்கள் இருந் தமையைக் கூறுவன. இக்குறிப்புக்களால் பூதங்கள் என்பவை மனிதனின் வேறுபட்டவல்லவெனவே அறிகிறோம். ஊரைக்காத்தலும், போரில்உதவலும் ஆகிய செயல்களால் மறத்தன்மையுடைய, நாகரிகமுற்ருத மனித இனத்தவரேயெனவறியலாம் இப்போது காவலுக்கு கூர்க்கரை அமைத்துக்கொள்ளுகிற மாதிரி அந்நாளில் காவற்குதவிய மறங்கொண்டவடநாட் டோரை பூதம் என்று அழைத்திருக்கலாம். இது உருவப் பருமனுலும், மறச்செயல்களுக் கஞ்சாமையாலும் ஏற்பட் டிருக்கலாம். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், நப்பூத ஞர், பூதன் சேந்தனர், கருவூர்ப் பூதன், பூதப்பாண்டியன் தேவி என்ற புறநானூற்றுப் பெயர்களால் பருத்த உருவ

முடையோரைப் பூதத்தின் பெயரால் அழைத்தமையறி கிறோம். இன்றும் பருத்தவரை பூதமென்கிறோம். மேலும் அன்று உறுப்பாலும், உருவத்தாலும் பெயர்கள் மலிந் திருந்தன. முடமோசி, பெருந்தலைச்சாத்தன் என்ற பெயர்களேசாலும். எனவே காவற்பூதம்என்பது நாகரிகமற்ற பருத்த மறத்தன்மையுள்ள மனித இனத்தைச் சேர்ந்ததேயாகலாம்.

# உருவறியாக் குடிப்பெயர்கள்

**முத்தரையர்** :- விசயாலயனுக்குமுன் தஞ்சையை இவர்கள் ஆண்டனர். இவரிடமிருந்தே எட்டாம்நூற்றாண்டினிடையில் விசயாலயன் தஞ்சையைக் கவர்ந்து சோழவரசை நிலைநாட்டினான். அதற்குமுன் பல்லவர்க்குத் திறைசெலுத்திக்கொண்டு அவர்கள் இப்பிரதேசத்தே வாழ்ந்தனர் என வரலாறுரைக்கின்றது.

பல்லவசிம்மவிஷ்ணு காவேரிவரை தெற்கே சென்றான். (575—600). சிவஸ்கந்த வர்மன் கி. பி. 2-3 நூற்றாண்டுகளில் தெற்கே தென்பெண்ணைவரையிலேயே வந்துள்ளான், அதன்மேல் செல்லமுடியவில்லை. அப்போதும் இவ்வரையர் வேளிர்குடிப்பிரிவினராய் இங்கே ஆண்டிருக்கவேண்டும்.

இப்பிரதேசமே இருங்கோவேளின் குலம் வாழ்ந்த பழவூரையுடையதாய், கொடும்பாளூரைக்கொண்ட புதுக்கோட்டைப் பகுதியாம். இவர்கட்கும் வேட்டரையர் என்ற பெயருண்டு. இவர்கள் சோழருடன் நண்பும், உறவும்பூண்டு ஆண்டுள்ளனர். மற்றும் தொண்டை மண்டலப்பகுதியை வாணகோவரையர் என்போர் ஆண்டுள்ளனர். இவர்கள் தன்னாட்சியுடன் பல்லவர்க்குத் திறை செலுத்தியும், செலுத்தாதும், சோழர்க்கடங்காமலும் வாழ்ந்துள்ளமை முதல் பராந்தகன் வரலாற்றிலறிகிறோம். எனவே வாணகோவரையர், பழுவேட்டரையர் போன்றதே முத்தரையர் என்ற 'அரையர்' விகுதியுடைய

பெயரும். இவர்கள் சோழர், பல்லவர் காலத்தும் தமிழகத்தைக் குறுநிலமன்னராயாண்ட தமிழ்ப்பழங் குடிகளாவர். எனவே இவரைப் புதியாராகவோ 7, 8-ம் நூற்றுண்டிலேயே புதிதாகத்தோன்றியோராகவோ கருதற்கில்லை. இதனுல், முத்தரையர் 8-ம் நூற்றுண்டின் இடையில் கேள்விப்படுவோராதல்கொண்டு நாலடியாரை (பெருமுத்தரையர் பெரிதுவந்தீயும்) அந்நூற்றுண்டிற் குரியதாக் கோடலாகாது. மற்றும் வச்சிரநந்தி சங்கங் கண்ட 5-ம் நூற்றுண்டிலும் இவர்கள் இருந்துள்ளனர்' அதன் முன்பும் உள்ளனர். எனவே அக்காலத்திற்குரி யனவாக்கோடலினும் மறுத்தற்கில்லை.

**களப்பிரர் :-** 4முதல் 6-ம் நூற்றுண்டுகளில் பாண்டிய, சோழ, பல்லவநாடுகளில் களப்பிரர்படையெடுப்புக் கூறப்படுகிறது. இது இலக்கியமும், கல்வெட்டும்தந்த பெயராகும். வரலாற்றுப் பெயரன்று. 'களேபாரம்' என்ற சொல்லுடன் இப்பெயர்க்குத் தொடர்பிருக்கலாம். தமிழகத்தே இவர்கள் பெருத்தகளேபாரம் பண்ணியுள் ளனர். கருநடவேந்தரென இவரைப் பெரியபுராணம் கூறுவதிற்பொருத்தமுள்ளது. சாதவாகனராட்சி கலைந்த பின் ஆந்திரவாட்சி அபிரர், கடம்பர் முதலியோரிடம் சேர்ந்தது. மேலைச்சத்திரபதியாட்சியும் அபிரரிடம் பிற் காலத்தே யகப்பட்டுவிட்டதாக வரலாறு கூறுகிறது. கி. பி. 2—3-ம் நூற்றுண்டுகளிலேயே இவ்வபிரர் பிரிந்தாண்டுள்ளனர். சமுத்திரகுப்தன் தென்னிந்தியப் படையெடுப்பும் இப்போதுதான். இந்தவாய்ப்பையும் 'அபிரர்' பயன்படுத்திக்கொண்டிருக்கவேண்டும். தமிழகத்தே பல்லவவாட்சி தோன்றிக்கொண்டும், சங்கச் சோழ, பாண்டியவாட்சி மங்கிக்கொண்டும் இருந்த காலம் இது. இப்போது தென்னிந்தியாவையே தம்மாட்சியில் கொணர நினைத்த ஆந்திரப் பிரிவினராய இவ் 'அபிரர்'

தெற்கேயும்வந்து கலக்கியிருக்கலாம்; சிலவிடங்களைச் சில்காலம் ஆண்டுமிருக்கலாம். இவ் அபிரரையும் இவரைப்போன்ற 'கடம்பர்' முதலிய ஆந்திரப் பிரதேசத்தை யன்றுளத்தொடங்கியோரையும் சேர்த்தே 'களப்பிரர்' என்ற பேர் ஏற்பட்டிருக்கவேண்டும். காள + மேகம் போன்று காள + அபிரர் களப்பிரர் ஆகியிருக்கவேண்டும். கருப்பு நாடக (கருநாடக வேந்தர் இவராகையால்) காள (கருப்பு) அபிரர் எனப் பெயருற்றனராம். *அபிரவரசர் பதின்மர் பெயரறியாதோரென வரலாறுரைக்கும்.

பல்லவ சிம்மவிஷ்ணு, நரசிம்மன் I, சளுக்கிய விக்ரமாதித்யன் I, II ஆகியோர் களப்பிரரைவென்றதாகக் கூறிக்கொள்கின்றனர். ஆனால் அவர் வரலாற்றில் அறிந்தபெருவேந்தரைத்தவிர கடம்பர் முதலிய பெயர்களே காணப்படலால் இவ் 'அபிரர்' முதலியோரே களப்பிரர் என எண்ணுவதில் இயைபுள்ளது. பெரிய புராணம், இவர் சைவத்தையழித்து ஜைனத்தை நிலை நாட்டினர் என்கிறது. கடம்பர் ஜைனத்தை ஆதரித்தவர்.

கோசர்:- இவர் துளுநாட்டுச்செல்லூர்க்கோசர் எனவும் வாய்மொழிக்கோசரெனவும், நான்மொழி, நாலூர்க்கோசரெனவும் பொதியிலிருந்து அறங்கூறுவோரெனவும், படைவீரரெனவும் கூறப்படுகின்றனர். ஆபரணங்களை உடல்நிறையப் பூண்டசெல்வர் இவரெனவும் கூறப்படுவர். இவர் யார்? அகநானூறு, குறுந்தொகை முதலிய கடைச்சங்ககாலத்தே இவர்கள் குறிக்கப்படுவதால் வடகொங்கணம்வரை யாண்ட மேலைச்சாகசத்ரபதிகளின்பிரிவினராவர் இவர் எனப் புலனாகின்றது. இவர் மௌரியருக்குத்தூசிப்படையாக

---

* History of South India — Sastri — P. 95.

வந்தோரெனவும் இலக்கியங்கூறும். எனவே செலூகஸுடன் மௌரியசந்திரகுப்தன் சமாதானஞ் செய்துகொண்டபின் அதன்வழிகிடைத்த கிரேக்க, பாரசீக படையினராகலாம் இவர்கள். இவர்களே முற் கூறிய சத்ரபதிகள். மௌரியனுக்குஇவர் தூசிப் படையாயது முறையே. சாதவாகனரை மௌரியன் எதிர்த்துள்ளான். 'வடுகர் முன்னுற' என இலக்கியமும் கூறும். இவ்வடுகர் தக்காணத்தின் மேற்கேயும் கடற் கரையை ஆண்டுள்ளனர். அம்மேற்குப் பகுதியையும் கோசர் படையொன்று தாக்கியுள்ளது.

நான்குஊர்க்கு நான்குமொழி கண்டோர்எனக் கொளல் பொருந்தும். இவரது நாலூர் 1. கிரீக் (-அ) பாரசீகம் 2. மௌரிய மொழி 3. துளுமொழி 4. அறங்கூறுவோரானதால் தமிழ்மொழி. இந்நான்கு நாடு (ஊர்)களும் இவர்க்குரியவன்றோ? வரலாறே இவரது நாணயங்களில் பலமொழிகள் பொறிக்கப்பட்டிருக்கு மென்கிறது. கிரேக்கர் தொடர்பால் இங்கு நாணயங் களும், ஆபரணஞ்செய்யும்கலையும் திருந்தியுள்ளன. எனவே இவர்கள் நிறைய ஆபரணமணிந்தவர் எனவும், செல்வர் எனவுங்கூறப்பட்டனர்.

சந்திரகுப்தனுட்சி குற்றங்களைத் தண்டிப்பதில் பேர் போனது; சிறு குற்றத்திற்கும் பெருந்தண்டனை. ஆட்சி முறையும் கிரேக்கர்கலப்பால் திருந்தியிருக்கலாமென மௌரியவாட்சியைப்பற்றி வரலாற்றினர் கூறுவர். எனவே இவர்கள் அறங்கூறலிற் சிறந்தோரானமையின் 'அவைகட்கு'த் தலைவராகத் தமிழரால் ஏற்கப்பட்டிருக் கலாம். அயலாராயிருப்பின் ஒருதலையாகவின்றி, உள்ளூர்க் கட்சிகளில் சேரத் தேவையின்றி, நல்ல நீதி

யுடையோராகவிருக்க இவர்க்கு வாய்ப்பிருந்ததாம். நல்ல நீதி வேண்டின், அயல் மாகாணத்தார் அல்லது நாட்டாரைத்தானே அவ்வழக்கைத் தீர்க்க அழைக்கிறோம்!

சாகர் சத்திரபதிகள் என அவர்க்குப் பெயர். விசிறி சிவிறியானதுபோல் சாகர், காசர், கோசர் எனவாயிற்றுகலாம். அன்றி இச்சாகரே குஷானியர் ஆவர். (Hieu-chi) ஹோ-ஷி என்போன் வழிவந்தது இவ்வினம். எனவே ஹோஷிர் எனப்படுவர் இவர். இது ஹோஷிர் 'கோசர்' எனத் தமிழிலாயிருக்கலாம். அன்றி குஷானியர், குஷானர், கோஷார் 'கோசர்' எனவாயிருக்கலாம்.

இக் கிரேக்கர், குஷானியர், சாகர், சத்திரபதிகள் முதலியோரிடையே பிரிக்கமுடியாத தொடர்புண்டு. மற்றும் சாகரது ஆட்சி வடமேற்கிந்தியாவில் காந்தாரப் பகுதியில் (Hazari) ஹாசாரிப் பகுதியில் இருந்துள்ளது. மற்றுள் சாகருள் முதல் ஒருவன் (Azes) ஆஸஸ். ஹாசர், காசர், கோசர் என்றோ, ஹாசாரியில் இருந்தோர் ஹாசாரர், ஹாசார், காசர், கோசர் எனவோ மருவியிருக்கலாம். வடமேற்கிந்தியாவும், காந்தாரமும் தமிழர்க்குப் பாரதகால முதல் அறிந்தவை. யவனர் போன்றே கோசரும் அயல்நாட்டுக்குரியராவர். யவனரோடு நெருங்கியவரே கோசரும்; அன்றி யவனப் பிரிவினருள் ஒருவராயுமிருக்கலாம். யவனர் இந்தியாவுடன் வாணிபத் தொடர்புடையராயிருந்தனர். கோசரும் அப்படியே. எனவே குணபால் நியமம் அதன் ஒலிபற்றியெல்லாம் கூறப்பட்டுள்ளது.

# சேரர் தலைநகர்

சேரர் தலைநகர் பற்றியெழுதி ஆசிரியர் பலர் சோர்ந்து விட்டனர். சேரரது வஞ்சி என்பது மேற்குக்கடற் கரையில் கொடுங்கோளூரா அல்லது திருச்சிகருவூரா எனபது பெரிய விவாதம்.

திரு. சேஷஐயங்கார்போன்ற நடுநிலையாளர் மேற்கடற்கரைக்கொடுங்கோளூரென்பர். திரு. மு. இராகவையங்கார் அவர்கள் திருச்சிகருவூரே வஞ்சி என்பர். இவருள் பின்னவர் வாதம் போகப்போக மலையாள வஞ்சியை ஏற்றுக்கொண்டேபோய் முடிவது போலுள்ளது.

அகம் 93-ம் செய்யுளில் வரும் "கருவூர்" என்ற சேரத் தலைநகரே இவ்விவாதத்திற்கெல்லாம் காரணமாம். சங்க நூற்பாடல்களில் அகச்சான்ருக "வஞ்சியைக் தவிர" கருவூர் என்ற பெயர் வேறெங்குமில்லை. இங்கும் "நெடுந் தேர்க்கோதை திருமாவியனகர்க் கருவூர்முன்றுறைத் தெண்ணீர் உயர்கரைக்கவைியய தண்ணான்பொருநை மணல்" என்றவடிகளில் முன்றுறை என்பதிலுள்ள துறை கடற்கரையைக் குறிப்பது நன்கு தெளியப்படும். சங்க வழக்கில் துறை, துறைவன் என்பது நெய்தனில வழக்கேயாம்.

இதைவிட்டுத் திருச்சிக்கருவூருக்கு வஞ்சியை இழுத்துச் செல்லுகிருர் ஐயங்காரவர்கள் சேரன் செங்குட்டுவன் என்ற தமது நூலில் "தலைநகர்" என்ற

கட்டுரையின் சடைசியில். கடைசிகாலத்தில் சேரர் தலைநகர் மேற்கடற்கரை மகோதைக்குச் சென்றதெனவும் அங்கு வஞ்சியென்ற பெயரை மகோதை பெற்றதெனவும் ஒப்புகிருர். திருச்சி வஞ்சியை (கருவூரை) மேற்கடற் கரைக்கு இழுத்துச் செல்லும் இவர் முன்பேயே மேற்கரை யிலிருந்த வஞ்சிக்கு (கீழ்க்) கருவூர் என்ற பெயரும் வழங்கியதுஎன ஏன் ஒப்பலாகாது? இதையும் ஒரு வகையில் ஒப்புகிருர். புகார் காவிரிப்பூம்பட்டினம் என்பதுபோல வஞ்சிக்கே கருவூர் என்ற உலகவழக்குப் பெயரும் வழங்கியதாக அக்கட்டுரைத் தலைப்பிலேயே கூறுகிருர். ஆனல் சங்கநூல்களில் நூல்வழக்கு நகரங்களே குறிக்கப்படுவனவன்றி, உலக வழக்குப் பெயர்களை கீழே துறை, பாடியோர்பற்றிய குறிப் பெழுதியோரே குறித்துள்ளனர்.

ஆனல் குறிக்கப்பட்ட இவ்விரு பெயர்மட்டும் (கருவூர்–அகம்–93) நூல் வழக்காதலால் இதுவும் ஏதோ காரணத்தால் வஞ்சிக்குரிய நூல்வழக்குப் பெயராகவே ஒருகாலத்தில் வழங்கியிருப்பதாக அறிகிருேம். சங்க காலத்தேயே இங்குவந்த டாலெமி, கரோரா கேரள புத்ரர் தலைநகரமெனவும் அது கடற்கரையினிடத்த தெனவும் குறித்திருக்கிருன். கரூர், வஞ்சியின் மறு பெயரேயென்பதும், கரூர்ப்பட்டினம் என இன்றும் கொடுங்கோளூர்க்கருகே ஓரூர் இருப்பதுமாகிய இரு செய்திகளையும் திரு. சேஷையரும் ஒப்புக்கொள்கிருர். (Chera Kings of the Sangam Period) எனவே கரூரும் வஞ்சிக்கு வழங்கியதெனவே கொள்வோம். புகாருக்கு காவிரிப்பட்டினமும் உறந்தைக்குக் கோழியும் காரணத் தால் வந்தமைபோல வஞ்சிக்குக் கருவூரும் காரணத் தாலேயே வந்திருக்கவேண்டும். எங்ஙனம்? இரும்பொறை மரபினர் சேரப் பிரதிநிதிகளாக (Viceroy) கருவூரில்

ஆண்டிருக்கலாமென்பதற்குப் புறநானூறு ஆதாரம். இதனைச் சேஷையரவர்களே கூறுகின்றனர். எனவே இரண்டு சேரர் தலைநகரப் பெயர்களும் அன்று பெருவழக்கி லிருந்தன. சமநிலையில் போற்றப்பட்டன. வெளிநாட்டிலிருந்துவந்த டாலமிக்கு இடப்பழக்கமின்மையால் பேச்சுப் பெருவழக்கில் இரண்டுபேரும் பக்கம் பக்கத்திலேயே மாறிமாறி வழங்கலைக்கேட்டு வஞ்சி, கருவூர் இரண்டையும் ஒன்ருகவே கருதி வஞ்சியே கருவூரெனக்குறிப்பெழுதிவிட்டான். அன்றி சேரர் கருவூரை வென்ருண்டகாரணத்தால் வஞ்சியின் ஒருபகுதிக்கு கருவூர்என்ற பெயரிட்டிருக்கலாம். சென்னையென்ற ஒரு நகர்ப் பகுதியாக மைலாப்பூர் உள்ள மாதிரி. பகுதிக் கருவூர் சேரநாட்டின் கிழக்கோரத்தலைநகரமாக இருந்ததால் அது வஞ்சிக்குச்சமமான மதிப்புற்று இரண்டில் எது வழங்கினும் ஒரு தலைநகரையே குறிக்கும் நிலையயடைந்திருக்கலாம். இது சேரர் கருவூரேறிய பின்பும் டாலமிக்குப் பின்புமேயாக வேண்டும். திருச்சி கருவூர்க்கிருந்த வஞ்சியென்ற பெயர் பிற்காலத்தே மேற்கரைமகோதைக்கு வழங்கியது என ஒப்புக் கொள்ளும் ஐயங்கார் சுவாமிகள் கிழக்குக் கருவூர் அன்றே மேற்கரை வஞ்சிக்கு வழங்கியதென்ருல், அதுவும் மேற் கூறிய காரணமும் காட்டினுல், மறுக்கமாட்டார் என்றே கூறவேண்டும்.

அகம் 93 துறையெனுஞ்சொல்லால் கடற்கரையையே குறிப்பதை முன்பே குறித்தோம். மேலும் வஞ்சி கடற்கரையதே என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. அடியார்க்கு நல்லார் வஞ்சியென்பது கொடுங்கோளூரே யென்கிருர். அதே சுமார் 12-ம் நூற்ருண்டினராகிய சேக்கிழாரும் வஞ்சி கொடுங்களூரெனவும் கருவூர், திருச்சி கருவூரெனவும் பிரித்தே கூறுகிருர். இவற்றைவிட்டு

ஏதோ நாலைந்து நூற்றாண்டிற்கு முன் வரலாறு, பூகோள உணர்ச்சியின்றியெழுதிய கருவூர்ப்புராணத்தை ஆதாரமாக்கொண்டதாலேயே ஐயங்காரவர்கள் பெரு மயக்கம் தருவாராயினர். காமதேனுவாகிய பசுவால் செய்யப்பட்டது திருவானிலைக்கோயில் எனக் கருவூர்ப் புராணம் கூறுமானால் அதன் பூகோள வரலாற்றாதா ரத்தை என்னென்றுரைப்பது?

திவாகரப்பிங்கலந்தை நிகண்டுகள் கருவூரும், வஞ்சியும் ஓரே நகரப் பெயரெனில் அதனை மறுக்க வேண்டாம். ஐயங்கார் அமராவதியைச் சூதநதியென நிகண்டு கூறுவதாக எழுதுவதனை சேஷையர் "அப்படி யொன்றுமில்லை"யெனவே மறுக்கிறார். மற்றும் ஆன்பொருநைக்கு அமராவதியென்ற (ஐயங்கார் கூறும்) பெயர் அந்நிகண்டில் குறிக்கப்படாததையும் நன்கு சுட்டுகிறார்.

இனி கடற்கரையாதாரங்களைப் பார்ப்போம். ஐயங்கார் வருந்தித்திரித்துப் பொருள்கொள்ளும் இடங் களெல்லாம் உணர்ச்சிக்குப் பொருந்தாததாயும் கடற் கரையெனவே புலப்படுதலையுங்காண்கிறோம்.

"அளந்து கடையறியா அருங்கலஞ்சுமந்து
வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றத்து"

என்பதில் கலமென்பது மரக்கலமென்பதே பொருந்து வதாம். அதனாலேயே வளந்தலை மயங்குகிறது வஞ்சியில். மேலும் அணிகலமானால் அரசர்க்குப் பொன்மணியன்றி அணிகலனைத் திறை செலுத்தக் காண்டலருமை. மேலும் அருங்கலஞ்சுமந்து என்பதுடன் திறைசுமந்து என்ற தொடர் வேறு வருதல் பொருத்தமில்லையாம். அருங்கலமே திறையானால் திறை சுமந்து என்ற தொடர் தேவையில்லை. மற்றும் "தண்டத் தலைவரும் தலைத்தார்ச் சேனையும்

வெண்டலைப் புணரியின் விளிம்பு சூழ்போத" என்பதில் வெண்டலைப் புணரியின் விளிம்பு என்பது கடற்கரையே யென்பது தெற்றெனப்புலப்பட. கடல்போன்ற எனப் பொருள்கொண்டு சேனைக்காக்குகிருர் ஐயங்கார். அப்படியானுல் விளிம்புசூழ் என்பது பொருளற்று வற்று கிறது. மேலும் "புணரி விசும்பு சூழ்போத" எனவும் பிரதி பாடமிருப்பதற்கு என்ன சொல்வாரோ தெரிய வில்லை!

சிலப். 27 காதையில் செங்குட்டுவன் திரும்பி வர நானிலமக்களும் களித்துப்பாடிஞலும், வெண்டிரை பொருத வேலைவாலுக மகளிர் பாடுகையில் அவன் வருகை முடிதலும் உடனே அவர்கள் வஞ்சி பாடுதுமென முடிப் பதையும் பார்த்தால் அவன் பயண முடிவு நெய்தலிலென் பதும் வஞ்சி அங்கிருந்ததெனவும் தெளிவாக உணரப்படு கிறது. இங்கு குறிஞ்சி, முல்லை, மருதம் என்ற வரிசை யாகவுமின்றி குறிஞ்சிக்குப்பின் மருதத்தைக் குறித்துப் பாடுகிருர். சேரர்குலப்பெருமாள் வஞ்சி மகோதையில் மேற்கரையில் ஆண்டதை ஒப்புகிருர் ஐயங்கார். சுந்தரர் பாடிய அஞ்சைக்களம் வஞ்சிக்களத்தின் வேருனதென வாதாடுவது பொருந்தாதென்பதை சேஷையர் அழகான இலக்கியநயங்காட்டி வெளிப்படுத்துகிருர். அஞ்சைக் களத்துச் சிவனுக்கு வஞ்சுளேசர் என்றபெயர் இருப்பதைக் குறிப்பிட்டு மெய்ப்பிக்கிருர். ஐயங்கார் கருத்துப்படியே வஞ்சைக்களமாகிய கொடுங்கோளூர் 2, 3 மைல் உள்ளடங்கியது எனவே உள்நாட்டுப் பட்டின மென்பதில் தடையில்லையெனவும் அதற்குத் துறைமுகம் மகோதையாகிய முசிரியெனவும் நன்கு விவாதிக்கிருர் சேஷையர். கி. மு. 77-ல் பிளினி என்பவன் மேல்கரை முசிரியே சேரர் தலைநகராயிருந்ததெனவும், பெரிபுளூஸ் என்பவன் அம்முசிரி தலைநகரெனவும் ஆனல் இருமைல்

உள்ளடங்கியிருந்ததெனவும் கூறலால், சேரர் தலைநகர் கடற்கரையதேயென்பதிலும் பெரிபுளூஸ் கூறிய உள்ளடங்கிய முசிரியே கொடுங்கோளூரெனவும் ஐயர் கூறுவது மிகப்பொருத்தமாம்.

ஆடகமாடம் ரவிகிராமமென்பதனை ஒப்புக்கொண்டு அதுவும் தொலைவினதென ஐயங்கார் மறுக்கிறார். ஆனால் கொடுங்கோளூர்க்கருகே திருபுன்னித்துரா என்பது ரவிகிராமம் என அழைக்கப்படுவதனை ஐயர் சுட்டுகிறார். மேலும் எர்ணாகுளத்தின் ஓர் பகுதி இன்றும் ரவிபுரமென வழங்குகிறதாம். சூதசந்தேசத்திலிருந்து குணகா என்றவிடம் குணவாயிலெனவும் கனகபவனமென்பது ஆடகமாடமெனவும் அழகுபட இடங்களைஎடுத்துக் காட்டுகிறார் ஐயர். அங்கேயே சிவன் கோயிலொன்று இருந்து அழிந்துபோனதுபற்றியும் கூறுகிறார்.

இனித் தண் ஆன்பொருநைத் தகராறொன்று. ஆன்பொருநைக் கரையில் வஞ்சி இருந்தது. அப்பொருநை பெரியாறென்கிறார் ஐயர். அமராவதி என்கிறார் ஐயங்கார். அமராவதி திருச்சி கருவூர்க்கருகது. பெரியாறு சிலப்பதிகாரத்தே குறிக்கப்படுகிறது. ஆனால் இந்த அமராவதியைக் காணோமே! பெருமலை விலங்கிய பேரியாற்றடைகரை என்பது சிலப்பதிகாரம். இது ஆற்றின்பெருமையைக் குறிப்பதென்பர் ஐயங்கார். ஆனால் எவ்வாற்றின் பெருமை, பேச்சையே காணோம்! சேரநாட்டில் பெரியாறு என்ற குறித்தபெயருடன் ஒன்று இல்லாதிருந்தால் இப்பொருள்கோள் பொருத்தமாம்! மேலும் ஆன்பொருநை என்பதில் ஆன் என்பதை உயிராக்கி ஆனிலை, பசுபதீச்சுரர் எனவெல்லாம் பெருக்கிக் கொண்டே போகிறார் ஐயங்கார். ஆனால் தண் ஆன்பொருநை என்பதுடன் தண்அம்பொருநை எனவும் பிரதிபாடம் (27. சிலப் 231) உண்டே! இப்போது

ஆன்முழுதும் அழிகிறதே! எனவே ஆன், அம் சாரியை. பொருநை என்பதே ஆராய்ச்சிக்குரிய சிறப்புப் பெயராக் கோடல் வேண்டும். இப்பெரியாற்றிற்கு இவ்விவாதத் திற்கு முற்பட்ட சங்கரவிஜயத்தில் புரனநதி என்ற பெயர் உள்ளதாம். எனவே பெரியாற்றிற்கே பொருநை வழங்கியிருப்பதை ஐயர் அழகாய் விளக்குகிறுர். இந்நதிக் கரையிலேயே கொச்சிஅரசரின் உறையுளாகிய திருபூரணதுறை (பொருநைத்துறை) இருக்கிறதெனவும் கூறுகிறுர்.

அப்படியாஞல் கீழ்க்கருவூர்க்கு வஞ்சிப்பெயரும், ஆன்பொருநையும், ஆனிலைபசுபதீச்சுரரும் கருவூர்ப் புராணத்தில் எங்ஙனம் பெயராயின? கீழ்க்கருவூரும் சேரர் தலைநகரேயென முற்கூறினேம். மேற்கரை வஞ்சிப் பெயரையே இதற்குஞ்சூட்டி பெரியாருகிய பொருநையை அமராவதிக்கிட்டு ஆன் என்பதை அடைச் சொல்லாகவே நம்பி அதன்மூலம் ஆனிலை, பசுபதீச்சுரர் எனவெல்லாம் அழைத்தார் புராணிகர். இதுபோன்று வழக்குகள் வரலாற்றிலுண்டு. ராஜராஜேச்சுரம் ஏற்படுமுன் திருவாரூர்த் தியாகேசரை வணங்கியோர் ராஜேச்சுரம் ஏற்பட்டதும் தியாகராசர்பற்றிஞல் ராஜேச்சுர நாதர்க்கும் தியாகராசர் எனப்பெயரிட்டு அஜபாநடம், கொத்துமத்தளம், குறவஞ்சி, முதலில் தியாகேசர்க்குப் பூசை, அதே மாதத்தில் விழா என்ற மரபுகளையெல்லாம் மேற்கொண்டுள்ளனர். அதேபோல மேற்கரை வஞ்சியின் சிறப்பை கீழ்ச்சேரத்தலைநகர்க்கும் ஏற்றிப்போற்ற விழைந்தபுராணிகர் அவ்வஞ்சியின்அடையாளங்களை யெல்லாம் இக்கருவூர்க்கிட்டு புராணம் எழுதுவாராயினர், அவ்வளவே. ஐயங்கார் கருத்துப்போன்றே சேரர் மேற்கே சென்றபோது கிழக்குக்கருவூர்ப்பெயராய வஞ்சியை மேற்கு மகோதைக்குக்கொண்டது பொருந்துமாஞல்

மேற்கு வஞ்சி அடையாளங்களை கீழ்க்கருவூர்க்கிட்டுப் புராணிகர் பாடினர் என்பதும் பொருத்தமே. "காவிரி யன்றியும் புனலொரு மூன்றுடன் கூடிய" (பதிற்–50) என்பதற்குக் கீழ்க்கருவூரருகேயுள்ள காவிரி, குடவனாறு, ஆன்பொருநை மூன்றையும் குறித்து அதனாலேயே வஞ்சி இக்கருவூரென்கிறார். காவிரியைத்தவிர குடவனாறு, அமராவதி இவைகூடிய கடல்போன்றோன் என்பதில் என்ன பெருமையுண்டு? அது பதிற்றுப்பத்து உரையாக இருப்பதைவிட்டுவிடுவோம். அதனைவிட்டு காவிரி, வைகை, பொருநை மூன்றும்கூடிய கடலனையை என்றால் அதுவே பொருந்தும், உண்மையுரையுமதுமே. அதாவது மூவாற்றிற்குமுரிய மூவேந்தரும் கூடினாற்போன்ற ஆற்றல் பெருமையுடையவன் என்பதாம். இங்ஙனம் ஒருவனை மூவேந்தராகவும் கூட்டியுரைப்பதே மரபுங்கூட; புறம் 58-ல் சோழ, பாண்டியர் ஒருங்கிருத்தலை நீனிற வண்ணனும் ஒருங்கிருப்பதுபோன்றது என்பதைக் காண்கையில் உவமிக்கப்படும் பொருள்கள் ஒரேதரமுடையவாகவேண்டும். அங்ஙனமே காவிரி, வைகை, பொருநைக்கூடல் என்பதே பொருந்துமன்றி காவிரி இதுவரைக் கேட்டேயறியாச் சிறு குடவனாறு, அமராவதியுடன்கூடிய கடல்போன்ற,என்பதில் பொருத்தமேயில்லை.

மேலும் செங்குட்டுவன் முதலோர் வள்ளலருடனும் கொங்கருடனும் போரிட்டுள்ளனர், வென்றுமுள்ளனர். மூவேந்தரும் கொங்கரை வென்றதனை ஐயர் புறநானூற்றி லிருந்தே எடுத்துக்காட்டுகிறார். அப்படிப்பட்டவர் பகுதிப்பட்ட கீழ்க்கருவூரை (கொங்குநாடு) எப்படி சேரர் பண்டு முதல் தலைநகராக்கொண்டிருக்க முடியும்? கொங்கரையும் கொல்லிஓரியரையும் வென்றிருக்கலாம். பிறகு கொங்கர்கோன், கொல்லித்தலைவன் எனவெல்லாம் வழங்கியிருக்கலாம், மறுக்கவில்லை. கொங்கு நாட்டில் வஞ்சி இருந்திருக்கவேண்டுமானால் சேரர் தோன்று

முன்பே கொங்குநாடிருந்து சேரர்தோன்றியதும் கொங்கரையழித்துத் தலைநகர் வஞ்சியை அங்குஅமைத்திருக்கவேண்டும் வரலாற்றில் அப்படியொன்றும் ஆதாரமில்லை.

எனவே, மேற்கூறிய காரணங்களால் வஞ்சியென்பது கீழ்க்கருவூரன்றென்பதும், மேற்கரைக் கொடுங்கோளூரேயென்பதும் அது கடற்கரைப் பட்டினமன்றி உள்நாட்டில் நூற்றுக்கணக்கானமைலுள்ள நகரமன்றெனவும், ஆன்பொருநை அமராவதியன்று, பேரியாறேயெனவும் நன்கு உணரப்படும்.

கடைசியாக ஒருகுறிப்பைக் காணுகையில் இவ் விவாதமே ஒருவினை அடிப்படையில் எழுந்ததாய்ப் புலப்படுகின்றது,

புறம் 5 கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரல் இரும்பொறையைப் பாடுகிறது. கருவூரைத் தலைநகராகக் கொண்டு குடி 'ஏறிய' எனில் அதன்முன் எங்கிருந்தோ தானே ஏறியிருக்கவேண்டும்? அதன்முன் தலைநகர் வஞ்சியைத்தவிர வேறேதுமில்லையே! 'வஞ்சியன்னவென்' எனப்பாடல் சேரர் முன்தலைநகரை வஞ்சியெனவே குறிக்கிறது. இரும்பொறை பிரிவினரே—கிழக்கே சோழரைத் தடுக்கவோ—கருவூரைத் தலைநகராக் கொண்டனரென முன்புரைத்தோம்.

புறம் 5, 13 ஆய பாடல்கள் கருவூர்ச் சேரர் பெயர்களைக்குறிக்கின்றன; அவர்கள் 'இரும்பொறை' என்ற பின்னடைமொழியுடனேயே காண்கின்றனர்.

நக்கீரர் பாடலில் குறித்தலால் கருவூர் என்ற பெயரும் அன்றே இலக்கிய வழக்கில் வந்துள்ளது. இது கடைச்சங்கத் திறுதிக்காலமாகலாம்.

அகம் 263. கருவூர்க்கண்ணம்பாளனர் என்பவரால் பாடப்பெற்றது, ஆனால் இப்பாடலில் மகட்போக்கிய தாய் கோதையோம்பிக் காக்கும் 'வஞ்சியன்னவென் வளநகர் விளங்க' என்கிருள். கருவூர்க்குரிய ஆசிரியர் 'வஞ்சி யன்ன' என்பதால் வஞ்சி கருவூரினும் வேறென்பது புலப் படும் இரண்டும் ஒன்ருனல், இங்கும் எங்கும் அதற் குரிய குறிப்புக்காணேம். மற்றும் தமக்குரிய கருவூரைச் சேரர் தலைநகரெனக் (கருவூரன்னவென்) குறியாமல் வஞ்சியன்னவெனக் குறிப்பானேன்? யாருக்கும் தன்னூர்க்குவழங்கும் பெயரையன்ருே அமைத்துச் சிறப்பித்துப் பாடவிருப்புறும்! நக்கீரர் 'தண்ணான் பொருநை' என நுட்பமாக் குறித்துள்ளார். தண்பொருநை வேறு, தண்ணான் பொருநை வேறெனவே கொள்ளக்கிடக்கின்றது. தண்பொருநை பேரியாறு; தண் 'ஆன்' பொருநை ஆமிரவதியாகலாம். கருவூர் சேரத் தலைநகர் ஆனதும் அங்கிருந்த ஆற்றிற்கும் தண்பொருநை நினைவாக தண் ஆன்பொருநை எனப் பேரிட்டிருக்கலாம். அமெரிக்காவில் (U. S. A) மற்றொரு நியூலண்டன், நியூ இங்கிலாந்து இருப்பதால் பிற்காலத்தே லண்டனும் இங்கிலாந்தும் அமெரிக்காவில்தான் இருந்தவென்னலாமா? அதுபோலத்தான் தண் ஆன்பொருநைப் பெயரும். இங்கு 'ஆன்' அடைபெறுகிறது பொருநை. புறம் 36 கருவூர் ஆற்றைக் குறிக்குமிடத்தே தண் 'ஆன்' பொருநை என்றே பிரித்துக்கூறுகிறது. புறம் 11-387 இரண்டும் வஞ்சிப்பேரியாற்றைக் குறிக்கையில் (கருவூர் குறிப் பில்லை) தண்பொருநை, கல்லென்பொருநை எனவே 'ஆன்' அடை இன்றிக் கூறுகின்றன. எனவே சேரர் தலைநகர்பற்றியவிவாதம் உரையாசிரியர் குழப்பமேயன்றி உண்மைபற்றிய குழப்பமன்று என்பது தெளிவாம்.

—

# சிலம்புகழி நோன்பு

தமிழ் அகவொழுக்கத்தில் தலைவன் தலைவியை மணக்குமுன் அவன் வீட்டில் சிலம்பு கழி நோன்பு ஒன்று நடைபெறுமெனவும் அப்போது தலைவிகாற் சிலம்பு கழற்றப்பெறுமெனவும் திரு. சாமிநாதையரவர்கள் கூறு கிறார்கள். (குறுந். 7) இக்கொள்கை தமிழறிஞர் பலர்க்கு உடம்பாடாயிருப்பதனைத் திரு. சோமசுந்தரபாரதியா ரவர்கள் எள்ளி, இது தமிழர்க்கே இழுக்காமெனவும் இது தலைவனையிழந்தவள் தாலிகளைவதுபோன்று அமங்கல மாகிறதெனவும் *செந்தமிழில் மறுக்கிறார்.

அதற்கு மாறாக 'சிலம்புகழீஇ' எனவரும் இலக்கிய வழக்கில் கழீஇ என்பதற்குக் 'கழுவி' எனவுங்கொள்ளலா மெனவும், தலைவியைத் தலைவன் வீட்டார், வீட்டிற்குள் முதலில் அழைக்கையில் வாயிலில் தலைவியின் காலை நீரால் அலம்பி வரவேற்றல் என்பதே இவ்வழக்கெனவும், கால் கழுவி என்பது இடக்கர்ச்சொல்லாமாகலின் சிலம்புகழீஇ யென்றனரெனவும் கூறுகிறார். மறுக்கமுடியாமல் சில விடங்களில் சிலம்பு கழித்து எனக்கொள்ளவேண்டியிருப் பதால் அதற்கு அயலாரறியாமற்பொருட்டு சிலம்பை நீக்கிவைத்துவிட்டுத் தலைவி களவொழுக்கத்தே வெளியே சென்று தலைவனைக் கூடுகிறாளெனக்கொள்கிறார் பாரதியார். கழுவுதலுக்கு பாதபூசைப் பழக்கத்தை எடுத்துக்காட்டுகிறார்.

---

* பழந்தமிழ்நாடு S. P. பாரதி 108.

சிலம்பு கழீஇயெனக் களவுகாலப் பாடல்களிற்ருன் வருகின்றன. அதுவும் தலைவனெடு களவொழுக்கம் நடத்துமிடத்தும், உடன்போக்கிலும், உடன்போக்கு பற்றித் தாய்கூற்றிலுமே இப்பேச்சு வருகின்றது. எனவே சந்தர்ப்பம் ஒன்றே. எனவே இவ்விடம் கழுவுதலா, கழித்தலா என்பதற்கு இலக்கிய அகச்சான்று கழித்தற்கே உகந்ததாகவிருக்கின்றது. 'அருங்கடி வியனகர் சிலம்புங்கழியாள் கூர்வேல்விடலையொடு பொய்ப்பப் போகி' என்பது அகநானூறு. எனவே 'சிலம்பு கழித்து' என இவ்விடங்களிற்பொருட் காண்டலே தகுதி. எனவே மணத்திற்கு முன்தலைவி சிலம்பு கழித்தலுண்டு. இது மறுக்கமுடியாதது. ஆனல் பாரதியாரவர்கள் கேள்விக்கும் விடைதந்தேயாக வேண்டும். கண்ணகி கோப்பெருந்தேவியிடம் இருந்த சிலம்பு மணமானபின்தானே பேசப்படுகிறதென்பது. பின்பும் சிலம்பணிந்திருக்கலாமென்பதற்கும் பொருத்த முண்டு. அது தலைவன் தன்பொன்கொண்டு அணிந்த சிலம்பாகலாம். தலைவன் மணத்தின்போது தலைவிக்குப் பொன்னணிந்து (இழை) மணக்கும் வழக்குண்டு,

அதாவது தலைவிக்குத் தன் உழைப்பால்வந்த பொருள்கொண்டு நகைகளையணிவிக்கிருன். வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதலிதுகருதியேயாம். அப்போது தலைவியின் தாய்வீட்டுநகைகளை மாற்றித் தன் நகைகளையணிகிருன். அதற்கடையாளமாகச் சிலம்பு கழீஇயெனக் கூறப்படுவதாகலாம். எவ்வளவு ஏழையும் உடலின் எப்பாகத்தில் நகைபோட்டுத் தன்மக்களை அணிசெய்யாவிடினும் குறைந்தது காலில் ஒன்று, அதிலும் வெள்ளியாலாவது ஒரு சிலம்பணிவர் பெண் குழந்தைகட்கு. எனவே அணிகளைத் தன் நகைகளால் மாற்றுகையில் சிலம்பு முதல் யாவற்றையுமோ அன்றி குறைந்தது சிலம்பைமட்டுமோ மாற்றிவிடுகிருன்

தலைவன். அதனோடு விட்டுவிடாமல் தன்நகைகளை அங்கணிவிக்கிறான் என்பதனையும் ஒப்பவேண்டும். அப்போதே கண்ணகி கோப்பெருந்தேவியாகியோர் சிலம்பணிந்திருந்தமைக்குப் பொருத்தமேற்படுகின்றது. இன்றும் மணத்திற்கு முன் 'பரிசம்போடுதல்' என்ற சடங்கு உண்மையறிவோம். அது தலைவன் பெண்ணிற் கணியவேண்டிய நகைகளைத் தருஞ்சடங்கேயாமென அறிகிறோம். இது தலைவன் வீட்டிலோ அன்றித் தலைவனாலோ தான் நடப்பதாக இன்றுமுள்ளது. அன்றும் சிலம்பு கழீஇயயர்தல் தலைவன் வீட்டிற்குரித்தாகவே பேசப்படுகிறது.

'நும்மனை சிலம்பு கழீஇயயரினும்
எம்மனை வதுவையயரின் எவனும்'—எனத் தலைவியின் தாய் கேட்கிறாள். தலைவியின் வீட்டில்தான் மணம் நடப்பதென்ற பாரதியார் கருத்தும் இங்கு மறுக்கப் படவில்லை.

அன்றைய சிலம்பு கழி நோன்பென்பது தலைவன் தலைவிக்குரிய நகைகளை மணத்திற்கு முன் அணிவிக்கும் சடங்கென்பதும், அதிலும் மிகக்குறைந்த சிலம்பையாவது அணிதல் இன்றியமையாததெனவும் இதற்குச் சிலம்பணி நோன்பெனக்கொள்ளலாமெனவும் கூற இடமுண்டு. ஆனால் தலைவி (இளமையில்) தன் வீட்டு நகைகளுடன் தன் வீட்டுக்கு வருதல் தலைவற்கிழுக்காமாதலின் அவள் சிலம்பை நீக்கிவிடவேண்டுவது முதற்காரியமாதலால் இதற்குச் சிலம்புகழிநோன்பு எனப்பட்டது எனக் கொள்ள இடமுண்டு.

# பட்டினப்பாலைத் தலைவன் கரிகாலனே

பட்டினப்பாலைத்தலைவன் கரிகாலன் என்பது நச்சினார்க்கினியர் வழிவந்த மரபு. * ஆனால் டாக்டர் சோமசுந்தரபாரதியார் இதனைமறுத்து அவன்மகனே திருமாவளவனாகிய நூற்றலைவன் என்கிறார். 'திருமாவளவன் தெவ்வர்க்கோக்கிய வேலினும்' என்பது பட்டினப்பாலை. 'அடக்கமின்றி எப்போதும் யாவரும் கூறுப் புதியன புனையும் பெருமிதமிகுந்த நச்சினார்க்கினியர்' தன்னையன்றி வேறுதாரமில்லாமல் 'கரிகாலன்' எனப் பெயர் குறித்ததாகக் குறைகூறும் பாரதியாரே நான்கு பக்கங்கள் தாண்டி 'அவ்விளையோன் மனைவி அழும்பில்வேள் மகளென்பர் நச்சினார்க்கினியர்' என அவரையே — பயனில்லாவிடினும் — ஆதாரமாக் கொள்கிறார்.

பிறர் தமக்காதரவாய்க் கலிங்கத்துப்பரணியைக் குறிக்கிறாரெனக்கூறி அங்குப் பட்டினப்பாலை இயற்றிய புலவர்க்குப் பரிசளித்தவன் 'கரிகாலன்' எனக் குறிக்க வில்லையென்கிறார். உலா முதலிய பிரபந்தங்களில் இவ்வாறு அரசு மரபு, பெருமை கூறுமிடங்களில் பெரிதும் பெயர் குறித்தலில்லை; மற்றும் இத்தகைய நூல்களை வரலாறுபோல நூற்றுக்குநூறு 'வரிசையறிய' உதவு

---

பழந்தமிழ்நாடு — S. S. பாரதி.

மெனக் கொள்ளற்கில்லை. இளங்கோவும் கரிகாலன் பாலைக்குப் பரிசளித்த குறிப்பெதுவும் கூறவில்லையென்பது ஒரு கேள்வி. நூலுக்கப்பாலன்றி (உரையில்) நூலினுள் இளங்கோவுங்கூட 'கரிகாலன்' 'சோழ அரசன்' எனக் குறித்திலர்; அவன் வரலாறுரைக்க வந்ததன்று சிலப்பதிகாரம்.

கரிகாலனைப்பாடும் பொருநராற்றுப்படையில் அவன் பெயர், தந்தை பெயர் குறித்திருக்க, 'பாலை'யில் குறிக்கப் படவில்லையென்பதும் கேள்வி. பொதுவாக இவை கதையோ வரலாறோ கூறவந்த நூல்களல்ல. பல கருத்துக்களையடக்கிய தனிப்பாடல்கள். இவற்றுள் அரசன்பெருமை ஓரிரண்டோ பலவோ இருக்கலாம்; அதற்காக எல்லாவற்றையும் எதிர்பார்க்கவியலாது. கரிகாலனைப்பற்றிய புறநானூற்றுப்பகுதி ஒவ்வொன்றி னும் அவன் பெயர் குறிப்பில்லை (புறம் 7; 65). புறம் 7-ல் 'வளவ' என்ற குறிப்பேயுள்ளது. 65-ல் இவன் எதிரி சேரலாதன்பெயரே இல்லை. இத்தகையநிலை புறப் பாடல்களில் எண்ணற்றன, பிறர்குறித்த அடிக்குறிப் பாலேயே அறியமுடியும்.

பட்டினப்பாலை-ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனாரே கரிகாலன்பேரன் அல்லது பின்னவனை — தொண்டைமான் இளந்திரையன் — பெரும்பாணாற்றுப் படையிற்பாடுவதால் இவர் கரிகாலற்குப் பிற்பட்டவர் என்கிறார்பாரதியார். பாட்டன்காலத்தே பேரனும் எள்ளுப்பேரனும் கொள்ளுப்பேரனும் இருத்தலும் சிறத்தலுமுண்டு, இருவரையும் சிறந்தமைகண்டு இறும்பூ தெய்திப் பாடலாகாதென்பதில்லை!

பாரதியாருக்குப் பேராதரவாவது பொருநராற்றுப் படை பட்டினப்பாலை இரண்டிலும் 'தாயமெய்தல், போர் வெற்றி' ஆகிய இரண்டிடங்கள்பற்றிய குறிப்புக்களே.

கரிகால் வளவ! என ஆற்றுப்படையில் வருதலால் அதுவே அவற்குரிய நூலெனவும் 'திருமாவளவன்' எனக் குறித்தலால் 'பாலைத்'தலைவன்—கரிகாலன் என இல்லாமையால்—வேறேயெனவும் வாதிக்கிறார் பேராசிரியர். முன்பு கூறியபடி புறப்பாட்டில் 'வளவ' எனவே குறிக்கப் படலால் அப்பாடல் கரிகாலற்காகாது எனலாமா? அரசர்க்கு அளவற்ற பேர்கள் வழங்கப்படும்; அஃதோர் ஆதாரமாய்விடாது. ஆற்றுப்படைக்குறிப்புக்கள் இல்லாமையால் பட்டினப்பாலை ஒரேதலைவனதன்று எனில் பாலைக்குறிப்பும் ஆற்றுப்படையில்இல்லையே! இரண்டும் ஒன்றற்கொன்று துணையயன்றி, முரண் எனப்பாரதியார் கூறுவது பொருந்தாதாம். இரண்டும் தாயம், போர்பற்றிய ஒரேகுறிப்பினையே விவரிக்கவும் விளக்கவும் காண்டற்கு ஆதாரம் பெரிதுள்ளது.

வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ணார் கண்ணிக் கரிகால்வளவன்—என்ற

ஆற்றுப்படைக்குறிக்கும் வெண்ணிப்போர் புறம் அகம் முதலாம் எல்லா நூலுள்ளும் பறைசாற்றப்பட 'பாலையில் மட்டும்' அஃது ஆளப்படவில்லையெனப் பகர்கிறார் பேராசிரியர். மிகத்திறமையுடன் பாலைக்குறிப்பினைத் தமதுகட்டுரையில் குறிக்காதுவிட்டுவிடுகிறார். 'வெண்ணிப் பறந்தலை மிகப் புகழுலகமெய்தி'க் கோனை வென்றானெனவே புறம் பேசுகிறது. அங்கு 'ஒன்பது குடையும் நண்பகலொழித்த'வரலாறு அகமொன்றிலேயே அகப்படுகிறது. ஆற்றுப்படையில் சேரனுடன் வேம்பு மலைந்த தென்னவனைவென்ற குறிப்பொன்றே சிறப்படைகிறது. 'வெண்ணி' என்ற பெயரைக் குறிக்காமையால் 'பாலை' ஆதாரமற்றதெனில், குடை என்பது யாருடைய வென்றமையால் புறமும், அகமும், ஆற்றுப்படையும் ஆதாரமற்றவெனக் கூறிவிடலாமே!

அவ்வொன்பதரசரும் யாவரென அறைகின்றது பட்டினப்பாலை. வெண்ணிப்பறந்தலை எனக்கூறுவிடி லென்ன? பட்டினப்பாலை 274—285 வரிகள் இதற்கு ஏற்ற சான்ரும். 'பல்லொளியர் பணிபொடுங்க, அருவாளர் தொழில்கேட்ப, வடவர் வாடக் குடவர் கூம்ப, தென்னவன் திறல்கெட, புன்பொதுவர் வழிபொன்ற இருங்கோவேண் மருங்கு சாய, பிறங்குநிலைமாடத் துறந்தைபோக்கி' என்ற தொடர்கள் ஒளியர், அருவாளர், வடவர், குடவர், தென்னவன், பொதுவர், இருங்கோவேள், உறந்தையர் என எண்குடைகளை வளவன் வென்றமையைத் தெளிவாக்குகிறது. அத்துடன் புகார்க் குடையையும் சேர்க்க ஒன்பதாகும். குடவர், சேரரையும் தென்னவர் பாண்டியரையும் குறிப்பதாகாவா? இதனை விட ஆதாரம் என்ன வேண்டும்? புறநானூறு, ஆற்றுப் படை, பாலை மூன்று நூலுள்ளும் வளவனின் போர்க் குறிப்பும், வீரமும் ஒரே மாதிரியாகவே ஒருவற்குரித் தென்னுமாறே உள்ளன.

இருங்கோவேளை எதிர்த்ததைத்தவிர வேறு குறிப் பில்லையென்பது வீண்வாதமாகும். புறநானூறுபோன்ற நூல்களில் ஒருவனைப்பற்றிய எல்லாப்பாடல்களையும் சேர்த்தே ஓரளவு வரலாற்றினைத் தொகுக்கவோ முறைப் படுத்தவோ முடியும்.

சிலப்பதிகாரத்தைப் பாரதியார் ஆதாரமாக் கொள்கிருர். அங்கு புகாரின் அங்காடிகள், துறைமுக வினைகள் ஆயவை எவ்வளவு அழகாகவும்விரிவாகவும் நாடுகாண்காதையில் கூறப்படுமோ அவ்வளவும் பாலையில் அகலமாகவுரைக்கப்படுகின்றன.

“மலரணி வாயிற் பலர் தொழு கொடியும்
காய்சினத்த கதிர்செல்வன் தேர்பூண்டமாப்போல
உல்கு செயக் குறைபடாது, அளந்தறியாப்பல பண்டம்,
வரம்பறியாமை வந்தீண்டி—இப்பாலைப்பாடற் குறிப்புக்கள் சிலம்பொடுசெறிந்து நிற்பன. கரிகாலன் என்கையில் யாவர்கருத்தினும்படுவது அவனது புகாரும், கலங்கரைவிளக்கும் கடல் வாணிபமுமே. இக்குறிப்பு ஆற்றுப்படையில் இல்லாமையால் அது கரிகாலற்குரித் தன்றெனலாமா?

‘தாய் வயிற்றிருந்து தாயமெய்தியது’ மற்ருெரு சிறந்தஆதாரம் பாரதியார்க்கு. பட்டினப்பாலை இச் செய்தியைக் கூறவில்லையென்பது பொருந்தவில்லை.

கொடுவரிக்குருளை, உருகெழு தாயமூழின் எய்தி என்பதிலுள்ள குருளை என்ற உவமையே அவன் இளையவன் எனவும் உருகெழுதாயத்தை ஊழின் எய்தின னெனவும் புலப்படுகிறது; இன்றேல் உவமையில் குருளையைக் குறிக்க வேண்டுவதில்லை. மற்றும் ஆற்றுப் படையிலும் வளவன், ‘ஆளி நன்மா னணங்குடைக் குருளை’ யென உவமிக்கப்படுகிருன். இரண்டுவமையும் எவ்வளவுபொருந்துகின்றவென இதனற்றெளிவாம். ஆற்றுப்படையில் குறிப்பாகக் கூறப்பட்டதையே பாலை விவரிக்கிறதன்றி அங்கு வேறுபாடோ முரண்பாடோ இருப்பதாகத்தோன்றவில்லை.

தாய் வயிற்றிருந்து எப்படி தாயமெய்தினனென ஆற்றுப்படை விரிக்காததை பாலை விவரிக்கிறது. இளையன்சிறுவனென எதிரிகள் தாயாதிகள் இவன் உரிமையைக் கவர்ந்துகொண்டு இவனையும் சிறையிட் டிருக்கவேண்டும். அதினின்று தப்பித் தாயமுற்ற முறையையே பாலை பலவாக விரிக்கின்றது.

'பௌவ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்பு படர்ந்தாங்கு'—என்ற ஆற்றுப்படைக் குறிப்பிலேயே தன்னொளியை மறைத் திருந்த—சூழலை—கடலைத்தாழ்த்தி வானத்திலெழுந்த தென்ற தன்மை, அங்கு பாலையில் தன்னைச் சூழ்ந்தோர் அடைத்த சிறையைக்கடந்து அவரையும் மற்றோரையும் வென்றான் என்றதன்மையுடன் ஒத்துநிற்றலைக் காண் கிறோம். எனவே இளமையில் தாயமெய்தியதனை இரண்டுநூல்களும் புலப்படுத்தவே செய்கின்றன. இளமையில் வளவன் போரிட்டதுபற்றி ஆற்றுப்படையும் கூறுகிறது. பாலை வேறுவகையிலோர் போரும் அவன் செய்ததாக்கூறுகிறது. 'நுண்ணிதி னுணரநாடி' என்ற ஆற்றுப்படைக்குறிப்பில் நாடியது இரும்பிடர்த்தலையார் என்ற மாமனுடன் எனப்பழமொழி கூறுகிறது. கீழ்க் கணக்குள் பழமொழி பழமையுடையதே. பிறரொடு ஆய்தல், நாடுதல் எனக் குறள்நவிலும். அவ்வகையில் இரும்பிடர்த்தலையார் பெயர்வருதலை மறுக்கவேண்டுவ தில்லை. பிற்கால நூல்கள்கூறும் பெயர் வரலாற்றில், உண்மையும் மரபும் இல்லாமலில்லை.

மற்றும் பாரதியார், கரிகாலன் இமயம் வென்றவன்; நீதிநாட்டியவன்; கொடையாளி; போர்தொடுத்துப் பிறரை பாழ்படுத்தறியாப்பான்மையன் எனவெல்லாம் கூறி, திருமாவளவற்கவையில்லையென்பார். 'வடவர் வாட' என்ற பாலைத்தொடர் இமயம்வென்றதையே குறிக்கும். 'நெடுநுகத்துப்பகல்போல நடுவுநின்ற நன் னெஞ்சினோர்' திருமாவளவன் ஆட்சியில் வாழ்வோர்; இது நீதிக்கடையாளமன்றோ? பாலையில் கூறப் பட்டதுகொண்டு அவன் எப்போதும் போரிட்டுக் கொண்டேயிருந்தான் என முடிவுகட்டலாகாது; புற நானூற்றில் கரிகாலன்பற்றிய பாடல்களும் அவன்

பகைவர் நாட்டைப்படுத்தியபாட்டையே விரிவாக உரைக்கின்றன. 'அமரர்ப் பேணியும் ஆவுதியருத்தியும் பண்ணியமட்டியும் பசும்பதம்கொடுத்தும் புண்ணிய மூட்டாத்தண்ணிழல் வாழ்க்கை' யென்ற பாலையடிகள் அவனது ஈகையையும் கொடையையும் எடுத்துரைப்பன வாகாவோ?

சுடப்பட்டுயிருய்ந்த சோழன்மகன் எனப் பழமொழி கூறுகிறதாம். எனவே கரிகாலன்மகனையே இது குறிக்குமாம். கரிகாலன் சிறந்தவன், அவனைச் சோழன் மகன் எனக் குறித்தலாகாதென்பது ஒரு மறுப்பு. வளி தொழில் ஆண்ட உரவோன் மருக எனவே கரிகாலனைப் புறநானூறு—64 கூறுகின்றது. இவ்வாறு கூறுதல் மரபே.

உறந்தையையும் பின்புகாரையும் சேர்த்து கரிகாலன் ஆண்டதாகப் பாரதியாரே கூறுகிறார். பகை அவன் காலத்திற்குப்பின்பாக வேண்டுமெனக் கருது கிறார். அவ்வளவே. முன்பு உறந்தையை யாண்டவன் புகாரை ஏற்படுத்திப்போகக் காரணமென்ன? தாயாதிப் பகையாலென்னலாகாதா? ஆனால் அதனை அடக்கித் தன் காலம்வரைக் கட்டியாண்டான் எனிற்பொருத்தம்; எனவே தகராறு அவன் காலத்தேயே தோன்றி யிருக்கலாம்.

எனவே நாட்டின்நிலை, வாணிபம், வெற்றி, தாயமெய் தல், பாடல்பெற்றதாம்சிறப்பு எனப் பலவகையிலும் பட்டினப்பாலைத்தலைவன் கரிகாலனேயாகலாம். அவனை விட்டு, அவன்வழிவந்த திருமாவளவன் என்போனை இத்தனைச் சிறப்பிற் காளாக்கல் ஏனோ? இப்படியொருவன் இருந்ததாகப் புறநானூற்றிலோ அகம்முதலாம் நூல் களிலோ எங்கும்ஆதாரமில்லை. இதே உருத்திரங் கண்ணனாரோ வேறுபுலவரோ இத்தனைச் சிறப்புடை

யோனைப் பாடாமல் இருந்திருக்கமுடியாது. அவை புறப் பாடல்களில் காணவேண்டுமே! புறத்தில் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனென ஒருவன் குறிக்கப் பெறுகிறான். அவன் பாண்டியன் நண்பன்; உறந்தையர்கோன்; பிற்காலத்தவன். பட்டினப்பாலை வெற்றியோ வேறுவெற்றியோ ஒன்றும் அங்கில்லை. எனவே, 'வளவ' எனவிளிக்கும் புறப்பாடல்கள் கரிகாலனையே குறிக்கின்றன. ஆதலால் திருமாவளவன் என்பதாலேயே அவன் கரிகாலனுக்கு வேறாய்விட மாட்டான். போதிய ஆதாரமன்றி புறநானூறுபோன்ற இலக்கியத்தும் குறிக்கப்படாத ஒரு வெறும் பேர்வழியைப் பட்டினப்பாலைத் தலைவனுக்குவதைவிடக் கரிகாலன் போன்ற சோழர் பேரரசனையே அதற்குத் தலைவனாக முன்னவர் (நச்சினார்க்கினியர்) ஆக்கினர், அதனை ஒப்பினர் (Dr. சாமிநாதய்யர்) என்றால் அதனில் தவறொன்றில்லை; மறுத்தற்கும் ஆதாரமொன்றுமில்லை.

---

# அகத்தியர்

அகத்தியர் பிற்காலத்தமிழ் இலக்கியங்களில் அடிக்கடி குறிக்கப்பெறுகிறுர். தொல்காப்பியர்க்குமுன் முத்தமிழ் இலக்கணங்கண்டுத் தலைசங்கப்புலவரானது முதல் இந்திரவிழாவைத்தொடங்கியது, தேவாரம் பாடியது, மருத்துவநூல் செய்ததுவரை அவர் தலைமை தாங்காத வாழ்க்கைத்துறையே தமிழ்நாட்டில் இரா தென்னலாம். பொதிகையில் அமர்ந்து தமிழ் வளர்த்தது அவர்க்களித்த மாபெருஞ்சிறப்பு.

தமிழ் வளர்ச்சிக்கும் அவருக்குமுள்ள தொடர்பினை யாராய்தல் நமது முதற்கடனுகும். இறையனுரகப் பொருளுரையில் காணப்பெறும் கதையைத்தவிர வேறு அகச்சான்றெதுவும் இன்றுகிடைக்கும் தமிழின்மிகப் பழையநூல் எதனிலும் இதற்காதாரமாய்க் கிடைக்க வில்லை. அடுத்தது நச்சினுர்க்கினியர் எழுத்ததிகார உரையிற்கூறிய கட்டுக்கதையொன்று. அகத்தியர் உண்மையில் தொல்காப்பியரின்ஆசிரியராயின் அவர் காலத்திருந்த அவர் உடன்பயின்ற மாணவராகிய பனம்பரானுர் தொல்காப்பிய சிறப்புப்பாயிரத்தில் ஏன் அதனைக் குறிப்பிடவில்லை? ஐந்திரம்நிறைந்த 'தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றி' என்றெழுதியவர் 'அகத்தியம்' நிறைந்த தொல்காப்பியனென எழுதாமல் விடக்காரணமேயில்லை. சிறப்புப்பாயிரத்தில் 'நூற் பெயர்' வழியைக் குறித்தல் இன்றியமையாததல்லவா?

அகத்தியர்க்குமாணவராகி அதன்வழி நூலாக எழுதி யிருந்தால் அவ்வளவு சிறந்ததொரு குறிப்பைக்கூறுமல் அகத்தியரின் மாணவரொருவரே விட்டுவிடக்காரண மில்லையே! மேலும் தொல்காப்பியம் ஐந்திரப்புலமைநிறை வுடன் எழுதியதென நூலின்வழியைத் தெளிவாக குறித் துள்ளாரே! அகத்தியத்தைவிட்டு இங்ஙனம் குறித் திருத்தல் இயலுமா?

மேலும் கடைச்சங்கநூல்எதனிலும் அகத்தியர் பெயரோ அவரைத் தமிழுடன்தொடர்புறுத்தியோ ஏதும் குறிப்பில்லை. சிறப்பாக பொதியமலைக்குறிப்பு வரும்போதாவது தமிழருடன் அவ்வளவுதொடர்புடை யவரது பெயர் குறிக்கப்பெறவேண்டாமா? அதே சமயத் தில் பொதிகையின் வேறு ஏதேதோ சிறப்புக்கள் கூறப் பட்டுள்ளனவே! அவ்விடத்தில் அகத்தியர்நினைவு தமிழிற்சிறந்த கபிலர்முதலியோர்க்கு வராமற்போய் விட்டதென்றால் எள்ளளவும் பொருந்துமா? அகத்தியர்பற்றி அவர்கள் அறிந்திருந்தால் குறிப்பதற்கு அளவற்றஇடம் பாடல்களில் இருக்கின்றனவே!

குறுந்தொகை 84-ல் மோசிகீரனுர் "கழறொடி ஆய் மழைதவழ் பொதியில்" எனப்பொதிகையைக் குறிக்கை யில் அதில் மழைதவழுவதையன்றி தமிழும் அகத்தியமும் தவழுவதை ஏன் குறிக்கவில்லை, குறித்திருந்தால் தவறென்றுமில்லையே!

மேலும் ஆய் வள்ளலின் பொதிகைமலைபற்றிய குறிப் புக்கள் புறநானூற்றில் கபிலர்முதலியோர் பாடிய 10 பாடல்களில் உள்ளன.

இங்கும் கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில், திஞ்சுளைப் பலவின் மாமலைக் கிழவன், மழைக்கணஞ் சேக்குமாமலை, ஆஅய் நின்றுெட் டிளம்பிடி ஒருசூல்

பத்தினும்மே என்ற குறிப்புக்களால் பொதிகை மழை வளமும் யானை வளமும் முதலியவளமுடையதென்று அறிகிருேமன்றி தமிழ்வளமுடையதெனக் காணவே காணேம். அகத்தியர்தொடர்பு அன்றிருந்ததாயின் இப்பாடல்கள் ஒன்றிலேனும் குறிப்பிடாமல் இருத்தற்கில்லை. இவ்விடங்கள் குறிக்கக்கூடாத இடங்களுமல்ல. வெறும் மலைவளத்தைக் குறிப்பனவே. மலையில் வளர்ந்ததாகக்கூறப்படும் தமிழ் வளத்தை ஏன் குறித்திருத்தல் ஆகாது?

பின், உண்மையாகக் கடைச்சங்க நூல்தானு என ஐயுறும் பரிபாடல் ஒன்றில்மட்டும் ஓரேவிடத்தில் 'பொதியின் முனிவன் புரைவரைக்கீறி' என்றதோர் குறிப்புள்ளது. அகத்தியனென்ருேர் நட்சத்திரம் என்றே பரிமேலழகர் அதற்குரை செய்கிருர். அகத்தியர் என்பவரைப்பற்றியோ அங்கும் ஒருகுறிப்புமில்லை. பிற்காலக் கதைகளைக்கொண்டே இப்பொதியின் முனிவனுக்கு விளக்கத்தை வேண்டின் கூறலாமன்றி சமகாலத்திலோ முற்காலத்திலோ செய்யப்பெற்ற நூல் ஆதாரமொன்றும் நமக்குக் கிடைக்கவில்லை.

பின் அகத்தியர் என்றெருவர் தமிழகத்தில் இருந்ததில்லையா? அவர் எப்போது அங்கு வருகிருர் என்னலாம்.

வரலாற்ருசிரியர் பலர் அகத்தியர் தென்னுட்டிற்கு வந்த "பண்பாட்டுத் தூதுக்குழுத் தலைவராகலாம்" என எழுதுகின்றனர். அப்படி ஒருக்கால் இருக்கலாம். ஆனுல் அவருக்கும் அகத்தியத்திற்கும் அது தொல்காப்பிய முதநூல் என்பதற்கும் ஏதும் தொடர்பில்லை. தமிழ் இலக்கியங்களில் அகத்தியர் முதன்முதல் நுழையுமிடமே

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பெருங்காப்பியங்களிலேயாம். இவற்றின்காலம் தொல்காப்பியத்திற்கு மிகவும் பிற்பட்ட கடைச்சங்கதிறுதிக்கும் பிற்பட்ட காலமாகும். கி. பி. 2 அல்லது 3-ம் நூற்றுண்டிற்கு முற்பட்டதேயில்லையெனலாம்.

'பலர் புகழ் மூதூர் பண்பு மேம்படீஇய
ஓங்குயர்மலயத் தருந்தவனுரைப்ப'' எனவே மணிமேகலை தொடங்குகிறது. 'வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த இளங்காற்றூதன் இசைத்தனனுகி' என்றே சிலப்பதிகார வேனிற்காதை தொடங்குகிறது. இந்நூல்களுள்ளும் அகத்தியர் தமிழோடு தொடர்புடையராக்குறிக்கப்பெறவில்லை. எனவே கலாச்சாரக் குழுத்தலைவராக பெருங்காப்பியக்காலத்தே தமிழ் நாட்டிற்குவந்த ஒருவரே அகத்தியராகலாம். அவரைப் பிற்காலத்தே, வைதிகமதம், சமணபௌத்த மதங்களைத் தாழ்த்தி செல்வாக்குற்றகாலத்தில் தமிழ்நாட்டின் அரசியல் சமூகம் சமயம் இலக்கியம் ஆகிய எத்துறைக்கும் ஒருதவிர்க்கமுடியாத் தலைவராகவும் நடுமணியாகவும் செய்து கதைகட்டத் தொடங்கிவிட்டனர். அவர் முனிவராதலால் முக்காலத்திற்கும்தலைவராகி முதற்சங்க முதற்கொண்டு தமிழகத்தில் இருந்ததாகக் கூறிவிட்டனர். புராணங்களில், சிறப்பாகச் சைவப்புராணங்களில் அவர் பெற்ற இடங்களுக்கோர் அளவேயில்லை. எனவேதான் இறையனுர்களவியலுரை அவரை அவ்வளவுமுன்னர் முதற்சங்கத்திற்கொண்டுபோய்ப் பிறக்கச்செய்தது.

தமிழ்நாட்டில் சமயவிரிவும் வளர்ச்சியும் வடதென் நாகரீகமோதலும் போராட்டமும் பெருங்காப்பிய காலத்திலேதான் காணப்படுகின்றன. எனவே அக்காலத்திலேதான் அகத்தியர் தமிழகத்திற்கு வந்திருக்கவேண்டும்.

வடவாரிய வைதிக சமயப்பண்பைப் பரப்பவோ அன்றி தலைசாய்த்துக்கொண்டிருந்த அதனை பௌத்தசமணங்கட்கெதிராக நிலைநாட்டவோ வந்தவராதல்வேண்டும். காப்பியகாலத்தும் அவர்தம் முயற்சி வெற்றிபெறவில்லை யென்பது சிலப்பதிகாரம் மணிமேகலைகளில் தெரிகின்றது. மாறிமாறி பௌத்தசமணங்கள் அக்காப்பியங்களில் செல்வாக்குப்பெறுகின்றன. எனவே அவர் மதுரையருகே (பொதிகையில்) தங்கிச் சைவம், பாண்டியர் ஆகியோர் நல்லுறவுடன் நிலைத்திருக்கவேண்டும். எனவேதான் அவர் பாண்டியன் வளர்த்த தமிழ்த்தொடர்புடையராயும். சைவத்தொடர்புடையராயும் கூறப்பட்டு திருவிளையாடல் முதலிய புராணங்களில் சிறப்பிடம் பெறுகின்றார்.

எனவே அகத்தியர்க்கும் அகத்தியத்திற்கும் தொல்காப்பியர்க்கும் முதற்சங்கத்திற்கும் ஏதும் தொடர்பில்லை. கடைச்சங்கத்திற்குக்கூட அவர் தொடர்புடையரல்லர்.

பெருங்காப்பியக் காலத்திலேயே அவர் தமிழ்நாட்டில் அடிவைத்திருக்கவேண்டும்.

---

# இலக்கியகாலம் II.


| | | | |
|---|---|---|---|
| முத்தொள்ளாயிரம் | ... | ... | 126 |
| தஞ்சைவாணன் கோவை | ... | ... | 129 |
| புகழேந்தி | ... | ... | 132 |
| வில்லிபாரதம் | ... | ... | 134 |
| உரையாசிரியர் | ... | ... | 136 |
| களவியல் | ... | ... | 138 |
| பரிபாடல், கலித்தொகை | ... | ... | 139 |

# முத்தொள்ளாயிரம்

இந்நூல் கடைச்சங்கப் பதினெண்கணக்கு நூற் காலத்ததெனவே ஆராய்ச்சியாளர் பலரும் கருதுவர். ஆனல் அவருள் சிலர் இதனை கி. பி. ஆரும் நூற்ருண் டிற்குக்கொண்டு செல்கின்றனர் எனது கருத்து இன்னும் 100, 150 ஆண்டுகள் முந்தியாகலாம். முத்தொள்ளாயிரக் காலம் என்பதே. அதாவது கி. பி. 4–5வது நூற்ருண்டாம்.

இதற்குரிய ஆதாரங்களை ஏற்பதில் யான் பெரிதும் வேறுபட வேண்டியுள்ளேன். கால ஆராய்ச்சிக்கு நூல் களிலுள்ள வரிகளின் ஓப்புமையை ஆதாரமாகக்கொள் வதைவிட அங்கு வரலாற்றுக் குறிப்புக்கள் இருக்குமேல் அவற்றைக்கொண்டு ஆய்வதே சீரிதாம். இவ்வகையில் மூவேந்தரின் தலைநகரங்களும் குறிக்கப்படுகின்றன.

கோக்கோதை நாடு, கோக்கிள்ளி நாடு, முசிரியார் கோமான்,–6; புகாஅர்ப்பெருமானுர்–59; பெருந்தண் ணு றந்தையார் கோ–13; மாந்தையார் மாக்கடுங்கோ–105. இங்கு கோதை கிள்ளி என்ற அரசப் பெயர்களும், உறந்தை, முசிறி என்ற தலைநகர்ப் பெயர்களும் கடைச் சங்கப் பெயர்களேயெனத் தெளியலாம். கி.பி. ஆரும்நூற் ருண்டிற்குப்பிற்பட்ட சேர சோழர்க்கு இப்பெயர்கள் இல்லையென்பதனை வரலாறுணர்த்தும். எனவே இந்நூல் கி. பி. 6-ம் நூற்ருண்டிற்கு முந்தியெனக்கொண்டு ஆயத் தொடங்கலாம். கி. பி. 3-ம் நூற்ருண்டிலேயே உறையூர் சோழத் தலைநகராம் நிலையை இழந்துவிட்டது. களப்பிரர்

காலத்தே சோழர் எங்கு வசித்திருக்கக்கூடும்—பழை யாறையிலா—எனவெல்லாம் இன்னும் ஐயப்பாடுள்ளது (பண்டாரத்தார் சோழர்-I பகுதி–சோழர் நிலை). எனவே கி. பி. 3–5க்கு இடைப்பட்ட நூற்றுண்டே இந்நூற் காலம் ஆகவேண்டும். இது வெண்பா யாப்பினுலான தாலும், வடசொற்கள் பலவாகக் கலந்ததாயிருப்பதாலும் மூவேந்தரையும் ஒப்பப்புகழ்வதாதலாலும் (கி. பி. 6-ம் நூற்றுண்டிற்குப் பின் சேரர் அவ்வளவு புகழ்பெறவில்லை) இதனைப் பதினெண்கணக்குக் காலமாகவே கொள்ளலாம். கடைச்சங்க காலமெனப்படும் கி. பி. 250க்குட்பட்ட எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களுள் வெண்பா யாப்பில்லை. ஏழாம் நூற்றுண்டில் விருத்தப்பா தொடங்கி விடுகிறது.

தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் பேராசிரியர் 'பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத் துள்ளும் ஆறடியினேருமற் செய்யுள் செய்தார் பிற சான் ருரும்' எனவுரைத்த குறிப்பைக்கொண்டு முத்தொள்ளா யிரம் கீழ்க்கணக்குகட்குப் பிற்பட்டதென்பர் அறிஞர். அப்படிக்கொள்ளாமல் அக்காலத்தே கீழ்க்கணக்கைத் தவிர்த்த வேறுநூல், ஆறடியினேருமல் இயன்றது முத் தொள்ளாயிரம் எனப் பேராசிரியர் கூறினுரென்றே இதற்குப் பொருள் கொள்ளலாம்.

இனி இந்நூற்காலத்திற்கு ஏற்ற அகச்சான்று இந் நூலின் 21-ம் பாடலெனலாம்.

> கச்சி யொருகான் மிதியா வொருகாலால்
> தத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப்–பிற்றையும்
> ஈழமொருகான் மிதியா வருமேநம்
> கோழியர்கோன் கிள்ளி களிறு.

இப்பாடலில் சோழன் கச்சியையும் ஈழத்தையும் வென்றவனுகக் குறிக்கப்படுகிருன். இந்த கி. பி. 3—6-ம்

நூற்றுண்டுகளில் இருமுறை காஞ்சீபுரம் பல்லவர்க்குட் பட்டதாகப் பல்லவர் வரலாறுரைக்கும். ஆறும் நூற் றுண்டின்பின் தெளிவாகக் கச்சி பல்லவர்க்காகிவிடுகிறது.

கி. பி. 6-ம் நூற்றுண்டிற்குள் குமாரவிஷ்ணுவும் (436—460) சிம்மவிஷ்ணுவும் (575—615) காஞ்சியைக் கைப்பற்றியுள்ளனர். அவருள் சிம்மவிஷ்ணு சோழரைத் தோற்கடித்துக் காவிரிவரை வென்றதாக வரலா றுரைக்கும். (பல்லவர் Dr. Rajamanickam. சிம்மவிஷ்ணு). எனவே அப்போது சோழன் காஞ்சியை வென்றுனென்பது பொருந்தாது. மற்ற குமாரவிஷ்ணு காலத்தே காஞ்சி பல்லவரிடமிருந்ததெனப் பெரிதும் நம்புவர் வரலாற் றறிஞர். எனவே அக்காலத்தும் அங்குச் சோழவாட்சி இல்லையாம். —எனவே 436—250 கி. பி. க்குட்பட்ட காலத்தேயே அதாவது 4, 5வது நூற்றுண்டுகளிலேயே முத்தொள்ளாயிரம் இயற்றப்பட்டிருக்கவேண்டும்.

# தஞ்சைவாணன் கோவை

இந்நூலையியற்றிய பொய்யாமொழிப் புலவர் காலம் 9, 12, 16 கி. பி. நூற்றாண்டுகட்குள் முத்திறக்கருத்துக்கள் உள்ளன. அவற்றுள் இடைப்பட்ட கருத்தையுடன்பட்டு பண்டாரத்தாரவர்கள் 13-ம் நூற்றாண்டென்கிறார்கள். அருணகிரியார், தம்பாடலில் பொய்யாமொழி முருகனை 'முட்டை'யெனப் பேரிட்டுப் பாடியதனைக் குறித்தலால் (முரட்டுப் புலவனை முட்டைப் பெயர் செப்பிக் கவிபெறு பெருமாளே) அவரது காலமாய 15-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டாகவேண்டுமெனவும் வாணர்கள் 13-ம் நூற்றாண்டில் பாண்டிநாடு சென்றனராகலின் முதல் சடையவர்மன் சுந்தரன், முதல் மாறவர்மன் குலசேகரன் ஆகிய பாண்டியர் காலமாகலாமெனவும் கருதுகிறார்கள்.

எனது கருத்து 8-ம் நூற்றாண்டென்பதாம். அதுவும் ஒரு குறிப்பிட்ட பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையன் காலமென்பதாம்.

பொய்யாமொழிபற்றிய தனிப் பாடல்களைத் தள்ளி விடமுடியாது. தமிழ்ச் சங்கத்தை மீண்டும் தொடங்க முயன்றார் புலவரெனவும் உங்களிலே யாரொருவனல்லனோ எனச் சங்கப் புலவர்தம் சிலைகளைக் கேட்டதாயும் 'வீறணையே சற்றேறே மித'எனப்பாடியதாயும் கூறப்படலால் இது வச்சிரநந்தியின் கி. பி. 5-ம் நூற்றாண்டின் சங்கம் மறைந்த பிற்பாடு செய்யப்பட்ட முயற்சியாகலாம்.

கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழெனை மணிவாசகர் கோவையிலும் கடைச்சங்க அகத்தியர் சங்கப்பலகை

பற்றிக் கல்லாடத்திலும் கிடைக்கும் குறிப்புக்கள் 9-ம் நூற்ருண்டருகிலேயேயாகலின் புலவர்க்கு சங்க நினைவு இப்போது வந்திருக்கலாமென்பது பொருத்தமே. மேலும் முருகன் புகழும் கதையும் இந்நூற்ருண்டுகளில் பரவி யுள்ளன. ஔவைக் கதையில் 'சுட்டபழம்' என முருகன் புகழ் பரவுகிறது. முட்டைப் பேர் சொல்லி முருகன் பொய்யாமொழியை மெய்யுணரவைக்கிருன். திருப்பரங்குன்றம், திருவிளையாடல் கல்லாடம் ஆகிய நூல்களுள் இக்கால நிகழ்ச்சிகளிலேயே இடம் பெறு கின்றது. அகத்தியர் 'புலவர்' என்ற வகையில் தமிழ் இலக்கியத்தே முதன்முதல் இந்நூற்ருண்டிலேயே (கல்லாடம்) பரவப்பெறுகிருர். பொய்யாமொழி தனிப் பாடலில் அகத்தியர் குறிக்கப்படுகிருர்.

மற்றும் வரலாற்றைப் பொறுத்தவரை வாணர் குறிப்பினை 8-ம் நூற்ருண்டிற்காக்கலாம். வாணர்கள் தொண்டைமண்டலத்தின் தெற்குப் பகுதியைப் பல்லவர்க்குப் பிரதிநிதிகளாக ஆண்டுள்ளனர். முதற் பராந்தகன் காலத்தே தஞ்சாவூர்-புள்ளமங்கைக் கோவிலுக்கு நிவந்தமளித்துள்ளான். (சோழர்—பராந்தகன் I.—பண்டாரத்தார்). இவர்கள் 7-ம் நூற் ருண்டில் பாண்டியராட்சி வலுத்து வடக்கே செல்வாக்குப் பெற தொடங்குகையில் அவர்களுடன் சேர்ந்து சோழரை யும் எதிர்க்கும் மனப்பாங்கையுற்றிருத்தல் வேண்டும். தஞ்சையில் சோழர் ஆட்சி விஜயாலயன் காலத்தேயே (846 கி. பி.) 9-ம் நூற்ருண்டிலேயே தொடங்குகிறது. அதுவரைச் சோழர் தலைநகர் இன்னதெனஅறியமுடியாத அளவு வலிகுன்றியே உள்ளனர். இக்காலமே தஞ்சை வாணன் கோவைக்குப் பொருந்துகின்றது. பாண்டிக் கோவை முதலாம் சிறந்த கோவை இலக்கியங்கள் இப்போதே தோன்றுகின்றன. திருக்கோவையும் இதற்கண்மைத்தேயாம்.

பாண்டியன் கண் எனவும் அவனது கயற்கொடியைத் திசைதோறும் வைத்தவன் எனவும் கூறலால் பாண்டிய ஆட்சி பரவத் தொடங்கிய காலமாகவே இதனைக்கொள்ள வேண்டும். வாணன் மாறைக் காவலன் என்பதால் 'நேராக தஞ்சை நகருக்கும் இக்காலத்திற்கும்' உறவு காணவேண்டாமே எனத் தோன்றலாம், தஞ்சைவாணன் கோவையில் தஞ்சை நகருக்குள் வாணன் ஆட்சி அடிக்கடி பேசப்படுகிறது. தஞ்சைக் காவலன் வாணன்–13; என்றே தெளிவாகக் குறிக்கப்படுகிறது. 13-ம் நூற்றாண்டில் பாண்டியக்கொடியைத் திசைதொறும் வைத்துப்பரவும் நிலையுமில்லை; சோழர் தாழ்ந்து மறையும் நிலையுற்றாலும் தஞ்சைப்பகுதியைப் பாண்டியர்க்கு இழந்துவிட்டதாகத் தெரியவில்லை. யாரோவொரு சோழன் இக்காலத்தே இருக்கிறான். மேலும் தஞ்சைமுதல் பாண்டியநாட்டின் தென்பகுதிவரையும் வாணனே ஆள்வதுபோலக் குறிப்புள்ளதன்றிப் பாண்டியனுக்கு அவ்வளவு மேன்மை கூறப்படவில்லை கோவை நூலில். படைத்தலைவன் ஒருவன் இவ்வளவு புகழ்பெறும் நிலையில் 13-ம் நூற்றாண்டில் பாண்டியர் மங்கியில்லை. 7—8-ம் நூற்றாண்டுகளில் அப்போதுதான் விழிக்கிறார்களாதலால் இந்நிலை பொருந்தலாம்.

எனவே தஞ்சையைச் சோழர் 9-ம் நூற்றாண்டில் பற்றுமுன் 7—8-ம் நூற்றாண்டுகளிலேயே வாணன் வாழ்ந்திருக்கவேண்டும். பாண்டியரெல்லாம் சைவர். நெடுஞ்சடையன் பராந்தகனொருவனே வைணவன். கோவை நூல் வைணவச் சார்பு மிகுந்ததாகக் காணப்படுகிறது. மாலனையான் தஞ்சை, திருமால்போல் காக்கின்றவன் என்றெல்லாம் ஒரு சைவ அரசனின்முன் பாடலாகுமா என நோக்கவேண்டும். சைவத்தைவிடவோ, வைணவத்தை வலியப்புகுத்தவோ வேண்டாமல்லவா? எனவேதான் இப்புலவரை பராந்தகன் நெடுஞ்சடையன் காலத்தவராக எண்ணவேண்டியுள்ளது.

---

# புகழேந்தி

நளவெண்பாவின் காலத்தில் மிகுந்த கருத்து வேறுபாடு இல்லையேனும் ஒரு நூற்றாண்டுக்குள் உறுதியாக வேறுபடுவோர் அறிஞர் பலராவர். புகழேந்தியும் ஒட்டக்கூத்தரும் ஒரே காலத்தவர் என்ற கர்ண பரம்பரை பலர்க்குப் பிடிக்கவில்லை. எனவே 12—13ம் நூற்றாண்டு கட்கிடையில் புகழேந்தி காலம் ஊசலாடுகின்றது.

புகழேந்தி ஈழநாடு சென்று அங்கிருந்த 'ஆரிய சக்ரவர்த்தி' என்பானைப் பாடிப் பரிசில் பெற்றதாகக் குறிப்புள்ளது. இவ்வாரிய சக்ரவர்த்தி கி. பி. 13ம் நூற்றாண்டில் முதல் மாறவர்மன் குலசேகரனிடம் சிறந்த படைத்தலைவனாகி ஈழத்தை வென்றவனென்றும் அவன் ஈழத்தில் இருந்தபோது அவனிடம் புலவர் பரிசு பெற்றாரென்றும் எனவே அதுகொண்டு புகழேந்தி 13ம் நூற்றாண்டென்றும் அறிஞர் முடிவு காண்கின்றனர். சிங்கள அரசர்கள் ஆரியர்கள். ஆரியப் பண்புடையர். பாண்டியனுக்கும் புலவர்க்கும் பிணக்கிருந்ததாக தமிழ் நாவலர் சரிதை குறிக்கிறது. எனவே அவர் வீம்புடன் ஈழம் சென்று வேறொரு எதிரியிடம் பரிசில் பெறுதலே பொருத்தம். தன்னரசிற்குப் பிடிக்காத புலவர்க்கு அவன் படைத்தலைவனே அதுவும் ஈழத்தில் வரவழைத்துப் பொன்னளித்தான் என்பதும் அத்துணைப் பொருத்தமில்லை. ஈழப்பரிசிலைக் கண்ட பாண்டியன் பின்னர் பரிசளிக்கிறான். ஈழப்பரிசில் தன் படைத்தலைவனே அளித்ததாயின் மீண்டும் தான் பரிசளிக்கவேண்டுவதில்லை.

எதிரி அரசன் அளித்தது கண்டே பாண்டியனும் வீறுப்புடன் தானும் பின்பு அளித்திருக்கிருன். நாவலர் சரிதைப் பாடல்கள் இவ்வரலாற்றை நன்கு குறிக்கின்றன.

ஒட்டக்கூத்தர், இரட்டையர் காலத்திற்கு நாவலர் சரிதை முழுவதும் உண்மையான ஆதரவாகின்றது. புகழேந்தி காலத்திற்கும் அதே வகையில் அதனை ஏற்றுக் கொள்ளலாம். பரம்பரைக் கதையை அதுவும் ஒரே நூற்றுண்டுக்கிடையில் வேறுபாடிருக்குமானுல் அக் கதையை வீணே மறுக்கவேண்டுவதில்லை.

'தூபம் கமழும் பைங்கோதையன் விக்ரமன்'
'மானேர் அபயன் இரவி குலோத்துங்கன்
வாசல் வந்தால்' —என்ற அடிகள்

நாவலர் சரிதையில் வருகின்றன. எனவே முதல் குலோத்துங்கன் விக்ரமன் ஆய இருவர் காலத்தும் புகழேந்தி வாழ்ந்திருக்கலாம். கி. பி. 1070–1136. கூத்தர் 12-ம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து அந்நூற்றுண்டின் பிற்பகுதிவரை இரண்டாம் இராசராசன் காலம்வரை வாழ்ந்திருக்கலாம். 'இன்னும் கலிங்கத்தில் வேந்தருண்டென்றே' என்ற கூத்தரின் நாவலர் சரிதைக் குறிப்பு கலிங்கப்போருக்குப் பின்பே ஏற்பட்டதால், கலிங்கப்போர் 12-ம் நூற்றுண்டுத் தொடக்கமாம்.

எனவே இருவரும் ஒரு காலத்தவர் என்ற குறிப்பு (12-ம் நூற்றுண்டின் இடைப்பகுதி) பொருந்துவதாகவே யுள்ளது.

# வில்லி பாரதம்

வரபதி ஆட்கொண்டான் என்ற கொங்கர் கோமானே பாரதத்தைத் தமிழில் பாடும்படி வில்லியைக் கேட்டுக் கொண்டான். இவ்வரசனை இரட்டைப்புலவரும் பாடியுள்ளனர். இரட்டையரும் வில்லியும் ஒரு காலத்தவர் என்பது உலகறிந்த செய்தியாகும். இரட்டையர்கள் 'ஏகாம்பரச் சம்பு' என்பவனால் பாராட்டப்பெற்றோரெனவும் அச்சம்பு என்பான் இவர்தம் ஏகாம்பர நாதருலாவில் 'வடித்தசுடர் வேற்சம்பன்வாழ் மல்லி நாதன்' எனப் புகழப்படுகிறான். பல்லவப் பிரிவினருள் மண்கொண்ட சம்புராயன் அவன் மகன் இராச நாராயண சம்புராயன் இருவரும் மல்லிநாதன் என்ற பட்டமுடையோராகக் கல்வெட்டுக் குறிப்புள்ளன. அவருள் வென்று மண்கொண்ட சம்புராயன் காலமாகிய 1321—39தான் இரட்டையர் காலம், எனவே வில்லியும் இந்த 14-ம் நூற்றாண்டின் முற்பகுதியினரே என்பது அறிஞர் கருத்து.

இனி, அருணகிரி 15-ம் நூற்றாண்டின் முற்பகுதியினரென்பது ஆராய்ச்சி முடிபு. அருணகிரியும் வில்லியும் ஒரு காலத்தவர், இருவரும் சொற்போர் நிகழ்த்தியவர் என்பது பரம்பரைச் செய்தி. இக்கருத்தினையும் ஆராய்ச்சி வல்லுநர் அகமுவந்து ஏற்கின்றனர். ஆனால் மேற்கண்டபடி 14-ம் நூற்றாண்டின் முற்பகுதி வில்லிக்கானால் அருணகிரியுடன் அவர் காலம் ஒன்றாது. பரம்பரையில் ஒன்றிய இவர்தம் காலத்தை வீணே பிரிக்கவேண்டாம்;

வேறுபாடும் பெரிதில்லை. இரட்டையர் சம்புவைக் குறித்தமையால் அவன் காலத்தேயே இறந்துவிட்டனர் என்பதில்லை. இரண்டாவது மல்லிநாதனெனப்பட்ட இராசநாராயணன் காலம் எனக்கொண்டால் இன்னும் 20 ஆண்டு இரட்டையர் காலம் பின்தள்ளலாம். எனவே அவனைக் குறித்து அவர்களே வரபதியையும் குறித்திருத்தலால் அவ்வரபதியை வில்லியும் குறித்திருத்தலால் அவ்வரபதி 14-ம் நூற்றுண்டின் பிற்பகுதியினராகலாம். இவ்வகையில் 14-ம் நூற்றுண்டின் கடைப்பகுதியையும் 15-ம் நூற்றுண்டின் முற்பகுதியையும் இணைப்பது அரிதன்று. 14-ன் கடைசியிலும் 15-ன் முற்பகுதியிலும் வாழ்ந்தார் வில்லியெனில் குறையில்லை.

எனவே பரம்பரைச் செய்தியுடன் பிணங்காமலே அருணகிரியும் வில்லியும் ஒரு காலத்தவரெனவும் வில்லி 14-ன் கடைசியிலும் 15-ன் முதலிலும் இருந்தவர் எனவும் கொள்ள இடமுண்டு. திரு மு. இராகவையங்கார் அவர்கள் தமது சாசனத் தமிழ்க்கவி சரிதத்தே இவ்விருவரும் ஒரு காலத்தவர் என்ற கொள்கையை உடன்பட்டே எழுதுகிருர். இவர் இராசநாராயணசம்பு காலத்தையே இரட்டையர் காலமெனக்கொள்கிருர்.

# உரையாசிரியர்

சேனாவரையர் காலத்தைக்கொண்டே உரையாசிரியர் காலத்தை ஒருவாறு கணிக்கவேண்டியுள்ளது. சேனாவரையர், திருநெல்வேலி — ஆற்றூர்க் கல்வெட்டால் (ஆற்றூர்ச் சேனாவரையர் தம்முன்னோரிடமிருந்து ஆசிரிய மாணவர் முறையில் பெற்ற நிலத்தைச் சிவன்கோவிற் களித்தது) அதன் காலமாய எம்மண்டலமும் கொண்டருளிய மாறவர்மன் குலசேகரனின் 1268—1311 காலத்தவர் எனக் கருதப்படுகிறார். பரிமேலழகரும் காஞ்சிக் கல்வெட்டால் 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியினரே யாகிறார்.

இதனைக்கொண்டு மற்ற உரையாசிரியர் காலத்தைக் காணவேண்டும். இளம்பூரணர் இவருள் பழமையானவர். இவர்தம் தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் யாப்பருங்கலவிருத்தி, மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை முதலிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். யாப்பருங்கலமியற்றிய அமிதசாகரர் 10-ம் நூற்றாண்டினிறுதியிலும் 11-ம் நூற்றாண்டின் முதலிலும் இருந்திருக்கலாமென திரு. சீனிவாசப்பிள்ளை எழுதுகிறார். மூத்த நாயனார் இரட்டைமணிமாலை ஆசிரியர் நம்பியாண்டாரும் 10-ம் நூற்றாண்டவர். 'திருவாசகமும் திருமூலர் வாக்கும்' எனப்பாடிய ஔவையும் 10-ம் நூற்றாண்டின் பிற்பகுதியராவர். இவரது கொன்றைவேய்ந்த செல்வனடியிணை என்றபாடலும் செய்யுளியல் உதாரணமாகியது. எனவே இளம்பூரணர் இவற்றிற்குப் பிற்பட்ட 11-ம் நூற்றாண்டவர் என்பது பொருத்தமாகின்றது. பேராசிரியர் இவர்க்கடுத்தவர் என்பதற்கு ஆதாரமாக தண்டியலங்கார

உதாரண வெண்பாவைச் செய்யுளியலில் மேற்கோள் காட்டுகிறுர். அவ்வெண்பாக்கள் அநபாயன் குலோத்துங்கன் I குறிப்புடையவாகக் கருதப்படுகின்றன. எனவே பேராசிரியர் 12-ம் நூற்றுண்டின் பிற்பகுதியின ராகலாம். சேனுவரையரை மறுக்கும் நச்சினுர்க்கினியர் 13-ன் கடைசி அல்லது 14-ம் நூற்றுண்டினராகக் கொள்வது சிறந்ததே. இனியரே பேராசிரியர் உரையைக் குறிப்பிட்டு அகத்திணையியல்லில் எழுதுகிறுர். எனவே பேராசிரியர் இனியருக்கு முற்பட்டவராவர். இவ்வகையில் இளம்பூரணர்க்கும் சேனுவரையர்க்கும் இடைப்பட்டவர். பூரணர்க்கு அடுத்தவர் பேராசிரியர் எனக்கருதுவது நேர்மையேயாம். பேராசிரியரை 13-ம் நூற்றுண்டின ராயும் கொள்ளலாம்.

அடியாரக்கு நல்லார் கலிங்கத்துப்பரணி மேற்கோள் காட்டுவதால் 12-ம் நூற்றுண்டின் பிற்பகுதியராகலா மெனக் கருதப்படுகிறுர்.

# களவியல்

களவியல் பற்றி அந்நூலிலேயே கூறப்படும் வரலாற்றில் நூலும் உரையும் ஒரே காலத்துள் எழுதப் பட்டதாயறிகிறோம். இறையனார் களவியலைக் கல்லாடம் முதன் முதல் குறிக்கிறது. கல்லாடம் 10-ம் நூற்றாண்டாகலின் அதற்கு முற்பட்டதே களவியலெனலாம். 8-ம் நூற்றாண்டுப் பாண்டிக்கோவை மேற்கோளையுடைமையால் இதனை 8-ம் நூற்றாண்டதாகக்கொள்கின்றனர்; அதில் தவறில்லை. சங்கம் உரைகேட்ட உருத்திர சன்மர் பற்றியெல்லாம் கல்லாடம், திருவிளையாடல் ஆகிய நூல்களிலேயே குறிப்புவருகின்றது. எனவே இறையனார், களவியல் உரைகண்ட நக்கீரரெல்லாம் சமயகாலத்தவரே யாவர். 11-ம் திருமுறை நக்கீரரே இதற்குரைகண்டவர். இவர் சாக்கியர், கண்ணப்பர், சண்டேசுரர் முதலிய நாயன்மார்களைத் திருமுறையிற் குறித்தலால் இரண்டாம் நக்கீரராவர்; 8-ம் நூற்றாண்டவராகலாம். சங்க நக்கீரருடன் இவ்வுரையை இணைப்பதாலேயே குழப்பமுண்டாகிறது. மூவர் பாடலுள் காணாத்திருவிளையாடல்களைக் கூறும்கல்லாடம் களவியல்—உரைபற்றிக் குறித்தலால் மூவர்க்குப் பிந்தியே இந்நூற்காலத்தைக் கொள்ள வேண்டும் பஞ்சத்திற்குப் பிறகு இந்நூல் காணப்பட்டமையின் சுந்தரர் காலத்தில் யான் குறித்த 7-ம் நூற்றாண்டின் கடைசிக்காலப் பஞ்சத்திற்கப்புறமே இது நிகழ்ந்திருக்க வேண்டும். இப்போது பாண்டிய அரசன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் 710—765 அல்லது பராந்தகன் நெடுஞ்சடையவன் 765—790 காலமாகலாம்.

# பரிபாடல், கலித்தொகை

களவியல் காலமே கலித்தொகை முருகாற்றுப்படை ஆய மூன்றின் காலமும் என எண்ணவேண்டுகிறது. இப்போது திருப்பரங்குன்றம் வைகை முதலியன புகழ் பரவி நிற்கின்றன. கோச்சடையன் ரணதீரன் (கி.பி.710) திருப்பரங்குன்றக் கோயிலை வழிபட்டுவந்ததுபற்றி வரலாறுரைக்கிறது. கல்லாடமும் திருவிளையாடலும் பரங்குன்றையும் வைகையையும் மிகவும் பாராட்டிப் பரவுகின்றன. இது முருகன், வைகை, பரங்குன்றுக் காலமெனலாம். நக்கீரர் முருகன் தொடர்பே முருகாற்றுப்படையாயது, பரிபாடல் பரங்குன்று வைகை இரண்டின் பாராட்டு நூலாகவேபடுகின்றது. அப்பாற்போனால் பாண்டிநாட்டு மாலிருஞ்சோலை. கலித்தொகையிலும் பரங்குன்றுக் குறிப்பும் வைகைக்குறிப்பும் வருகின்றன. பாண்டிநாட்டுப் புகழ் கலித்தொகையுள் மிகுதி. புலவர்கள் பாண்டி நாட்டவரே, பாண்டிநாட்டுப்பற்று நன்கு தென்படுகிறது. மற்றும் பாடல் யாப்பும், வடசொற்களும் இவற்றைக் கடைச்சங்கத்திற்குப்பின்பே தள்ளுகின்றன. பாடலில் அமையும் அகவொழுக்க மரபு கலி, பரிபாடலுள் மாறியும் முரண்பட்டும் காண்கின்றன. கைக்கிளை பெருந்திணை உதாரணங்கள் பல்குகின்றன. இன்பச் சுவையன்றி நகைச்சுவையும் இளிவரல் சுவையும் பெருகுகின்றன. அகநானூறுபோன்ற நூற்பொருளுடன் இவற்றின்

பாடற்பொருளை ஒப்பிட்டால் நன்கு புலனாகும். அகப் புறநானூறுகள், குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து வரலாற்றுக் குறிப்புக்களும் அரசர்ப் பெயரும் இவற்றுள் மறைந்தேபோயின. எனவே இவற்றைப் பிற்காலத்தன, களவியல் காலத்தன எனக்கருதுவார் கொள்கையையும் ஆராயவேண்டுவதே.

# ஆசிரியரின் பிற நூல்கள்.

**கவித்திறன் :**

பாரதியார் தலைசிறந்த தேசியக்கவி என்ற அளவில்மட்டும்தான் பெருவாரியான பொதுமக்கள் அவரைப்போற்றிப் பாராட்டுவது இயல்பு. ஆயின் அவர் அதுமட்டுமா? ஏனைய துறைகளில் அவர்தம் கவித்திறன் எவ்வளவு மாண்புடையது என்பதை இவ்வரிய ஆராய்ச்சிநூல் எடுத்துக்காட்டும். பல துறைகளில் பாய்ந்தோடும் பாரதியாரின்கவித் திறனைப் படிப்போர்கண்முன் புலப்படுத்தி வெகு கவர்ச்சிகரமாக நூலாசிரியர் எழுதியிருக்கிறார்.

— *தினமணி.*

சரியாகச் சொல்வதென்றால் பாரதியின் கவிதை நயத்தைப்பற்றிய நடுநிலைமையான விமர்சன நூலாகும். கவிஞன் இதயத்தை நன்குஉணர்ந்து அனுபவித்தஇன்பத்தை விளக்கிவிரிவாகப் பேசுகின்றார் ஆசிரியர்.

— *தமிழ் முரசு, மலேயா.*

**நல்லநாடு :**

In this book of literary essays the scholar-author dives deep into the treasures of ancient literary works and tries to explain the significance of stanzas chosen for study and their application to the modern world.

The book is interesting and scholarly.

— The Hindu.

குணம் குறைந்து சீர்கெட்டுப் பலவகைகளிலும் தாழ்மைப்பட்டுழலும் தமிழ் மக்களை ஊக்கி மீண்டும் உயர்நிலைக்கு உய்விக்க இவைபோன்ற கட்டுரைகள் எல்லையற்ற பயனளிக்கும் என்பது திண்ணம். உயர்ந்த உரைநடைஇலக்கியம் நம்நாட்டிலும் வளம்பெற்று வருகின்றதென்பதற்கு இந்நூல் சீரிய சான்றாகும்.

— *தினமணி.*

இந்நூல் மாணவர்க்குச் சிறந்த இலக்கிய விருந்தாகும்.

— *ஈழகேசரி.*

---

கோவாபரேடிவ் பிரஸ், புதுக்கோட்டை—1000.


கண்ணன்